கல்கி



KALKI 12-10-1958

30 நயா பைசா

"என் விருப்பத்திற்கேற்ற அழகு சோப்— அதன் அழகிற்கேற்ற புதிய மேலுறை!"

என்கிறார் வைஜயந்திமாலா



பி. ஆர். பிலிம்ஸாரின் "ஸாதனா" படத்தில் தோன்றும் வசீகர நட்சத்திரம் வைஜயந்தி மாலா

வனப்புமிக்க ரோஜா நிறமேனியை பளிக்குவரும் லக்ஸ் டாய்லெட் சோப்பை வாங்கிக்கொள்ளுங்கள். "எனது மேனியழகைப் பராமரிப்பது லக்ஸ் டாய்லெட் சோப்பே" என்கிறார் பேரழகி வைஜயந்திமாலா. மாசற்ற, மென்மையான மேனிப்பொலிவுக்கு தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகியுங்கள்.

தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்



சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

LTS. 580-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

கல்கி

பொருளடக்கம்

அரசியல்

அமெரிக்கா செய்த அக்கிரமம்	(தலையங்கம்) ...	...	3
மூச்சந்தி	(கார்ட்டூன்) விஜி	...	5
ரயில்வே நிர்வாகத்துக்கு ஒரு எச்சரிக்கை	...	...	5

கதைகள்

பாண்டிமாதேவி	நா. பார்த்தசாரதி	...	31
மூன்று நண்பர்கள்	வாண்டு மாமா	...	48
இரு குழந்தைகள்	ஜயலக்ஷ்மி	...	52
பொங்கிவரும் பெருநிலவு	கி. ராஜேந்திரன்	...	62
தனக்கு வந்தால்...	ரா. வீ.	...	75
முதல் வழக்கு	ர. க. நல்லபெருமாள்	...	82
மங்கோலிய மன்னன்	ருக்மிணி பார்த்தசாரதி	...	90

கட்டுரைகள்

வள்ளுவர் வாசகம்	ராஜாஜி	...	9
செங்கோலும் ஜனநாயகமும்	க. சந்தானம்	...	12
ஸ்டாக்ஹோம் மகாநாடு	பார்வதி சுப்பிரமண்யம்	...	17
பக்த ராவணு	காந்தன்	...	22
பக்தி வயல்	பௌராணிகர்	...	25
தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சி	எம். எஸ். சிவஸ்வாமி	...	59
நாட்டு வைத்தியம்	ஸ்ரீஹரி	...	79

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பின்னியின் **சில்க் ஷர்ட்** அணிந்து
மானேஜிங் டைரக்டர் போல விளங்குங்கள்

எங்களிடமிருந்து வாங்குங்கள்

வெங்கடேஷ் வஸ்திராலயா

ரீடெய்ல் ஷோ ரூம்கள்
ஹைகோர்ட் எதிரில் & 2. தம்புசெட்டி தெரு. மதராஸ்-1.

ஷோரூம் நெ. 1 இங்கு நாங்கள் பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்லில் உற்பத்தியான துணிகளை மட்டும் விற்கிறோம்.

ஷோரூம் நெ. 2 இங்கு நாங்கள் பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்லில் உற்பத்தியான துணிகளை மட்டும் விற்கிறோம்.

ஷோரூம் நெ. 3 இங்கு நாங்கள் பின்னி மில்லில் உற்பத்தியான துணிகளையும் மற்றும் இதர உயர்ந்த ரக ஜவுளிகளையும் விற்கிறோம்.





மலர் 18 இதழ் 11	தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்	விளம்பி௵ புரட்டாசி 26௳

அமெரிக்கா செய்த அக்கிரமம்

அமெரிக்காவைச் சோதனைக் குண்டுகளை நிறுத்தும்படி சொன்னபோது, 'ருஷ்யாவிடம் சொன்னால் என்ன? ருஷ்யாதான் நிறுத்தட்டுமே; ருஷ்யாவிடம் சொல்லத் தைரியம்கிடையாது' என்றெல்லாம் வாதிக்கப்பட்டது.


ருஷ்யாவிடம் சொல்லத் தைரியக் குறைவு ஒன்றுமில்லை. அமெரிக்கா கொள்கையால், பண்பாட்டினால், ஆட்சிமுறையினால் இன்னும் பலப்பல காரணங்களினால் பாரத மக்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட நாடு. அதனால் அமெரிக்காவிடம் சொல்ல இந்தியாவுக்குப் பூரண உரிமையுண்டு. அந்த உரிமைபற்றித்தான் சொல்லப்பட்டது. பிறகு ருஷ்யாவிடமும் கூறினோம். ருஷ்யா சென்ற மார்ச்சு 31-ம் தேதி அன்று ஜலஜ குண்டு சோதனைகளை ஒரு தலைப்பட்சமாக நிறுத்திவிட்டதாக அறிவித்தது. விரைவில் அமெரிக்கா தன் சோதனைகளை நிறுத்தாவிட்டால் ருஷ்யா மீண்டும் தான் நிறுத்தி வைத்துள்ள சோதனைகளைத் தொடங்கிவிடப் போவதாக அறிவித்திருந்தது! மேற்கத்திய வல்லரசுகளும் ருஷ்யாவைப் பின்பற்றிச் சோதனைகளை நிறுத்தி, உலகின் காற்றையும் நீரையும் விஷப்படுத்தும் மகா பாபத்தைத் தவிர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா அதைச் செய்யவில்லை.

மீண்டும் ருஷ்யா தன் ஜலஜ குண்டு சோதனைகளைத் தொடங்கிவிட்டது. இதற்குக் காரணம் அமெரிக்காவும் பிரிட்டனும் நிறுத்தாததுதான்.

மார்ச்சு 31-ம் தேதியிலிருந்து செப்டம்பர் 30-ம் தேதி வரை சரியாக ஆறுமாத காலம் ருஷ்யா பொறுத்துப் பார்த்தது. அமெரிக்காவும் பிரிட்டனும் நிறுத்துமோ என்று எதிர்பார்த்தது. உலகமே எதிர்பார்த்தது. ஆனால் அமெரிக்காவும் பிரிட்டனும் வேண்டுமென்றே இன்னும் கடுமையான விஷக் குண்டுகளை வெடித்து வந்தன.

ஆக, உலக நலனைக்கருதி ருஷ்யா எடுத்துக் கொண்ட ஒரு நல்ல பணியை, தர்மத்திலும், நியாயத்திலும், மதத்திலும் நம்பிக்கை கொண்டதாகக் கூறிக் கொள்ளும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் கெடுத்து விட்டன! இனி ருஷ்யாவைக் குறை சொல்வதற்கில்லை.

அமெரிக்கா செய்த இந்த அக்கிரமத்தை அமெரிக்க மக்கள் கண்டித்திருக்க வேண்டும். ஆனால் ஜனநாயகம் என்று சொல்லப்படும் நாடுகளில் மக்கள் ஆடுகளை விடக் கேவலமாக, தங்கள் அரசியல் தலைவர்கள் அழைத்துச் செல்லும் வழியில் செல்லுகிறார்கள். எதேச்சாதிகார ஆட்சியிலாவது, மக்கள் பலாத்காரத்தினால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதனால் அமுங்கிக் கிடக்கும் உணர்ச்சி என்றைக்காவது ஒருநாள் பீறிட்டு எழச் சாத்தியமுண்டு. ஆனால் இன்று அமெரிக்காவிலுள்ள ஜனநாயகம் மிகக் கேவலமாக இருக்கிறது. அந்த மக்கள் தாங்களே தங்கள் அரசியல் தலைவர்கள் சொற்படி



யெல்லாம் ஆடுவதற்குத் தயாராகி விட்டார்கள். எதேச்சாதிகார ஆட்சியைவிடக் கேவலமான நிலை அல்லவா இது?

இந்தியாவிலோ, நாம் அமெரிக்காவிடம் கோடிக் கணக்கில் கடன் பெற்று வருவதால், ருஷ்யா மீண்டும் சோதனைகளைத் தொடங்கும்படி அமெரிக்கா செய்த அக்கிரமத்தைக் கண்டிக்கும் உரிமையைப் பிரயோகிக்கத் தயங்க வேண்டிய நிலையில் நிற்கிறோம்.

காந்தி மகான், பரம ஏழைக்கும் இந்நாட்டில் அளவு கடந்த தைரியம், தர்மத்தின் அடிப்படையில் உண்டாக்கித் தந்தார். பத்து வருஷ காலத்தில் நாமும் நம் சுதந்திர ஆட்சியில் அவர் சேமித்துத் தந்த ஆத்ம பலத்தை இழந்து, அமெரிக்காவுக்குக் கடன் பட்டு உண்மையில் 'மௌனிகளாய், குருடர்களாய், செவிடர்களாய்' இருக்கிறோம். காரணம் எட்டாத பொருளுக்கு இரவல் ஏணி போட்டதேதான்.

இப்படி உலகம் முழுதும், கம்யூனிஸ ஆட்சியானாலும் சரி, ஜனநாயக ஆட்சியானாலும் சரி, எங்கும் அதர்மத்தையும் அட்டூழியத்தையும் கண்டு சீறி எழ வேண்டிய மனிதப் பண்பு இழந்து கேவலமாய் மக்கள் வாழ்ந்து வருவது மிகப் பரிதாபம். இந்நிலையில் அங்கொருவர் இங்கொருவர் உண்மையை விடாது எடுத்துச் சொல்லிவருவது சற்று நம்பிக்கை அளிக்கிறது.

மீண்டும் பிரிட்டிஷ் விஞ்ஞான நிபுணர் பெட்ராண்டு ரஸ்ஸல் எச்சரிக்கை செய்திருக்கிறார். இன்னும் ஐம்பதாண்டுகள் இப்படியே விஷகுண்டு சோதனைகள் நடந்து கொண்டு போனால் இந்த நூற்றாண்டு முடிவதற்குள் மனித இனம் இருப்பதே சந்தேகம் என்கிறார். ஐம்பது சதவீதம்தான் இருப்பது சாத்தியம் என்று சொல்லுகிறார். இந்த மிகக் கடுமையான எச்சரிக்கையை அறிவில் சிறந்த விஞ்ஞானி விடுத்திருக்கிறார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் பெவன், சென்ற ஆண்டு நாம் எடுத்துக் கொண்டிருந்த நிலையை விட்டு மாறி வந்திருக்கிறார். அடுத்தாற்போல் தொழிற்கட்சியானது பதவிக்கு வந்தால் ஜலஜனுண்டுகளின் பரிபூரண ஒருதலை பகிஷ்கரிப்புக்கு முதலிடம் கொடுக்கும் என்று சொல்லி வருகிறார். தற்போது, பிரிட்டனில் ஜலஜனுண்டு பகிஷ்கரிப்புக்குப் பெரும் இயக்கம் நடைபெற்று வருகிறது. அது நாளுக்கு நாள் பலம் பெற்று ஓங்கி வருகிறது.

ஜப்பானில் இந்த மாதம் 15ம் தேதி முதல் நவம்பர் 15ம் தேதிவரையில் உலக மகா நாட்டின் தீர்மானப்படி ஜலஜனுண்டு பகிஷ்கரிப்புத் தீர்மானங்களும் பாத யாத்திரைகளும் கண்டனக் கூட்டங்களும் பெருமளவில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க பிரிட்டிஷ் வல்லரசுகள் ஜப்பான் கடற்பிரதேசத்தை ஜலஜனுண்டு மாகாளிக்குப் பெரும் பலிபீடமாகச் செய்து வருகின்றன. எல்லாவிதத்திலும் ஜப்பான் மக்கள் இந்த மாகாளிக்கு இரையாகி வருகின்றனர். அதனால்தான் ஜப்பானில் தீவிர ஆத்திரமும் இயக்கமும் காண்கிறோம்.

ரயில்வே நிர்வாகத்துக்கு ஒரு எச்சரிக்கை


சென்னை ரயில்வே ஜெனரல் மானேஜர், சென்ற வாரம் பத்திரிகை நிருபர்களை அழைத்து வைத்து, ஸைக்லோஸ்டைல் அடித்த பிரதிகளைக் கொடுத்துப் பத்திரிகையில் பிரசுரிக்கச் சொல்கிறார். அதில் அனந்த நம்பியார் கூறிவந்த குறைகளைப் பற்றி ஜெனரல் மானேஜர் ஒப்புக் கொண்டிருக்கிறாரே தவிர, பரிகாரம் செய்ய என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் போகிறார் என்று காணவில்லை. பரிகாரம் காணுவதற்கு வேண்டிய நிர்வாக இயந்திரம் ஏற்கெனவே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த இயந்திரத்தை இன்னும் சற்று வேகமாக இயக்க, முடுக்கிவிட ஏதாகிலும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, மௌனம் சாதித்தார் ஜெனரல் மானேஜர்.

இந்தக் காகிதத்தைக் கொடுப்பதற்குப் பத்திரிகை நிருபர்களை வரவழைத்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. அந்தத் தாளைப் பத்திரிகை காரியாலயத்துக்குத் தபாலில் போட்டிருந்தாலே வந்து சேர்ந்திருக்கும். அவர் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர். இதற்குமேல் அவரால் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கலாம். ஆனால், ரயில்வே மந்திரி போன்றிருப்பவர்கள் உடனே இதில் தலையிட்டு ரயில்வே ஊழியர்களின் இக் குறைகளைக் கவனிக்கலாமல்லவா?

நிர்வாகக் காலதாமதத்துக்கு ஊழியர்கள் எவ்வளவு காலந்தான் பொறுத்திருக்க முடியும்? சர்க்கார் வாய்மூடிக் கொண்டிருந்தால், பொது மக்களின் அனுதாபத்தை ரயில்வே நிர்வாகம் பெற முடியாது. சுதந்திர பாரதத்தில் சர்க்கார் நிர்வாகம் என்றால் ஊழல், காலதாமதம், பண விரயம் என்றுதான் மக்களிடம் அபிப்பிராயம் பரவிவருகிறது. ஆகவே சர்க்கார் கையாண்ட முறை சரியானதல்ல!

ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான திரு அனந்த நம்பியார் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதை 'நாம் அங்கீகரிக்கவில்லை. காந்தி மகானைப் போல் உயிரைத் தியாகம் செய்யும் இவ்வேள்வி செய்யக்கூடிய தகுதி நம் நாட்டில் இன்று யாருக்கும் இல்லை. எனினும், ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடங்கியிருந்தால் பொது மக்களுக்கு எவ்வளவு' நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கும். அதைத் தடுக்கத்தான் திரு அனந்தநம்பியார் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார். இதை நினைத்து ஆறுதலடையத் தோன்றுகிறது. உண்ணாவிரதத்தை நீடிக்க விடாமல் குறைகளைக் கவனிக்க வேண்டியது சர்க்காரின் கடமை.

முச்சந்தி!



சென்னையில் கூடும் கம்யூனிஸ்டுகள் அம்ருதசரஸ் மகாநாட்டில் தாங்கள் இனி ஜனநாயக முறையைக் கையாளப் போவதாகச் செய்த தீர்மானத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யப் போகிறார்களாம்.

பதினேழாவது தொழிலாளர் காங்கிரஸ்

கொழும்பு, அக்டோபர், 3உ.

லட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததும் இலங்கையிலுள்ள மிகப் பெரிய தொழிலாளர் யூனியனுமான ஸ்ரீ எஸ். தொண்டைமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 17-வது வருடாந்திர மகாநாடு சென்ற வாரம் நுரேலியாவில் சர்வோதய சதுக்கம் என்று பெயரிடப்பட்டிருந்த பந்தலில் வெகு கோலாகலமாக நடைபெற்றது. அவசரகால நிலைமை அமுலில் இருந்தும் கூடத் தோட்டத் தொழிலாளர் பல்லாயிரக் கணக்கில் மகாநாட்டுக்குத் திரளாக வந்திருந்தார்கள். வழக்கத்தைவிட இவ் வருடம் ஏராளமான பெண் தொழிலாளரும் சமூகம் கொடுத்து மகாநாட்டைச் சிறப்பித்தது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. நுரேலியா நகரின் சிங்கள மேயரான திரு பெல்பொல என்பவர் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

அக்கிராசனர் திரு தொண்டைமான் தமது தலைமைப் பிரசங்கத்தில் இந்திய வம்சாவளியினரின் முக்கிய பிரச்னையான பிரஜாவுரிமைப் பிரச்னையைக் குறிப்பிட்டு, அதை அரசாங்கம் வேண்டுமென்றே காலம் கடத்திக் கொண்டு போகிறதென்றும், தொழிலாளர் பொறுமையை இழந்து வருவது நாட்டுக்கு நிச்சயம் நல்லதல்லவென்றும் எச்சரித்தார். ஆயினும் தோட்டப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமான அளவுக்குப் பெருகி வருவதை முன்னிட்டு, தொழிலாளரின் பொருளாதாரப் பிரச்னைகளிலும் அவர்களது நல்வாழ்வுக்கான இதர அவசரப் பிரச்னைகளிலுமே அவர் அதிக கவனம் செலுத்திப் பேசினார். வேலை செய்பவன் அடிமை, முதலீடு செய்தவன் ஆண்டை என்ற மனோபாவம் உலகெங்கும் மாற்றமடைந்து வருகிறதென்றும், தொழிலில் உழைப்பவனும் சமபங்காளி என்ற உன்னதமான தத்துவத்துக்கு அதிக செல்வாக்கு ஏற்பட்டு வருகிறதென்றும், இந்த உண்மையைத் தோட்ட முதலாளிமார்கள் உணர்ந்து நடக்கும் பட்சத்தில் வேலைநிறுத்தங்களுக்கு இடமேயிருக்காதென்றும் ஸ்ரீ தொண்டைமான் முழங்கினார். அவரது பிரசங்கம் முதலாளி, தொழிலாளி ஆகிய இருதரப்பாருடைய உரிமையையும் கடமையையும் நாட்டின் பொதுநலனையும் தெளிவாக அறிவுறுத்துவதா யிருந்தது.

விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பிரஜாவுரிமைப் பிரச்னையே முக்கியமாக இடம் பெற்றிருந்தது. இப்பிரச்னைக்கு அரசாங்கம் விரைவில் ஒரு நல்ல முடிவு செய்யாத பட்சத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்பதைச் சில அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இவ்விஷயத்தில் இந்திய அரசாங்கம் தனது கடமையைச் செய்து உதவிபுரிய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தித் திரு பெர்னாண்டஸ் என்ற அங்கத்தினர் பேசினார்.

இந்த மகாநாட்டின் விசேஷ முக்கியத்துவத்தை முன்னிட்டு, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு வி. ஏ. கந்தையா ஆகியவர்களும் இலங்கையிலுள்ள பல வெளிதேச ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். பிரஜாவுரிமைப் பிரச்னையை மேலும் ஒத்திப் போடாமல் விரைவில் ஒரு தீர்வுகாண வேண்டுமென்றும், மொழிப் பிரச்னையைத் தேசிய அடிப்படையில் தீர்க்க ஒரு சர்வகட்சி மகாநாடு கூட்ட வேண்டுமென்றும், தோட்டத் தொழிலாளருக்குத் தினசரி ஆறு மணி நேரத்துக்கு மேல் வேலையிருக்கக் கூடாதென்றும், தோட்டலாபத்தில் பத்து சத விகிதத்தை ஒதுக்கி வைத்து, அதைத் தொழிலாளருக்கு விநியோகிக்க வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

— ரஜனி

அழகுக் கலை

சிலர் பணம் இருக்கிற இடத்தில்தான் பணம் சேரும் என்பார்கள். அதன் உண்மை நமக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் அழகு இருக்கும் இடத்தில்தான் அழகு சேருகிறது என்பதில் நமக்கு நிச்சயம்.

* * *

அழகு படுத்துவது, சிங்காரிப்பது ஒரு கலை. இது நமது நாட்டில் உன்னத நிலையில் பண்டை நெடுங்காலம் தொட்டு இருந்து வருகிறது அதிலும் பெண்கள் இந்த அழகுக் கலையில் மிகத் தீவிர கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

அடுத்த வாரம் நவராத்திரி விழா வருகிறது. ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் தங்களையும், தங்கள் தோழிகளையும் வித விதமாகச் சிங்காரித்துக் கொண்டு, அண்டை அயலில் உள்ள தங்கள் தோழிகள் இல்லங்களுக்கு அழைக்கச் செல்லும் காட்சி மனோகரமான காட்சி.

அப்படிப்பட்ட தோழிகள் இருவரை இவ் வார அட்டைச் சித்திரமாகத் தருகிறார் ஓவியர் வினு!

பூரணமாகச் சிங்காரித்துக் கொண்ட அணங்குக்கு அவள் தோழி மலர்மாலை சூட்டி மகிழ்கிறாள். அழகுக்கு அழகு செய்வதில் பெண்களுக்கு என்றுமே தனி ஆர்வம்!

ஒரு திருத்தம்

சென்ற வாரம் "பக்தி வயலி"ல் 24-ம் பக்கம் இரண்டாவது காலத்தில் 32—34 வரிகளைப் பின்வருமாறு வாசித்துக் கொள்ளக் கோருகிறோம்.

முதலில்: கடலில் மூழ்கிப் போன பூமியைப் பன்றி அவதாரம் செய்து இரண்யாக்ஷனைக் கொன்று பூமியைக் காப்பாற்றினார்.



அருள் வாக்கு

நம்முடைய மதங்களுக்கெல்லாம் மூலமாக இருப்பது வேதம். பல கிளைகளையும் வேர்களையும் கொண்ட ஒரு பெரிய மரத்துக்கு ஒப்பானது இது. அதனுடைய புஷ்பங்கள்தான் வேதாந்தம் எனப்படுவது. வேதத்தின் அந்தம் அல்லது முடிவாக இருப்பது வேதாந்தம். இந்த வேதாந்தம் என்னும் புஷ்பத்திலிருந்து கிடைக்கும் பலன் மோக்ஷம், அதாவது துக்கத்திலிருந்து விடுதலையும் நிரந்தரமான சுகத்தை அடைதலும்.

வேதாந்த நூல்களுக்கு ஞான நூல்கள் என்று பொதுப் பெயர் வழங்குகிறது. இவற்றில் அடங்கியுள்ள தத்துவங்களைத்தான் நமது ஆச்சாரியர்கள் எடுத்துரைத்தனர். மேல்நாட்டிலுள்ள அறிஞர்களும் கூட மன அமைதிக்கும் சாந்திக்கும் இந்நூல்களைத்தான் நாடி நலம் பெறுகின்றனர். இவற்றில் பொதிந்துள்ள தத்துவங்கள் காலங் கடந்த உண்மைகள்; நிரந்தரமானவை. இவற்றை நாம் எல்லோரும் படித்துப் பயனடைய வேண்டியது நமது கடமை. நமது பரமாச்சாரியாள் அருளிச் செய்துள்ள ஞான நூல்களைக் கற்றறிந்த பண்டிதர்கள் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இப்போதெல்லாம் அறிஞர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. வேதாந்த நூல்களில் சிரத்தையும் குறைந்து கொண்டிருக்கிறது. அறுபத்து நான்கு வருஷங்களுக்கு முன்னால் கூட இம்மாதிரிதான் இருந்தது. இதைக் கண்டு வருத்தமுற்ற என்னுடைய பரமகுரு இதற்குப் பரிகாரம் தேட முன் வந்தார். வேதாந்த நூல்களில் பொதிந்து கிடந்த தத்துவங்களை அறிந்துகொள்ள சாமான்ய மக்களும் உற்சாகம் காட்டினர். இந்த விஷயங்களில் ஊக்கத்தை வளர்ப்பதற்காகவே அத்வைத சபை அப்போது ஆரம்பிக்கப் பட்டு நடந்து வருகிறது.

இந்தச் சபையின் நோக்கம் இரண்டு. அத்வைத சாஸ்திரத்தில் ஆச்சாரியாள் இயற்றிய கிரந்தங்களில் பாண்டித்யமுள்ள வித்வான்களுக்கு உற்சாகமளிப்பது ஒன்று. புதிதாக இச் சாஸ்திரத்தைப் படிப்பவர்களுக்குப் பரீட்சைகள் வைத்து, அவற்றில் தேறியவர்களுக்குச் சன்மானங்கள் வழங்குவது இரண்டாவது. இதன் மூலம் இந்த நூல்களில் சிரத்தை குன்றாமலிருக்க வகை செய்யப்பட்டது. இவ்விரண்டு காரியங்களும் சென்ற அறுபத்து நான்கு வருஷங்களாகத் தொடர்ந்து நடந்து வருகின்றன.

சென்ற பத்து வருஷங்களாக இந்த அத்வைத சபையின் வருஷாந்திர ஸதஸுக்கு முன் வருஷம் வந்த வித்வான்களே அடுத்த வருஷமும் வந்து கொண்டிருக்கிறார்கள். பழைய வித்வான்களைத்தான் அடிக்கடி காண நேருகிறது. இந்த நிலைமை நல்லதல்ல. புது வித்வான்கள் வருஷந்தோறும் தோன்றிக் கொண்டே இருந்தால்தான் வித்யா சந்ததி அறுபடாமல் தொடர்ந்து செல்லும். ஒவ்வொரு வருஷமும் புதுப் புது மாணவர்கள் பரீட்சை கொடுக்க முன் வரவில்லையென்றால் நமது முதல் ஆச்சாரியார் அருளிய உயர்ந்த கிரந்தங்களெல்லாம் நூல் நிலையங்களில்தான் ஒளிகுன்றி மறைந்து கிடக்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படும்படி விடக் கூடாது. ஆச்சாரியருடைய முதல் நூல்களையும் பாஷ்யக் கிரந்தங்களையும் கற்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வாழ்நாள் முழுவதையும் அதற்காகவே செலவிடத் தயாராக இருக்கும் வித்வான்களை ஆதரித்து, ஊக்குவித்துப் பாதுகாப்பளிப்பது நமது கடமை. அடுத்த வருஷத்திலிருந்தாவது புதிய மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்து ஆதி ஆச்சாரியார் அருளிய கிரந்தங்களில் பரீட்சை கொடுக்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலும் இந்த அத்வைத சபையின் நிர்வாகத்தைக்கூட வித்வான்களே மேற்கொண்டு நடத்த வேண்டும். தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்றுதானே இப்போதெல்லாம் பேசப்படுகிறது. அதுபோல் வித்வான்களே இந்தச் சபையின் காரியங்களை விரிவுபடுத்தி எந்த நோக்கத்துடன் இது ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் குன்றாமல் பார்த்துக் கொள்ளவும், வேத வேதாந்த நூல்களில் சிரத்தை குறையாது கவனித்துக் கொள்ளவும் வேண்டும். இதை ஒவ்வொருவரும் தங்கள் கடமையாகப் பாவித்து ஒத்துழைக்க வேண்டும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ✧ காஞ்சி காமகோடி பீடம்



51

மனிதனுக்குத் துன்பங்களுக்குள் பெருந் துன்பம் மரணம். அதுவும் இன்பமே யாகும்: எப்பொழுது? ஏழைகளைக் கண்டு இரங்கும் நல்லவன் ஒருவன் அவர்களின் துன்பத்தைத் துடைக்கத் தனக்குச் சக்தியில்லையே என்று வருந்துவான். அந்த வறுமை நிலையைவிட மரணமே மேல் என்று எண்ணுவான்.

சாதலின் இன்னாதது
  இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக்
  கடை

• • •

உயிர் வாழ்க்கையின் இம்மைப் பயன் புகழ். வாழ்ந்தால் கீர்த்தி சம்பாதிக்கும் முறையில் வாழ வேண்டும். உயிர் இருக்கும் காலமும் உயிர் நீத்த பிறகும் நம்முடைய செயல்களின் பயன், மக்களிடையில் பரவும் புகழோ இகழோ, இரண்டில் ஒன்று. நற்செயல்களாயின் கீர்த்தி. தீய செயல்களாயின் அபகீர்த்தி. "சாம்பலாகவும் காற்றாகவும் உடல் தீர்ந்து போகும். நிற்பது நெஞ்சே! உன் செயல்கள் மட்டுமே. இதை ஓர்" என்பது உபநிஷத்து வாக்கியம். கர்ம விதியை உணராதவர்களும் ஒப்புக்கொள்ளாதவர்களும் உலகத்தில் அடையும் கீர்த்தியை விரும்புகிறார்கள். ஈகையைப் போல் வேறெதும் புகழ் தராது. கொடுத்து இசைபட வாழ் என்கிறார் முனிவர்.

வாழ்க்கைக்குக் கூலி புகழ். அந்தக் கூலி சம்பாதிக்காமல் வாழ வேண்டாம் என்கிறார்.

ஈதல் இசைபட
  வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை
  உயிர்க்கு

கீர்த்திக்கும் அபகீர்த்திக்கும் காரணம்: ஒன்று, நம்முடைய செயல்கள்; இரண்டாவது, நம்மைப் பற்றி எண்ணுவாருடைய மனோபாவம். புகழ்பவர்களும் இகழ்பவர்களும் நியாயமாக நம்மைப் பற்றி அறிந்து சொல்லுகிறார்களா என்பதைவிட நம்முடைய செயல்கள் நன்மதிப்புக்குத் தக்கனவா இல்லையா என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும். இது முனிவர் நமக்குச் சொல்லும் புத்திமதி.

புகழ்பட வாழாதார்
  தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது
  எவன்

மக்களின் நன்மதிப்பை அடையும் வழியில் நாம் வாழவில்லை. அது நம்முடைய பிழை என்பதை உணராமல், நம்மை மதிக்காதவர்கள் மேல் குற்றம் சொல்லுகிறோம். இது ஒரு விந்தையே! — என்கிறார் முனிவர்.

[தம் நோவார்-தம்மை நோவாமல்: எவன்-என்?]

ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமான தம் குற்றத்தைத் தாம் அறியாமல் அதற்குப் பிறர் மேல் குற்றம் சொல்லுவது மடமை. நல்ல முறையில் கடமைகளைச் செய்து வாழ்ந்தால் புகழ் தானாக வரும். தவறினால் மக்கள் இகழ்வார்கள். அது அவர்களுடைய தவறு அல்ல.

சில சமயம் பிறருடைய குற்றமாகவும் இருக்கலாம். ஆனால் அதற்காக நொந்து பயனில்லை. நம்முடைய குற்றங்களை நீப்பது நம்முடைய கடமை. அது நம்மால் ஆகவும் கூடும். பிறர் குற்றங்களை நாம் ஒழிக்கப் பார்ப்பது முடியாத காரியம்.



பஸ், லாரி, கார்
கண்காட்சிப் பொருள் இல்லை

பஸ், லாரி, கார் ஓட ஓட அவற்றின் உறுப்புகள் தேய்ந்து விடும். கண்காணிப்பால், தேய்ந்த உறுப்புகளை, செப்பனிட்டு, டி. வி. எஸ். கால விரயத்தையும், வருமானக் குறைவையும் தவிர்க்கிறது.


இறக்குமதி சிக்கலால், உறுப்புகள் கிடைப்பது அரிதாகி வருகிறது. இதனால் ஏற்படும் சங்கடங்களை 46 வருட அநுபவத் தேர்ச்சி பெற்ற டி. வி. எஸ். உழைப்பாளிகள், உரிய இயந்திர சாதனங்களின் உதவியால், பழைய பாகங்களைப் புதுப்பிப்பதன் மூலம் குறைத்து வருகிறார்கள். இதனால்தான் டி. வி. எஸ். சர்வீஸ் நிகரற்ற வகையில் திகழ்கிறது.

TVS


டி. வி. சுந்தரம் அய்யங்கார் &

மதுரை - திருச்சி - திருநெல்வேலி

சுந்தரம் மோட்டார்ஸ்




டீஸல் எண்ணெய் சிக்கனமாய் செலவாகுவதற்கு அடிப்படையாய் இருப்பது இஞ்செக்ஷன் பம்பு. இதில் கோளாறு ஏற்படின், திறமையுடன் சீர்படுத்த படத்தில் காணும் நவீன யந்திரம் மதராஸிலும் மதுரையிலும் உள்ளது.



ரேடியேட்டரில் உரிய அளவு தண்ணீர் சீராக பாயாவிட்டால், இஞ்சின் சீர்கேடடையும். பக்கத்திலுள்ள இயந்திர சாதனத்தால், இந்தச் சீர்கேடு நிவர்த்திக்கப் படுகிறது.

தண்ணீரிலுள்ள அசுத்தங்கள், ரேடியேட்டரைப் பாதிக்கும். இதனால் குழாய்கள் அடைபட்டு, தண்ணீர் ஓட்டத்தைத் தேக்கி, இன்ஜின் உஷ்ணத்தை அதிகரிக்கும். பக்கத்தில் காணப்படும் இயந்திர சாதனம் தண்ணீர் ஒழுகுதலையோ அல்லது தடைப் படுதலையோ சீர்ப்படுத்துகிறது.



சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

பிரைவேட் லிமிடெட், மதராஸ்

செங்கோலும் ஜனநாயகமும்

கு. சந்தானம்

13. மந்திரி சபைகள்

ஜனநாயகத்தில் சமூகத்தின் அதிகாரத்தை நிர்வகிக்கும் கருவி மந்திரி சபை. ஆதலால், அரசியலில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் மந்திரிஆகவேண்டுமென்று ஆசைப்படுவது சகஜமே. இதைப் பதவி வேட்டை என்று இகழுவது அறியாமை. அரசியல் மூலம் எவ்வித நலத்தை அடைய வேண்டுமாயினும் ஒன்று, நேரில் மந்திரியாக இருந்து அதைச் சாதிக்க வேண்டும், அல்லது அந்த மந்திரிகள் மூலம் அதை நிறைவேற்ற வேண்டும்.

அதிகாரத்தை வகிக்கத் தகுந்தவர்களும், தகாதவர்களும் சமமாக மந்திரி பதவிக்குப் போட்டி போடுவதே ஜனநாயகத்தின் கஷ்டம். ஏதேச்சாதிகாரத்தில் அரசாங்க நிர்வாகத்துக்குத் தகுந்தவர்களை ஏதேச்சாதிகாரி தனது இஷ்டப்படி நியமிக்கிறான். ஏதேச்சாதிகாரி திறமையுள்ளவனாகவும், பொதுநலத்தை நாடுவோனாகவுமிருப்பின், நல்ல நிர்வாகிகளை நியமிப்பது சுலபம். ஜனநாயகத்தில், விசேஷமாக பிரிட்டிஷ் முறையில், பிரதம மந்திரி மிகவும் சக்தி வாய்ந்தவனாகவும், தனது கட்சிக்கு முக்கிய பலமாகவும் இருந்தாலொழிய தனக்கு இஷ்டப்பட்ட மந்திரிகளை அமர்த்திக் கொள்ள முடியாது. தனது கட்சியில் இருக்கும் பல கோஷ்டிகளையும் திருப்தி செய்வதற்காகத் திறமையற்றவர்களைச் சகாக்களாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் முறையில் சர்க்காரின் எல்லாக் காரியங்களுக்கும் மந்திரி சபை கூட்டாகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். 'ஒரு மந்திரிக்குச் சாமர்த்தியமில்லை, அதனால் காரியம் கெட்டுப் போயிற்று' என்று வாதாட முடியாது.

ராஜ்ய நிர்வாக இலாகாக்களை மந்திரிகளிடம் பிரித்துக் கொடுத்து விட்டாலும் ஒவ்வொரு இலாகாவின் முக்கிய திட்டங்களையும், கொள்கைகளையும் மந்திரி சபை பொதுவாக ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும் என்பது சம்பிரதாயம். இவைகளைப் பற்றி மந்திரிகளிடம் அபிப்பிராய பேதங்கள் இருப்பது சகஜம். அவைகளை ரகசியமாக வைத்துக் கொண்டு, மந்திரிசபைக் கூட்டத்தில் மட்டும் கூறி ஆலோசித்து, சபையின் முடிவை எல்லா மந்திரிகளும் ஏற்றுக் கொண்டு சட்டசபையிலும், பொதுக் கூட்டங்களிலும் ஏகோபித்து ஆதரிக்க வேண்டும் என்பது ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கை. ஆனால் தனக்குப் பிடிக்காத முடிவுகளுக்குப் பொறுப்பு ஏற்க இஷ்டமில்லாமலும், இதர மந்திரிகள் மீது கோபத்தாலும் அசூயையாலும், இவ்வித விஷயங்களின் மர்மங்களை மறைமுகமாக வெளியிட்டு மந்திரி சபையின் முடிவுகளுக்கு எதிர்ப்பு உண்டாக்குவது ஒரு தீய பழக்கமாக இருந்து வருகிறது. பத்திரிகை நிருபர்களிடமும், மற்றவர்களிடமும் முன்பின் யோசிக்காமல் பேசுவதையும், பிறகு தாம் கூறியவற்றை மறுப்பதையும் அடிக்கடி காண்கிறோம்.

எவ்வித அதிகாரமும் ஒரு போதைப் பொருள். அதை ருசி பார்த்த பின் அதில்லாமல் சாதாரணப் பிரஜையாக வாழ்வது கஷ்டமாகிறது. ஒரு சிலரே நீண்டகாலம் மந்திரிகளாக இருந்தால், அவர்கள் எவ்வளவு நல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருந்தாலும், தமது கட்சியிலும், வெளியிலும் அவர்களுக்கு எதிர்ப்பு தோன்றாமல் இராது. இரண்டு பெரிய கட்சிகள் இருந்தால், தேர்தலில் தோல்வியுற்று மந்திரி சபை மாறும். அவ்விதமின்றி, ஒரே கட்சி நீண்ட காலம் மெஜாரிட்டியாக இருந்தால், அக்கட்சிக்குள் ஏற்படும் சச்சரவுகளாலும், மனஸ்தாபங்களாலும் மந்திரி சபையில் மாறுதல்கள் ஏற்படும். மூன்று அல்லது ஐந்து வருஷங்களுக்கு மேல் சாதாரணமாக ஒருவர் மந்திரியாக இருக்கலாகாதென்று, ஒரு கட்டுப்பாடு வைத்துக் கொள்ளுவது நலம் என்று தோன்றுகிறது. அவ்விதக் கட்டுப்பாடு பாரதத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்திருந்தால் பல ராஜ்யங்களில் நடைபெறும் சூழ்ச்சிகளுக்கும், மனஸ்தாபங்களுக்கும் இடமிருக்காது. அமெரிக்க முறையில் ஒரு பிரசிடெண்ட் நான்கு வருஷங்கள் பதவி வகிக்கிறார். இக் காலத்தில் அவரை ஒருவரும் நீக்க முடியாது. சாதாரணமாக அதன் முடிவில் வேறு கட்சியைச் சேர்ந்தவர் பிரசிடெண்டாகி விடுவார். அல்லது அக்கட்சியிலேயே வேறொருவர் அந்தப் பதவிக்கு வருவார். அதிக செல்வாக்குள்ளவர்கள் மட்டுமே இரண்டாவது முறை பிரசிடெண்ட் பதவிக்குப் போட்டி போடுவார்கள்.

பிரிட்டிஷ் முறையில் இந்தக் கண்டிப்பான நியமம் சாத்தியமில்லாத போதிலும், கூடிய வரையில் கட்சிக் கட்டுப்பாடுகள் மூலம் மந்திரிப் பதவிக்கு ஓரளவு ஸ்திரத்துவமும், அது மிதமிஞ்சி நீடிக்காத வரம்புகளும் ஏற்படுத்திக் கொள்ளுவது மிகவும் புத்திசாலித்தனமாகும்.

ஜனநாயகத் தத்துவப்படி, மந்திரிகள் சர்க்கார் சேவகர்களின் நியமனத்திலோ, உயர்வியிலோ நேரில் தலையிடக் கூடாது. ஆனால் தமக்கு வேண்டியவர்களுக்கு அக்கிரமமாக உத்தியோகம் கொடுப்பதும், முறை தவறி உயர்வளிப்பதும் மந்திரி பதவியின் முக்கிய சலுகைகளாகக் கருதப்படுகின்றன. இதனால்

சர்க்கார் சேவகத்தின் கட்டுப்பாடும், கௌரவமும் சீர்குலைந்து விடுகின்றன.

நமது நாட்டில் சாதி வகுப்புணர்ச்சிகளும், வறுமையும் ஒன்றுசேர்ந்திருப்பதால் கர்ணம், குமாஸ்தா முதலிய அற்ப உத்தியோகங்களுக்குக்கூட மந்திரிகளின் தயவைத் தேடுவது வழக்கமாக இருக்கிறது. இதனால் தகுதியற்றவர்கள் சர்க்கார் சேவகர்களாகி அரசாங்க வேலையைக் கெடுத்து விடுகிறார்கள். மேலும் இவ்விதம் சிலர் தகாத முறைகளில் ஆதரிக்கப்படுவதைக் கண்டு பெரும்பாலான சேவகர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு, தங்கள் பணிகளில் கருத்தில்லாதவர்களாகி விடுகின்றனர்.

பொதுநல சமுதாயத்தை நாம் லட்சியமாக ஏற்றுக் கொண்டு விட்டதால் சர்க்கார் மூலம் செய்ய வேண்டிய காரியங்களும், நடத்த வேண்டிய தொழில்களும், சர்க்கார் சேவகர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்து வருகின்றன. ஆதலால் மந்திரிகள் சேவகர்களின் நியமனத்திலும், உயர்விலும் தலையிடுவதால் ஜனநாயகத்துக்கே அபாயம் நேரிடக் கூடும். இதற்குத் தகுந்த பரிகாரம் தேடுவது மிகவும் அவசியமாகி விட்டது.

சட்டசபையிலுள்ள மெஜாரிட்டிக் கட்சித் தலைவர்கள் என்பதைவிட மந்திரிகள் மற்ற அம்சங்களில் சாதாரண மனிதர்கள் என்பதை ஜனநாயகத்தில் ஓயாமல் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பதவி வகிப்பதனால் அவர்களை அறிவிலோ, குணத்திலோ சிறந்தவர்களென்று முகஸ்துதி செய்வோர் போற்றுவர். மந்திரிகளும் தாம் ஏதோ தேசத்துக்காகத் தியாகம் செய்வதாகப் பாசாங்கு செய்வதும் வழக்கம். சுதந்திரப் போரில் தியாகம் செய்தவர்கள், மந்திரிகளானபொழுது அதையும் ஓர் தியாகமாக மற்றவர்கள் கூறுவதும், பழம் தியாகிகள் அதை ஆமோதிப்பதும் சுதந்திர இந்தியாவில் ஓர் நாடகமாகி யிருக்கிறது. குறைந்த சம்பளத்தை எடுத்துக் கொள்ளுவது இதற்கு இடமும் கொடுக்கிறது. உண்மையில் சம்பளம் குறைந்தாலும், வீடு, வாகனம், படி, சிப்பந்தி எல்லாவற்றையும் கணக்கெடுத்தால் மந்திரி பதவியில் எவ்விதத் தியாகமும் இல்லை என்பது தெளிவாகும். மத்திய அரசாங்கத்தைப் போலவே ராஜ்யங்களிலும் மந்திரிகளுக்கு ரூ. 2000 சம்பளம் கொடுத்து விட்டுச் சொந்த மோட்டார்களை வைத்துக் கொள்ளும்படி செய்வதால் பொதுப்பணம் மிச்சமாகும் என்பதில் சந்தேகமில்லை. தற்சமயம் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை மோட்டார் வண்டி மாற்றுகிறார்கள்.

மந்திரிப் பதவியில் எவ்விதத் தியாகமுமில்லை, அதுஒரு கண்ணியமான பொறுப்புள்ள பதவி, அதைத் திறமையுடன் வகிப்போருக்குச் சுக வாழ்வும் கௌரவமும் உண்டு என்பதைப் பொதுமக்களும், அரசியல்வாதிகளும், கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொண்டால் நமது அரசியலில் தற்சமயம் உள்ள பல பாசாங்குகள் மறைந்து விடும். திறமையும், நேர்மையும், பொது நலத்தில் அக்கறையுமே நல்ல மந்திரியின் யோக்கியதாம்சங்களாகக் கருதப்பட வேண்டும். அழுக்குத் துணியும், அலங்கோலத் தோற்றமும் ஊரூராகத் திரிந்து கிராமப் பிரசாரம் செய்வதும், சிறைசெல்லும் கட்டத்துக்குப் பொருத்தமானவை. அதிகாரம் வகிக்கும் இந்தக் காலத்தில் மற்றவர்களைப் போல் மந்திரிகளும் எளிய வாழ்க்கை நடத்துவது நலம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்காகச் சன்னியாசி வேஷம் போட வேண்டியதில்லை.

சாதாரணமாக, மந்திரிகள் தம் செல்வாக்கை உபயோகித்துத் தவறான வழிகளில் பொருள் சேர்ப்பதில்லை. ஆனால் அவர்களுடைய குடும்பத்தார்களும், பந்துக்களும் அப்படிச் செய்வது வழக்கம். பல சமயங்களில் மந்திரிகளுக்குத் தெரியாமலே அவர்கள் பதவியிலிருப்பதன் காரணத்தாலே உத்தியோகஸ்தர்களும், பணக்காரர்களும் பந்துக்கள் மூலம் மந்திரிகளின் சிநேகத்தைத் தேடுகின்றனர்.

முக்கியமாக, கட்டடங்கள், பாலங்கள் முதலிய வேலைகளின் கண்டிராக்டர்கள் இதர சர்க்கார் சேவகர்களை வசப்படுத்துவதைப் போலவே மந்திரிகளையும் திருப்தி செய்ய முயலுவார்கள்.

இவ்விரண்டு அபவாதங்களிலிருந்தும் தப்புவதற்கு மந்திரிகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பரிசுத்தமாக இருப்பவர்கள் மீதும் பொய்யான அவதூறுகள் பரப்பி மந்திரிசபையிடம் அவநம்பிக்கை உண்டாக்க எதிர்க்கட்சிக்காரர்கள் பிரயத்தனம் செய்வார்கள். அவற்றைப் பாமர மக்களும் எளிதில் நம்பிவிடுவார்கள். ஆதலால் சிறிது இடம் கொடுத்து விட்டால் பழி பிரும்மாண்டமாகிவிடும்.

தமது கட்சிகளின் செலவுகளுக்காக, விசேஷமாகத் தேர்தல் காலத்தில் ஏற்படும் பெரும் செலவுகளுக்காக, மந்திரிகள் பணம் சேர்க்கலாமா என்பது நாசூக்கான கேள்வி. சேர்க்கவே கூடாது என்றால் கட்சி வேலைகள் நடைபெற மாட்டா. ஒரு தடவை மந்திரி சபை அமைத்து விட்டு அது கலைந்துவிட நேரிடும். தாராளமாகச் சேர்க்கலாம் என்பதும் தவறு. சர்க்காரிடம் நேரில் பணத் தொடர்பு இருக்கும் கண்டிராக்டர், வியாபாரி முதலியோரிடமிருந்து வசூல் செய்வது லஞ்சமேயாகும் என்பதில் சந்தேகமில்லை. பணம் கொடுக்காதவர்களுக்கு ஏதாவது தீங்கு விளைவிப்பதாகப் பயமுறுத்திப் பணம் திரட்டுவதும் வெறுக்கத்தக்கதாகும்.

எல்லா அரசியல் கட்சிகளும் தமது பணவரவு செலவுகளை வருஷந்தோறும் தணிக்கை செய்து பிரசுரிக்க வேண்டுமென்றும், ஒரு தொகைக்கு அதிகமாக நன்கொடைகொடுத்தவர்களின் பெயர்களை விவரமாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் விதியிருந்தால் நலம் என்றும் தோன்றுகிறது.

வித்தியாலயம், கலைக்கூடம், மத ஸ்தாபனம் முதலிய பொதுநலத்துக்கும் தங்கள் செல்வாக்கைத் துஷ்பிரயோகம்செய்து பணம் வசூல் செய்வதும் நியாயமல்ல. அப்படிச்செய்வதைப் பொதுஜனங்கள் பாராட்டலாம். பணக்காரர்கள் அதிகாரத்தில் இருப்பவர்களின் நன்மதிப்பைச் சம்பாதிப்பதற்காகவே பகட்டான தானம் செய்வார்கள். ஆதலால், குறுகிய சுயநலமில்லாத பொது நன்மைகளுக்கு மந்திரிகள் உதவி தேடுவது நன்மை என்று வாதிக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்



துங்கபத்திரா அணைக்கட்டு பாரதி நிலையத்தினர் பாரதி விழாவைச் செப்டம்பர் 7ந் தேதி விமரிசையாகக் கொண்டாடினர். சூப்பரண்டிங் இன்ஜினியர் திரு என். நஞ்சுமந்தராவ் இவ்விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

இல் கவர்னர்களும், வைஸிராய்களும் இவ்விதத்தில் பல முக்கிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இப்பொழுதும் பிரஸிடெண்ட், கவர்னர்கள் இவ்விதம் செய்வதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. பொது ஸ்தாபனங்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்ற விண்ணப்பங்களில் மந்திரிகள் கையெழுத்திடுவதிலும் குற்றமில்லை. தனிமையில் பணக்காரரிடம் சென்று வற்புறுத்தியோ, மிரட்டியோ பணம் சேர்ப்பது, அதன் உத்தேசம் எதுவாக இருப்பினும், கண்டிக்கத் தக்கதாகும்.

தாம் எவ்வளவு நேர்மையாக இருந்த போதிலும், தனக்குக் கீழுள்ள இலாகாக்களின் ஊழல்களுக்கும் மந்திரி பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது ஜனநாயக சம்பிரதாயமாகும். ஆனால் இதற்கு வரம்புகளுண்டு. சாதாரணமாக முன்ஜாக்கிரதையுடன் தன் பணியைச் செவ்வையாக ஆற்றிவரும் மந்திரி எவ்விதத்திலும் அறியக் கூடாத, தடுக்கக் கூடாத தவறுகளுக்கும், ஊழல்களுக்கும் பொறுப்பாளியாக முடியாது. தமது அஜாக்கிரதையாலும், திறமைக் குறைவாலும் நடைபெற்ற தவறுகளுக்கே ஜவாப்தாரியாவார். சமீப காலத்தில் மத்திய அரசாங்கத்தில் இரண்டு சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

கோரமான சில ரயில் விபத்துக்கள் சம்பவித்தன. ரயில்வே மந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி ராஜினாமா செய்தார். ரயில்வே நிர்வாகத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை, இதர காரியங்களில் தமது நேரத்தை மிதமிஞ்சிச் செலவழித்துவிட்டார் என்று கூறினாலொழிய, இந்த ராஜினாமாவுக்குப் போதிய காரணமில்லை. அதை அவரது பொதுநல உணர்ச்சியின் அறிகுறியாகவே பாவிக்க வேண்டும். இல்லையேல் சில மாதங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் மந்திரியானது தவறாகும்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் சம்பந்தமாகத் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி ராஜினாமா செய்தது வேறுவிதமானது. அவருக்குக் கீழ் வேலை செய்த காரியதரிசி அவருடைய அனுமதியை ஓரளவு பெற்றுத் தகாத முறையில் பொதுப் பணத்துக்கு நஷ்டமாகும்படி விவகாரம் செய்ததற்காக ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. அலுவல்கள் மிதமிஞ்சியிருந்ததால் பெரிய உத்தியோகஸ்தர்களை நம்ப வேண்டியிருந்ததென்று வாதிக்கலாம். எந்த உத்தியோகஸ்தரை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று தீர்மானிப்பதும் மந்திரியின் பொறுப்பாதலால், அவர்கள் நம்பிக்கை மோசம் செய்தால் அதன் பலனை அனுபவிப்பதும் சரியே.

ஏதேச்சாதிகாரங்களைக் காட்டிலும் ஜனநாயகத்தில் லஞ்சமும், ஊழல்களும் அதிகம் என்று எண்ணுவது மிகவும் தவறு. ஏதேச்சாதிகாரத்தில் லஞ்சத்தையும், ஊழல்களையும் பற்றிப் பேசுவது அபாயம். பத்திரிகைகள் வதந்திகளைப் பிரசுரிக்க மாட்டா. ஆங்காங்கு அந்தரங்க சமாசாரங்களை அறிந்தவர்கள் மௌனமாக இருந்து விடுவார்கள். அல்லது அதைப் பயன்படுத்தித் தாமும் லாபமடைவார்கள். ஜனநாயகத்தில் எல்லாவித வதந்திகளும் தடையின்றி உலவுகின்றன. தமக்கு அநியாயச் சலுகைகள் கிடைக்காதவர்கள் பொய்யான அவதூறுகளைக் கிளப்பி விடுகிறார்கள். ஆதலால் அவ்வித வதந்திகளைப் பொதுமக்கள் நம்பலாகாது.

சட்டசபைகளிலும், மந்திரி சபைகளிலும் சேவை செய்தவர்களுக்குச் சரியான சம்பளமும், பிற்காலத்தில் பென்ஷனும் கொடுப்பதால் பொதுவாழ்வு பரிசுத்தமடையும். தற்போதைய நிலையில் அரசியல் வாழ்வில் நீண்ட காலம் உழைத்தவர்கள் யோக்கியர்களாக இருப்பின் வறுமையால் வாடுகிறார்கள். அப்படியின்றி மறைமுகமாகப் பொருள் சேர்த்தால் பொதுவாழ்வுக்கே தீங்கு விளைவிக்கின்றனர். இரண்டையும் விலக்கி, அரசியல் பணியைக் கண்ணியமான வேலையாக்குவது ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாகும்.


உங்கள் ஆடையைக் கொண்டே நீங்கள் மதிப்பிடப்படுகிறீர்கள்
ஆண்டுகள் பலவாகினும்
அழகு குன்றாத
ஆடைகளை அணியுங்கள்!
ஹறூவா
லஸ்டலின்
கெ. ஏஸி. எஸ் 5208 ஏஸி 3000 – குறிப்பிட்டுகேளுங்கள்.
ட்ரில்
'ப்ளெயின்' ரகம் எல் 4914 என்றும், 'செக்' ரகம் எல் 976 என்றும்கேளுங்கள். 'டாபி' ரகமும் கிடைக்கிறது.
இந்த நம்பர்களைச் சொல்லுங்கள்: பி 17 (ராணுவத்தினர் அணிவது இது) பி37, பி11, பி 94, பி39, பி 83.
எடுப்பான தோற்றம், உகப்பான உடைக்கு பின்னி ஜவுளியே ஏற்றது. இந்த பிரசித்த டிரேட் மார்க்குகள் உள்ள துணிகளையே வாங்குங்கள்.
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
மானேஜிங் ஏஜெண்டுகள்,
பின்னி & கோ (மதராஸ்) லிமிடெட், சென்னை
BY 302a

ஸ்டாக்ஹோம் மகாநாடு

பார்வதி சுப்பிரமண்யம்

ஜூலை பதினொரும் தேதி முதல் 22-ந் தேதி வரை ஸ்டாக்ஹோமில் நடந்த மகாநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த மகாநாட்டின் முக்கியத்தைப் பற்றி எழுத வேண்டிய அவசியமில்லை: அதற்குப் படித்தவர், படியாதவர், ஆண், பெண், பெரியவர்கள், சிறியவர்கள் ஆகிய அனைவரும் கவனம் செலுத்தி ஆதரவளிக்க வேண்டும் என்று கல்கி 13—7—58 தலையங்கத்தில் வந்திருந்ததை வாசகர்கள் அனைவரும் படித்திருப்பார்கள்.

மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற என்னுடைய அயல்நாட்டுப் பிரயாண அனுபவத்தை எழுத ஆசைப்படுகிறேன். எனக்கு வயது அறுபதுக்கு மேல் ஆகிச் சில வருஷங்களும் சென்று விட்டன. கனம் ராஜாஜி அவர்களும் கனம் ராமஸ்வாமி சாஸ்திரி அவர்களும் தாங்கள் செல்ல முடியாமைக்கு வருந்துவதாகவும் சௌகரியப்பட்ட பேர்கள் போவது நல்லது என்றும் சொன்னார்கள்.

அந்த வாக்கைத் துணையாக ஏற்று நான் புறப்பட்டேன். முதலில் பாஸ்போர்ட் விஷயத்தில் தகராறு ஏற்பட்டது. ரஷ்யா நம் விரோதி நாடு என்றில்லா விட்டாலும் கம்யூனிஸக் கொள்கையுள்ள அந்தத் தேசம் ஆதரிக்கும் மகாநாடு ஆதலால் ஸ்வீடனிலுள்ள ஸ்டாக்ஹோமுக்குச் செல்ல பாஸ்போர்ட் கிடைக்கச் சிரமப்பட்டது.

சென்னையிலிருந்து ஜூலை 3-ந் தேதி ஜனதாவில் நானும் ஜெயம்மா என்ற ஒரு சகோதரியும் புறப்பட்டு 5-ந் தேதி டில்லி சேர்ந்தோம். மகாநாட்டுப் பிரதிநிதிகளை 7-ந் தேதி ஒரு விமானமும் 8-ந் தேதி ஒரு விமானமுமாக ஏற்றிச்செல்ல ஏற்பாடாகி இருந்தது. 7-ந் தேதி வரை பாஸ்போர்ட் விசா விஷயம் தகராறில் இருந்தது. ஜெயம்மாவுக்குப் பல வருஷங்களாகவே உலகில் எல்லாத் தேசங்களுக்கும் போகவர பாஸ்போர்ட் கையில் தயாராக இருந்ததால் அவர் 7-ந் தேதி விமானத்தில் புறப்பட்டார்.

எனக்குக் கடவுள் கிருபையில் 7-ந் தேதி மாலை டில்லியில் பாஸ்போர்ட் விசா கிடைத்தது. அதன்படி 8-ந் தேதி காலை ஸப்தர்ஜங் விமான நிலையத்துக்குப் போய்ச் சுங்க இலாகாவின் சோதனைகள் முடிந்து விமானத்தில் ஏறிக் கொஞ்ச தூரம் பறந்து சென்றோம். திடீரென்று விமானம் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து சேர்ந்தது. எங்களுக்கு மனநிலை எப்படி யிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். காபூல், அமிர்தஸர் முதலிய இடங்களில் கால நிலை சரியாயில்லையென்றும், விமானம் இறங்குவதற்கு அனுகூலமாயில்லை என்றும் கம்பியில்லாத் தகவல் கிடைத்து. அதனால் விமானத்தைத் திருப்பிக் கொண்டு ஸப்தர்ஜங் விமான நிலையத்தில் எங்களை இறக்கி விட்டார்கள்.

பிறகு காலநிலை சரியாயிருந்தால் 9-ந் தேதி காலை 4-30க்கு விமானம் புறப்படும் என்றும் போக விரும்பும் பிரயாணிகள் வந்து தயாராக இருக்கும்படியும் தகவல் கொடுத்தார்கள்.

அதிர்ஷ்டவசமாக என்னை விமானத்தில் ஏற்றி வழியனுப்ப வந்திருந்த என் கணவர், பிள்ளைகள், மருமக்கள் எல்லோரும் புறப்பட்ட விமானம் சில நிமிஷங்களில் திரும்பி வருவதைப் பார்த்து விமான நிலையத்திலேயே தங்கியிருந்தார்கள். ஆக, அவர்களோடு வீட்டுக்குப் போய் அன்று மாலை டில்லியில் மகாத்மா காந்தியடிகளின் சமாதி

ஸ்டாக்ஹோம் நகரின் ஒரு தோற்றம்



யைத் தரிசித்துக் கொண்டேன். 9-ந் தேதி விடியற்காலை எழுந்து விமான நிலையம் சேர்ந்தேன். பகவத் கிருபையால் காலநிலை அனுகூலமாயிருந்ததால் 4-30க்கு இருட்டிலேயே விமானம் கிளம்பியது.

இரவு எட்டு மணிக்கு டாஷ்கண்ட் என்ற ரஷ்யா தேசத்தைச் சேர்ந்த ஊர் வந்து சேர்ந்தோம். எங்களுக்கு முன் புறப்பட்டிருந்த ஐயம்மா முதலியோர் அவ்விடம் தங்கியிருந்தார்கள். அன்றைய தினத்திலிருந்து இந்தியாவிலிருந்து புறப்பட்டவர்கள் எல்லாரும் ஒரே விமானத்தில் பிரயாணம் செய்தோம்.

ஜூலை 10-ந்தேதி டாஷ்கண்ட் என்ற ஊரில் குழந்தைகள் விடுமுறை நாட்களுக்கு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் ''பயோனியர் காம்ப்'' முகாமைப் போய்ப் பார்த்தோம். ஸோவியத் யூனியனில் குழந்தைகளுக்கு ஒன்பது மாதங்கள் பள்ளிக்கூடப் படிப்பும் மூன்று மாதங்கள் விடுமுறையும் உண்டு. அந்த விடுமுறை நாட்களை 26 நாட்கள்கொண்ட 3 பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். எல்லாப் பகுதி மாணவர்களும் 26 நாட்கள் பயோனியர் காம்ப் பயிற்சி பெற வேண்டும். 'காம்ப்' என்பது ஏதோ பொட்டலில் துணிக் கூடாரங்களினால் ஆன தற்காலிக முகாம் இல்லை. சோவியத் யூனியன் முழுதும் ஆங்காங்கு 300 குழந்தைகள் முதல் 1200குழந்தைகள் வரை போய்த் தங்கியிருக்க வசதியுள்ள பிரும்மாண்டமான இடங்கள் அமைத்திருக்கிறார்கள். அவை ஊர் நெருக்கடியிலிருந்து விலகி ஐம்பது அல்லது அறுபது மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. அவ்விடம் தண்ணீர் வசதி, மின்சார வசதி எல்லாம் உண்டு. குழந்தைகளை மூன்று பிரிவாக, வயதுவாரியாகப் பிரித்திருக்கிறார்கள். ஏழு வயதிலிருந்து ஒன்பது வயது வரை, பத்து வயதிலிருந்து பன்னிரண்டு வரை, அதற்கு மேல் பத்தொன்பது வயது வரை என்று பிரித்து அந்தந்தத் தரத்துக்கு ஏற்ற அளவில் பக்கா கொட்டகைகள் நிர்மாணித்துச் சரியான அளவில் கட்டில்களும் படுக்கைகளும் அமைத்திருக்கிறார்கள்.

முகாமில் சில விதிகள்தான் கட்டாயம். அதாவது உடற்பயிற்சி, சுகாதார போதனை, முதலுதவி வகுப்பு. மற்றச் சமயங்களில் குழந்தைகளுடைய விருப்பத்துக் கேற்றவாறு விளையாடவும் தச்சு, உலோக சாமான்கள் செய்யவும், சித்திர வேலை, தையல் வேலை, கம்பளி நூலில் சட்டை பின்னவும் தனித் தனி கொட்டகைகளில் அநேகம் தொழில்களுக்குச் சௌகரியங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். குழந்தைகள் விடுமுறை நாட்களைக் கழிப்பதற்கு ஏற்பட்ட முகாம் ஆகையால் கட்டாயப்படுத்தப்படாமல் எது விருப்பமோ, அவைகளைச்செய்து பார்த்துவாங்கிக் கொள்ளலாம். குழந்தைகளாக ஏதாவது விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினால் தான் வாத்தியார்கள் சொல்லித்தர முன்வருகிறார்கள். குழந்தைகளுக்கு நீச்சப் பழக ஒவ்வொரு முகாமிலும் நீச்சுத் தொட்டி அமைத்திருக்கிறார்கள். அதில் முதலில் ஏழிலிருந்து ஒன்பது வயதுக் குழந்தைகளும் பிறகு பன்னிரண்டு வயதுக் குழந்தைகளும் கடைசியில் பதினேழு வயது வரை உள்ளவர்களும் இறங்கி நீந்திக்குளிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு கூட்டம் பதினைந்து நிமிஷங்கள் நீந்திக் கரையேறிய பிறகே அடுத்த கூட்டம் இறங்கலாம். அவரவர்கள் வயதுக்குத் தகுந்தபடி குளத்தில் ஆழம் அமைக்கப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்கள் அந்த எல்லைகளில் தடையாக நின்று கொண்டு குழந்தைகள் அவரவர்களுக்கு ஏற்பட்ட ஆழத்துக்கு அதிகம் போய்விடாதபடி கண்காணிக்கிறார்கள். ஆகாராதிகளில் அவ்விடம் யாவருக்கும் ஒரே மாதிரி உணவாயிருப்பதால் நம் ஊர் போல் தமிழ், தெலுங்கு, மலையாளம், வடக்கு, தெற்கு என்று ஆகாரத்திலுள்ள


ஸ்டாக்ஹோம் மகாநாட்டுக்கு வந்திருந்த பல தேசப் பிரதிநிதிகள்



வேறுபாட்டினால் குழந்தைகளுக்குக் கஷ்டமில்லை.

ஆக குழந்தைகளுக்கு ஒரேடியாய் மூன்று மாத விடுமுறை விட்டு, சிறுவர்கள் வீட்டில் செய்யும் விஷமம் தாங்காமல், 'எப்பொழுது இவர்களுக்குப் பள்ளிக்கூடம் திறக்கும்' என்று நாம் அலுத்துக் கொள்ளும் நிலை ரஷ்யப் பெற்றோர்களுக்கு இல்லை.

நான், ''அதிகக் கண்டிப்பில்லாமல் குழந்தைகளைச் சமாளிக்க முடிகிறதா?'' என்று கேட்டேன். அதற்கு வாத்தியார்கள், ''எல்லாக் குழந்தைகளுமே தொந்தரவு கொடுக்காதவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் எல்லாருக்கும் நீச்சலிலும் தண்ணீரில் துளைவதிலும் அதிக விருப்பமாகையால் அடங்காத குழந்தைகளை 'உனக்கு இன்று நீந்தவோ தண்ணீரில் துளையவோ அனுமதி கிடையாது' என்று கண்டித்தால் போதும். மறுநாள் முதல் ஒழுங்காக வந்து விடுவார்கள்'' என்றார்கள்.



மகாநாட்டுக்குச் சென்ற இந்திய கோஷ்டி. நடுவில் மூக்குக் கண்ணாடி அணிந்து சால்வை போர்த்திக் கொண்டு நிற்பவர் தான் இக் கட்டுரையின் ஆசிரியை.

மாலை வேளைகளில் விளையாட்டு, நாடகம், சினிமா முதலிய பொழுது போக்குகளும் நிறைய இருக்கின்றன.

நமது தேசத்திலும் குழந்தைகளுக்கு இவை போன்ற ஏற்பாடுகள் செய்து கொடுத்தால் மிகவும் உற்சாகமாக இருக்கும்!

** ** **

டாஷ்கண்ட் என்பது முஸ்லிம்கள் அதிகம் உள்ள இடம். சோவியத் யூனியனில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி பாடத் திட்டம். அதனால் பெற்றோர் ஊர் மாற்றினால் குழந்தைகள் படிப்பைப் பற்றிச் சிரமமில்லை. படிப்பு இலவசம். புத்தகங்கள் இலவசம். ஏழு வயது முதல் பதினேழு வயது வரை எல்லாக் குழந்தைகளும் படித்தாக வேண்டும். பிறகுதான் தொழில் படிப்பும், கல்லூரிப் படிப்பும். வைத்தியப் படிப்பு ஏழரை வருஷங்கள். இன்ஜினீயரிங் படிப்பு ஆறு வருஷங்கள். மற்றப் படிப்பு ஐந்து வருஷங்கள். முஸ்லிம்களுக்குப் பதினேழு வயது வரை ஆகாரக் கல்விக்குப் பிறகு மதகுரு படிப்பாகப் பன்னிரண்டு வருஷங்கள் படித்துப் பயிற்சி பெற்றால்தான் 'இமாம்' என்ற பட்டம் கிடைக்கும். டாஷ்கண்டில் இமாம்களைத் தயாரிக்கும் பெரிய கல்வி ஸ்தாபனத்தைப் பார்வையிட்டோம். அதில் தஞ்சாவூர் ஸரஸ்வதி மகாலில் இருப்பது போல் முஸ்லிம் பழைய கிரந்தங்கள் பட்டு அட்டைகள் போட்டுப் பாதுகாக்கப்பட்டு வைத்திருப்பதையும் காட்டினார்கள்.

மாஸ்கோவுக்கு 11-ந் தேதி புறப்பட்டோம். யூரல் மலைத்தொடர் மேல் விமானம் பறந்த காட்சி அற்புதமாயிருந்தது. அவ்விடம் ஸ்டாலின், லெனின் உடல்களைக் கெடாமல் பக்குவப்படுத்தி வைத்திருப்பதைக் காட்டினார்கள். ராமாயணத்தில் தசரதனைச் சில நாட்களே பக்குவப்படுத்தி வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். இருபது வருஷங்களுக்கு மேலான லெனின் சரீரத்தையும், ஐந்தாறு ஆண்டுகள் கழிந்து விட்ட ஸ்டாலினின் இறந்த உடலையும் நகம், மயிர், நிறம் எல்லாம் உயிரோடு இருந்த நிலையில் வைத்திருப்பதைப் பார்க்க மயிர்க்கூச்செறிந்தது. அந்த இடத்துக்குக் கட்டுக்காவல் அதிகம். இறந்தவர்களுக்குச் செலுத்த நாம் எடுத்துப் போகும் மலர்களைக் கோட்டை வாயில் போலிருக்கும் நுழைவு இடத்தில் பதித்திருக்கும் சலவைக் கல் அருகில் சமர்ப்பித்துவிட வேணும். பிறகு வழிநெடுகக் காவல் காத்து நிற்கும் ஆயுதம் தாங்கிய வீரர்களைக் கடந்து குழி மார்க்கமாக 'க்யூ' வரிசையில் அழைத்துப் போகிறார்கள். கடைசியில் ஒரு கட்டடத்தில் நாலு மூலைக்கும் ஆயுதம் தாங்கிய வீரர்களின் காவலில் கிடத்தியிருக்கும் லெனின், ஸ்டாலின் சரீரங்களைப் பார்த்து விட்டு மறு வழியாக வெளியே வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அன்று பகலும் மியூஸியம் முதலிய இடங்களைப் பார்த்துக் கொண்டு ரயிலில் ரீகா என்ற இடத்துக்குப் புறப்பட்டோம். அவ்விடம் பிரயாணிகள் செல்லும் வண்டிகளை விடச் சாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளுக்குத்தான் சலுகை அதிகம். நம் ஊரில் வண்டி மெல்லச் சென்றால், 'என்ன கூட்ஸ் வண்டி மாதிரி போகிறதே!' என்போம். ரஷ்யாவிலோ கூட்ஸ் வண்டிக்குத்தான் முதலிடம். ''எங்கள் தேசம் தொழில்களை முக்கியமாகக் கருதும் நாடு. அதனால் பிரயாணிகள் அவசரமாகப் போக வேண்டுமானால் விமானத்தில் போய்க் கொள்ளட்டும். சாமான்கள் போக்குவரத்துக்குத்தான் முதல் சலுகை அளிப்போம்'' என்கிறார்கள். நம் ஊர் மாதிரி ரயிலில் நினைத்த போது டிக்

கெட் வாங்கி உட்கார்ந்தோம் என்றில்லை. உள்ளூர் வாசிகளும் ஒரு ஊர் விட்டு ஊர் போகவேணுமானால் அதற்குக் காரணமும் எவ்வளவு நாட்கள் தங்கப் போகிறார்கள் ஆகிய விவரங்களையும் கொடுத்தாக வேண்டும். இதனால் ரயிலில் அதிக நெருக்கடி இல்லாமலிருக்கிறது. ரயில் ஓட்டும் டிரைவர் பெண், பாதுகாப்பு கார்ட் பெண், டிக்கட் கொடுப்போர் பெண்கள், வழியில் கொடி காட்டிப் பாதை தடங்கலின்றி இருக்கிறது என்று அறிவிப்போரும் பெண்கள். இதைப் பற்றிக் கேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது: ''ஐம்பது வருஷங்களுக்குள் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறது. இரு உலக மகாயுத்தத்தினால் எங்கள் ஆண்களில் அனேகர் இறந்து விட்டார்கள். இப்பொழுது எங்கள் ஜனத்தொகையில் ஒரு ஆணுக்கு ஏழு பெண்கள் வீதம் இருக்கிறோம். இந்த நிலையில் ஆண்கள் வேலை செய்து பொருள் தேடிப் பெண்கள் அதைக் கொண்டு சாப்பிடுவது என்பது முடியாத காரியம்.''

** ** **

பிறகு 13-ந் தேதி அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டுச் சமுத்திரம் தாண்டி ஸ்வீடன் தேசத்திலுள்ள ஸ்டாக்ஹோமுக்கு மூன்று மணி நேரத்தில் போய்ச் சேர்ந்தோம். ஸ்டாக்ஹோமில் கொஞ்சம் குளிர் அதிகம். மலைப்பிரதேசமாய் மேடு பள்ளமான நிலப் பரப்புடைய ஊர். அவ்விடம் நடக்க இருந்த மகாநாடு 16-ந் தேதிதான் ஆரம்பமாகும். நாங்கள் 13-ந் தேதி மாலை ஸ்டாக்ஹோம் சேர்ந்து விட்டோம். 14, 15 தேதிகளில் மகாநாட்டில் சொல்ல வேண்டிய விஷயங்களை ஐந்தாகப் பிரித்துக் கொண்டோம். அந்தந்தக் குழுவினர் சர்ச்சை புரிந்த நேரம் போகப் பாக்கி நேரத்தை ஸ்டாக்ஹோம் நகரைச் சுற்றிப்பார்க்க உபயோகித்தோம்.

'பீஸ்கவுன்ஸில்'காரர்கள் எங்களுக்கு ஆளுக்கு ஒரு 'பாஸ்' அளித்தார்கள். அதன் உதவியால் டிராம், பஸ், பாதாள ரயில் முதலிய எல்லாவற்றிலும் நாள் முழுதும் ஸ்டாக்ஹோம் பட்டணத்துக்குள் ஒரு நாளைக்கு எந்த இடத்துக்கானாலும் எவ்வளவு தடவையானாலும் போய் வரலாம். அதை நானும் ஐயம்மாவும் முழுக்க முழுக்க உபயோகித்துக்கொண்டு எல்லா இடங்களையும் பார்த்தோம். ஸ்டாக்ஹோம் வடதுருவத்துக்குச் சமீபத்தில் இருக்கிறது.

நாங்கள் . போன சமயம் உத்திராயணமாகிய அவர்களின் கோடைகாலம். ஆதலால் 24 மணி நேரமும் இருட்டே இல்லாமல் சூரியப்பிரகாசம் நிறைந்திருந்தது. நடு இரவு 12 முதல் 12-30 வரை நமது காலை 6-30 மணி மாதிரி மங்கலான வெளிச்சம். மற்றைய 23-30 மணியும் நல்ல வெய்யில்! இரவில் தூக்கம் வர ஜன்னல்களுக்குக் கெட்டியான கறுப்புப் படுதாக்கள் போட்டிருக்கிறார்கள். அதை அவிழ்த்து மூடிவிட்டுத் தூங்குவோம். அதே ஊரில் நவம்பர் டிஸம்பர் மாதங்களில் சூரிய ஒளியே இராதாம். எல்லாம் விளக்கு வெளிச்சத்தில்தான் நடைபெறுமாம். 16ம்தேதி முதல் 22ம்தேதி வரை உலகம்முழுவதிலிருந்தும் 53தேசங்களிலிருந்து 3500 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சமாதானத்தின் அவசியம், அணு ஆயுதங்களின் பகிஷ்கரிப்பு, தேசத்துக்குத் தேசம் கலை, ஆசாரங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் முதலிய விஷயங்களை விவாதித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். நடவடிக்கைகள் பல பாஷைகளில் நடந்தேறின. ஆனால் யாவரும் தெரிந்து கொள்ள மூவாயிரத்து ஐந்நூறு பேருக்கும் தனித் தனி காதுக் கருவிகள் கொடுத்திருந்தார்கள். அவற்றை நாம் காதில் பொருத்திக்கொள்ள வேணும். நடவடிக்கைகள் நடக்கும்போதே பல பாஷைகளில் மொழிபெயர்ப்பாளர்கள் விளக்குகிறார்கள். காதுக் கருவிகளில் ஒவ்வொரு பாஷைக்கும் தனித் தனி பொத்தான் இருக்கிறது. அவற்றின் நிறங்களும் வெவ்வேறு. நமக்கு வேண்டிய பாஷைக்குள்ள பொத்தானைத் திருப்பிவிட்டுக் காதில் மாட்டிக் கொண்டால் அந்த பாஷையில் நடைபெறும் விஷயம் கேட்கிறது.

நம் தேசத்திலிருந்து சென்ற ஸ்ரீமதி ராமேச்வரி நேரு இந்த மகாநாட்டில் முதலில் பேச ஏற்பாடாகி யிருந்ததும் அவர் பேச்சை அனைவரும் கொண்டாடியதும் எங்களுக்குப் பெருமையாக இருந்தது.

அந்த ஏழு நாட்களில் உள்ளூர்க்காரர்களிடம் ஆங்கிலம் தெரிந்தவர்களுடன் நேரிலும், ஸ்வீடிஷ் மட்டும் தெரிந்தவர்களோடு மொழிபெயர்ப்பாளர் மூலமும் பரிச்சயம் செய்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. எங்களை இரண்டு ஹோட்டல்களில் இறக்கி யிருந்தார்கள். ஒன்றில் படுக்கையும் காலை ஆகாரமும் மட்டுமே கிடைக்கும். அந்த ஹோட்டல் பேர் கிரிப்டன் பெர்க். இன்னொன்றில் பகல் ஆகாரமும் இரவு ஆகாரமும் கிடைக்கும். அதன் பேர் மால்மென் ஹோட்டல். இவைகளுக்கு ரயில் பஸ், டிராம் முதலியவைகளில் போகும்படி இருந்ததால் அனேகரைப் பார்த்துப் பேசிப் பழக முடிந்தது. அதில் ஒரு நண்பர் வெளியூரில் இருப்பவர், அவர் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். அவர் பட்டண எல்லை வரை பாதாள ரயிலில் போய்ப் பிறகு டாக்ஸி வைத்து அவர் வீட்டுக்கு அழைத்துப் போனார். அவர், மனைவி, மூன்று பெண்கள், ஒரு பிள்ளை அடங்கிய குடும்பம். அவர் ஒரு மோட்டார் கம்பெனியில் வேலையிலிருக்கிறார். எங்களை அவரும் அவர் மனைவியும், குழந்தைகளும் அன்புடன் வரவேற்றுக் காப்பி, சிற்றுண்டி அளித்து அளவளாவினார்கள். இந்த வாய்ப்பினால் நகரத்தை விட்டு விலகியுள்ள சிறு ஊர்களில் வசிப்பவர்களைப் பார்த்துப் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது. நாங்கள் அவர்களுக்கு எங்கள் ஞாபகார்த்தமாகக் காஷ்மீரப் பட்டுத் துண்டு ஒன்றும் நம் இந்திய நாணயங்களில் சிலவற்றையும் கொடுத்தோம். அவர்கள் பதிலுக்கு அடுப்படியில் வேலை செய்கையில் பாத்திரங்களைப் பிடித்து இறக்கத் தாங்களே பின்னிய கை உறைகள் கொடுத்தார்கள்.

24-ந் தேதி ஸ்டாக்ஹோம் விட்டுப் புறப்பட்டு விமானத்தில் சமுத்திரம் தாண்டி ஒரு மணி நேரத்தில் ரீகா சேர்ந்தோம். அங்கிருந்து அந்நகரத்தின் அதிசயங்களைக் கண்டு களித்துவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பினோம்



பக்த ராவணா

"பூகைலாஸ்" என்ற தலைப்பில் பல மொழிகளிலும் பல தடவை வெளிவந்துள்ள பழைய படம் தான் 'பக்த ராவணா'.

எத்தனையோ தமிழ், தெலுங்குப் படங்களில் கதாநாயகனாக நடித்துப் பேரும் புகழும் பெற்று விளங்கும் ஏ. நாகேசுவரராவ் இந்தப் படத்தில் நாரதராக வந்து "பக்த ராவணா" படத்தில் மிக மிக முக்கியமானவராக விளங்குகிறார். அவர் மட்டும் இல்லையென்றால் திரைக் கதை திரும்பக்கூட முடியாமல் திண்டாடிப் போயிருக்கும்.

சமீப காலத்தில் ராவணனுக்கு ஒரு யோகம் அடிக்க ஆரம்பித்திருக்கிறது. ராவணன் ஒரு தமிழ் மகன் என்று தீர்மானமான பிறகு அவனுக்கு வந்த ஆபத்து ஒன்பது தலைகளோடு போயிற்று. பத்துத் தலை ராவணனை இனி சினிமாவிலும் சரி, நாடகத்திலும் சரி காண முடியாது. ராவணனுக்கு ஒரு தலைதான் என்பது இப்பொழுது தீர்மானமாக முடிந்துபோன விஷயம்.

சங்கீத ரஸிகனாகவும், சகலகலா விற்பன்னனாகவும், சிவபக்த சிகாமணியாகவும் தோற்றம் அளிக்கும் ராவணனிடம் சீதையை அபகரித்த இழி செயலைத் தவிர வேறு எந்தக் குறையையும் இப்பொழுது காண முடியாது. தமிழன் என்றதால் அவனுக்குக் கிடைத்த தனிச் சிறப்பு இது.

இப்பொழுது ராவணன் இன்னும் முன்னேறி விட்டான். "பக்த போதனா"வைப் போல் பக்தியில் சிறந்தவனாகி, "பக்த ராவணா" என்ற பெயரோடு ஏ. வி. எம். தயாரித்த படத்தில் வருகிறான். இன்னொரு விசேஷம்: "சம்பூர்ண ராமாயண"த்தில் ஸ்ரீராமபிரானாக நடித்த என். டி. ராமராவ் 'பக்த ராவணா' படத்தில் ராவணனாக வருகிறார். புஷ்பக விமானமோ, வெறும் விமானமோ, ரதமோ எதுவும் இன்றிக் கைலாசத்துக்கும் இலங்கைக்கும் பாத யாத்திரையாகவே போகிறான் பக்த ராவணன்; கடுங் கானகத்தில் சித்தத்தைச் சிவன் பால் நிறுத்திக் கடுந்தவம் புரிகிறான்.

ராவணனின் தாயார் சமுத்திரக் கரையில் சிவலிங்கம் வைத்து அநுதினமும் பூஜை செய்கிறாள். அதனால் இணையற்ற பலம் பெற்ற ராவணன் அகில உலகங்களையும் வெல்லத் தீர்மானிக்கிறான். நாரதர் மூலம் செய்தியை அறிந்த இந்திரன் ராவணனின் தாயார் செய்யும் சிவபூஜையைக் கெடுக்கிறான். "சிவபெருமானது ஆத்மலிங்கத்தையேபெற்றுவருகிறேன்" என்று அன்னையிடம் சபதம் கூறி விட்டுப் புறப்படுகிறான் ராவணன்.

ஒவ்வொரு செய்தியும்சரியான சமயத்தில் நாரதருக்குத் தெரிந்து விடுவதுதான் இந்தக் கதையில் விசேஷம்.

ஆத்ம லிங்கத்தைப்பெற விரும்பித் தவம்புரிந்த ராவணன் சிவபெருமான் தரிசனம் தந்ததும், மகாவிஷ்ணுவின் மாயையினால் ஆத்மலிங்கத்தை மறந்து பராசக்தியையே கேட்டு விடுகிறான்.

இந்தப் படத்தில் வரும் மகாவிஷ்ணு, சிவபெருமான் முதலியவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது!

மண்டோதரியின் பாகத்தை ஏற்ற ஜமுனா மிகவும் நன்றாக நடிக்கிறார்.


பார்வதியாக வரும் சரோஜா தேவி முதல் தடவையாகப் புராணப் படத்தில் நடிக்கிறார். அவருக்கு அதிக சந்தர்ப்பங்கள் இல்லையென்றாலும் நன்றாகவே நடித்திருக்கிறார்.

இந்தப் படம் ஏ. வி. எம். தயாரிப்பு என்பதற்குச் சாட்சி சொல்ல மயாசுரன் அரண்மனை, ராவணனது அரண்மனை முதலியவற்றின் காட்சி ஜோடனைகள் இருக்கின்றன. ராவணன் தவம் புரியும் காட்சி மிகவும் நன்றாயிருக்கிறது.

கமலா லக்ஷ்மணன், கோபி கிருஷ்ணன், ஈ.வி. சரோஜா, ஹெலன் முதலியவர்களின் நடனம் படத்துக்குக் கவர்ச்சி ஊட்டுவனவாயிருக்கின்றன. அவற்றுள் கமலாவின் நடனம் பாவம் ததும்ப அமைந்திருக்கிறது.

"பக்த ராவணா" படத்தின் இடையில் வரும் ஒரு சிறு சம்பூர்ண ராமாயணக் காட்சி மிகவும் நன்றாயிருக்கிறது.

படத்தில், பல இடங்களில் தமிழாக்கம் சரியாயில்லை. அதில் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். அத்துடன் படத்தின் நீளத்தையும் குறைத்திருக்கலாம். — காந்தன்



எப்பொழுதும்
இன்பம்
தப்பாது அளிப்பது
ப்ரூக் பாண்ட்
தேயிலையே



ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்

BB 370 K

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

6. சிருஷ்டியின் வரலாறு

[விதுரரும் உத்தவரும், மைத்திரேயரும் விதுரரும் பிரமன் செய்த சிருஷ்டி]

திருதராஷ்டிரன், கண் மட்டும் குருடானது போதாமல், தன் பகுத்தறிவையும் இழந்து, தனது தம்பி மைந்தர் பாண்டவரைத் தன் மகன் துரியோதனன் படுத்தும் பாட்டைப் பார்த்து ஆமோதித்து வந்தார். துரியோதனன் பாண்டவரை அரக்கு மாளிகைக்கு விருந்துக்கு அழைத்து வீட்டுக்குத் தீ வைத்தான். சபை நடுவே நின்று கொண்டு துச்சாதனன் திரௌபதியின் ஆடையை உருவினான். பதின்மூன்று ஆண்டுகள் காட்டிலே குடியிருந்துவிட்டு, நாடு திரும்பித் தன் பங்கைக் கேட்ட தருமனுக்கு "ஊசி குத்தப் போதுமான இடம் கூடக் கொடேன்" என்று துரியோதனன் மறுத்தான். தூது சென்ற கண்ணனையும் மதிக்காத மதியீனன்.

இந்த நிலையில், திருதராஷ்டிரனுக்கு உடன் பிறந்த முறையான விதுரர், அவருக்கு நற்போதனை செய்தார். "உரிய பங்கைத் தருமனுக்குக் கொடுத்து விடுங்கள். மனத்தில் பகை என்பதே இல்லாத தருமனைப் பகைக்க வேண்டாம். பீமனும் அர்ச்சுனனும் பாம்பைப் போல் சீறிக் கொண்டிருக்கிறார்கள். முக்தி அளிக்கும் முகுந்தனும் அவர்கள் சார்பில் இருக்கிறான். குலத்தைக் கெடுக்க வந்த துரியோதனனை வெளியேற்றுங்கள்" என்றார் விதுரர்.

இதைக் கேட்ட துரியோதனனும், கர்ணனும், துச்சாதனனும், மாமன் சகுனியும் அடக்க முடியாத கோபம் கொண்டார்கள். "இந்த மதி கெட்ட வேலைக்காரி மகனை இங்கே யார் வருந்தி அழைத்தது? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் இவனைக் கொல்லாமல் விட்டாலும், நாட்டை விட்டாவது அகற்ற வேண்டும்" என்று அலறினான் துரியோதனன்.

இந்தக் கடுஞ் சொல்லைச் செவியுற்ற விதுரர் வருந்தவில்லை. இதுவும் கடவுள் மாயை என்று எண்ணித் தம் வில்லையும் அம்பையும் அரண்மனை வாசலில் வைத்து விட்டு வெளியேறினார். தனிமையில், கால் நடையாய் நாடெங்கும் திரிந்து, கோயில்தோறும் தங்கிக் கடவுளை வழிபட்டார். துறவி வேடம் பூண்டு, பூமியில் விழுந்த கனிகளை மட்டும் உண்டு, புண்ணிய நதிகளில் நீராடி, புவி மீதுறங்கி, ஹரிக்கு அன்பான விரதங்களைக் கைக் கொண்டு காலம் கழித்து வந்தார். இவர் துவாரகைக்கு அருகிலுள்ள பிரபாஸம் என்ற இடத்தை அடைந்தபொழுது, பாண்டவர் போரில் வெற்றி அடைந்து நாட்டை அரசாளுவதையும், கௌரவர் அழிந்து போனதையும் கேள்வியுற்றார். ஒன்றோடொன்று உராய்ந்து தீ மூண்டு அழியும் மூங்கில் காட்டைப் போல் சாம்பலான கௌரவரைக் குறித்து மனம் நொந்தார். பிறகு பல தேசங்களைக் கடந்து நாளடைவில் யமுனா நதிக்கரை சேர்ந்தார். அவ்விடத்தில் கண்ணனுக்குச் சீடனும் ஆப்தனுமான உத்தவரைச் சந்தித்தார்.

விதுரர் உத்தவரிடம் யாதவருடைய நலத்தைப் பற்றியும் பாண்டவரைப் பற்றியும் வினவினார். இதைக் கேட்ட உத்தவருக்கு உடனே கண்ணனுடைய நினைவு பொங்கி வந்தது. வெகு நேரம் நாவெழாமல் மெய் சிலிர்த்துக் கண்ணீர்




பெருக, 'பக்தி' என்ற பெரு வெள்ளத்தில் ஆழ்ந்தார். பின்னர், மெதுவாகத் தம் நினைவு பெற்று, விதுரருக்குப் பதில் உரைக்கலானார்:

"கண்ணன் என்ற கதிரவன் மறைந்த பின் நம்முடைய வீடும் வாயிலும் 'காலம்' என்ற பாம்புக்கு இரையாகி விட்டன. இனிமேல் நமக்கு நன்மை என்பது என்ன இருக்கிறது? வானத்தில் தோன்றும் மதியை அறியாத மீனைப் போல் ஆயினர் கண்ணனைக் கண்டு கொள்ளாத யாதவர்கள்" என்று ஆரம்பித்து, ஆயர்பாடியிலும், மதுரையிலும், துவாரகையிலும் கண்ணன் செய்த அரும் பெரும் செயல்களை விவரித்தார். நடுவில் கண்ணன் தன் இனத்தாரை அழித்து விட்டு வைகுண்டம் ஏகின வரலாற்றையும் சொன்னார். "யாதவர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுச் சாக வேண்டும் என்று கண்ணன் தீர்மானித்தார். ஒருசமயம், யதுக்களும், போஜர்களும் துவாரகைக்கு வந்த சில முனிவர்களை அவமானம் செய்தார்கள். முனிவர்கள் அவர்களைச் சபித்தனர். இது நடந்து சில மாதங்களுக்கெல்லாம் விருஷ்ணி குலத்தோரும், போஜர்களும், அந்தகரும், மற்றவரும், தங்கள் தேர்களில் ஏறிக்கொண்டு பிரபாஸம் என்ற கடற்கரையை அடைந்தார்கள். அவ்விடத்தில் மது அருந்தி வெறி கொண்டு ஒருவரை ஒருவர் கொன்றனர். தன் மாயையை இவ்வாறு ஏவிய கண்ணனும் சரஸ்வதி நதிக் கரையை அடைந்து, அங்கேயே அமர்ந்திருந்தார். அதற்கு முன்னர் என்னைக் கூப்பிட்டு 'நீ பத்ரிகாசிரமம் சென்று விடு' என்று கட்டளை இட்டார். ஆனால் எனக்கு அவரை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. அவரையே பின் தொடர்ந்து சென்றேன். நதிக்கரையில் தனித்திருந்த திருமேனியைக் காண்பதற்கு மைத்ரேயர் என்ற முனிவர் வந்தார். கண்ணனை வணங்கினார். எங்கள் இருவரையும் பார்த்துப் புன்னகை பூத்த முகத்துடன் கண்ணன் பல உபதேசங்களைச் செய்தருளினார். தன்னுடைய நிகரில்லா நிலையின் உண்மையை எனக்கு விரிவாக எடுத்துரைத்தார். கண்ணனை வலம் செய்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். இனிமேல் பத்ரிகாசிரமம் போவேன்" என்று கூறினார் உத்தவர் விதுரரிடம்.

சோகத்தை அறிவினால் அடக்கிய விதுரர், உத்தவரிடம் கண்ணன் அவருக்கு அருளிய ஞானத்தைத் தமக்குப் புகட்ட வேண்டும் என்று கோரினார். "அதை மைத்ரேய முனிவரிடம் கேட்டு அறிந்து கொள்வீர்" என்று உரைத்து விட்டு உத்தவர் அவ்விடம் விட்டு அகன்றார்.

மைத்ரேயரைத் தேடிக் கொண்டு விதுரர் கங்கைக் கரையில் இருக்கும் ஹரித்வாரத்தை அடைந்தார். அங்கிருந்த மைத்ரேயரிடம் பின்வருமாறு வினவினார் :—

"எங்கு பார்த்தாலும் சுகம் வேண்டுமென்று மனிதர் என்னென்னவோ செய்கிறார்கள். ஆனால் சுகத்தை அடைவதில்லை. இந்த இச்சையை மாற்றுவது எவ்விதம்? பக்தியினால் கடவுளை வழிபட்டு உண்மையில் நிலைப்பது எப்படி? பூமியில் அவதரித்துக் கடவுள் செய்த செயல்கள்தாம் என்ன? பல்லுயிரும் பலவுலகும், பல்வேறு தன்மைகளும் நாம் காணும் வெவ்வேறான பேரும், உருவும் எவ்விதம் படைத்தார்? பல பூக்களி



வின்று தேன் எடுக்கும் வண்டெனப் பல தத்துவங்களின் சாரத்தைச் சேமித்த நீங்கள் என் சந்தேகத்தை அகற்றிப் புத்தியைப் புகட்ட வேண்டும்.''

மைத்ரேயர் விதுரருக்குச் சிருஷ்டியின் நுட்பங்களை ஒன்றுவிடாமல் எடுத்துரைத்தார். (இவை ஓரளவு முன் பகுதியில் சுகர் பரீக்ஷித்துக்கு உபதேசம் செய்த இடத்தில் சுருங்கச் சொல்லப்பட்டுள்ளன.) சிருஷ்டியின் வரலாற்றைக் கேட்ட விதுரருக்கு ஐயமொன்று வந்தது. இது நமக்கும் வரக்கூடியதுதான். ''அறிவே உருவாய் மாறுதலற்று நிலைத்திருக்கும் கடவுளுக்கு, விளையாட்டு என்ற வாயிலாகத்தான் முக்குணங்களோடு கூடிய சிருஷ்டி எவ்வாறு பொருந்தும்? இன்பத்தில் இச்சை கொண்ட சிறுவரல்லவோ விளையாட்டை விரும்புவர்? மாயையினால் படைத்து, மாயையினால் காத்து, மாயையில் அழிப்பது எதற்காக? காலத்தைக் கடந்தவருக்கு மாயையுடன் தொடர்பு ஏற்பட்டது ஏன்? உடலுக்குள் புகுந்து கொண்ட கடவுளுக்கு இன்பமும் துன்பமும் உண்டென்பது சரியாகுமா?'' என்று கேட்டார் விதுரர்.

அதற்கு மைத்ரேயர், ''கட்டுக்கடங்காத கடவுளுக்குத் துயரம் வந்ததென்பது முறைக்கு முரண்பாடாகவே இருக்கிறது. அந்தத் தோற்றம்தான் அவருடைய மாயை - உண்மையில் கட்டொன்றுமில்லாமல் கட்டுண்டாற்போல் தோற்றுவிக்கும் சக்தி. சொப்பனத்தில் ஒருவன் தன் தலையை யாரோ வெட்டுவது போல் பார்ப்பதில்லையா? தான் அசையாச் சந்திரனும் நீர் நடுவே அசைவது போல் தோன்றுகிறதன்றோ? அவ்வாறே, உடலின் இன்ப துன்பங்கள் ஆன்மாவை அணுகாவிடினும், ஆன்மாவுக்குரியவை எனத் தோற்றமளிக்கின்றன. இந்தப் பொய்யான எண்ணங்கள் எல்லாம் நாம் செய்யும் பக்தியினாலும் கடவுளின் அருளாலும் மெதுவாக மாறும்'' என்று பதில் அளித்தார்.

இதற்கு மேல் மைத்ரேயர் பிரமன் பிறந்ததையும், அவருடைய செயல்களையும் குறித்து உபதேசம் செய்தார். பிறகு காலத்தின் பிரிவுகளை விவரித்தார். காலத்துக்கு முதலும் முடிவும் இடையாது. ஆனால் படைப்பதற்குக் காலம்தான் கடவுளுக்குக் கருவியாக அமைந்துள்ளது. சிருஷ்டி இரு விதம். முதலில் கடவுள் தானாகவே மாயையின் பலத்தால் ''மகத்தி''லிருந்து பஞ்ச பூதங்களும் ஐம்புலன்களும் உள்ளாக அனைத்தையும் படைத்தார் என்று கூறியிருக்கிறோம். இதற்குமேல்தான் பிரமன் தோன்றியதாக அறிய வேண்டும். இங்கிருந்து பிரமனுடைய சிருஷ்டி ஆரம்பம் ஆகிறது. தாவரங்கள், விலங்குகள், மனிதர், தேவர், ஏனைய உயிர்கள் எல்லாம் ஹரியின் ஆணைக்கு அடங்கி பிரமன் செய்யும் சிருஷ்டி.

காலத்தை, ஒரு நொடியிலிருந்து, மாதங்களும், ஆண்டுகளும், தேவ வருஷங்களும், யுகங்களும் தாண்டி, எல்லாம் ஒடுங்கும் பிரளயம் வரை கணக்கிடலாம். ஒரு புழுவின் வாழ்வு சில விநாடிகள். பிரமனுடைய கணக்கில் நான்கு யுகங்களும் ஒரு பகல். அந்தப் பகலில் சிருஷ்டி அடங்கியிருக்கிறது. அவ்வாறு நூறாண்டு வாழ்கிறான் பிரமன். ஆனால் பிரமனும் காலத்துக்குக் கட்டுப்பட்டவர். எறும்பைப் பார்த்தால் நம்முடைய



வாழ்நாள் பெரிது; தேவரைப் பார்த்தால் சிறிது. காலத்தில் சிறிதென்பதும் பெரிதென்பதும் ஒன்றோடொன்று வைத்துப் பார்த்தால்தான் உண்டு. தம் கணக்கில் தேவரும் சில நாட்களே வாழ்கிறார்கள். பிரமனும் முடிவு வருகிறதென்று வருந்துகிறார். கணக்குக்கும் காலத்துக்கும் மீறி நிற்பது கடவுள் ஒருவரே!

பிரமதேவன் தாவர ஜங்கமங்களைப் படைத்த பிறகு, ஐந்து விதமான அறிவின்மையைச் செய்தார். அவையாவன, தமஸ் என்று தன்னைப் பற்றித் தெரியாமை; மோகம் என்று, தன் உடம்பைத் தான் என்று எண்ணுதல்; மகா மோகம் என்று இன்பங்களில் ஆசை; தாமிச்ரம் என்று சினம்; அந்ததாமிச்ரம் என்று இறப்பதே முற்றிலும் முடிவு என்ற தவறு. இவ்வாறு தான் படைத்த பாபங்களைப் பார்த்த பிரமன் தம்மை நொந்து கொண்டார். கடவுளைத் தியானம் செய்து மனத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டு, ஸனகர், ஸனந்தனர், ஸனுதனர், ஸனத்குமாரர் என்ற முனிவர்களைப் படைத்தார். அவர்களைப் பார்த்து, "புதல்வர்களைப் பெற்றிடுவீர்" என்று கட்டளை இட்டார். ஆனால் அவர்கள் புலன்களை அடக்கிக் கொண்டு கடவுள் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்கள். மைந்தரால் அவமதிக்கப்பட்ட பிரமன் தம் கோபத்தை ஒருவாறு குறைத்துக் கொண்டார். ஆயினும் அந்தப் பெரும் சினமானது அவருடைய புருவங்களுக்கு நடுவிலிருந்து பழுத்த செந்நிறம் வாய்ந்த ஒரு குமரனாய் வெளி வந்தது. இவ்வாறு தோன்றிய குமரன், பிரமனை நோக்கி, "தந்தையே! எனக்குப் பேரும் இட்டு வீடும் தரவேண்டும்" என்று அழுதான். பிரமன் அவனுக்கு "ருத்திரன்" என்று நாமம் கொடுத்து, இந்திரியங்கள், சூரிய சந்திரர், பஞ்ச பூதங்கள், தவம் என்ற இருப்பிடங்களையும் அளித்தார். பதினொரு பத்னிகளையும் ருத்ரனுக்குத் தந்தருளினார். அவர்கள் மூலம் தன்னைப் போல் கொடும் தோற்றமுள்ள பல புதல்வர்களை ருத்திரர் பெற்றார். இதைக் கண்டு கலங்கின பிரமன், "கண்களால் நாலா பக்கங்களையும் எரிக்கும் சந்ததியை இனிமேல் பெற வேண்டாம். அனைவருக்கும் நன்மையை நல்கும் தவம் செய்வாய்" என்று ருத்திரனுக்குக் கட்டளையிட்டார்.

இதற்குப் பின் பிரமதேவன் தாமாகவே பத்துப் புதல்வர்களைப் படைத்தார். அவர்கள் மரீசி, அத்ரி, அங்கிரஸர், புலஸ்த்யர், புலஹர், க்ருது, பிருகு, வஸிஷ்டர், தக்ஷர், நாரதர். இதன்பின் வேதங்களும், ஆயுர்வேதமும், வில் வித்தை, பாட்டு, கட்டடக் கலை, இதிகாச புராணங்கள், நான்கு நற்குணங்கள் ("வித்யா" என்ற தூய்மை, "தானம்" என்ற கொடை, "தபஸ்" என்ற அடக்கம், "ஸத்யம்" என்ற உண்மை) முதலியனவும் மற்றும் பல வாழ்க்கை வழிகளும் நீதிகளும், காயத்ரீ, 'ஓம்' என்ற பிரணவம், கவிதை, எழுத்து, ஏழு ஸ்வரங்கள் - இவ்வாறு பல்வேறு சிருஷ்டிகளைச் செய்து முடித்தார்.

ஆயினும் அவருடைய குலமானது பெருகவில்லை. இதை எண்ணி வருந்தின பிரமனுடைய உடல் இரண்டாகப் பிரிந்து ஒன்று ஆண் ஆகவும் மற்றது பெண்ணாகவும் ஆயிற்று. அந்த ஆண் தான் ஆதியில் உலகை ஆண்ட ஸ்வாயம்புவ மனு. பெண் அவர் மனைவி, சதரூபா. அவர்களுக்குப் பிரியவரதர், உத்தானபாதர் என்று இரண்டு ஆண் குழந்தைகளும், ஆஹூதி, தேவஹூதி, ப்ரசூதி என்று மூன்று பெண்களும் பிறந்தனர். அவர்களை முறையே ருசி, கர்தமர், தக்ஷர் மணந்து கொண்டார்கள். ஹிந்துக்களின் கொள்கைப்படி, இவ்வுலகில் பரவியிருக்கும் மானிடருக்கு இவர்களே முதன் முன்னோர்.

பாருங்கள் —

அவர்களுக்கு இப்படி சாப்பாடு போட்டால் போதாது!

சரிதான். நீங்கள் நிறையத்தான் உணவு போடு கிறீர்கள். ஆனால் நாங்கள் கூறவிரும்புவது நீங்கள் போடும் உணவில் எல்லாவித போஷணைகளும் அடங்கியிருக்க வேண்டுமென்பதே.

ஆரோக்கியமாகவும், சக்தியுள்ளவர்களாயும் இருப் பதற்கு நமது உணவில், விடமின்கள், மினரல்கள் புரோடீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு சத்து முதலிய ஐந்துவித போஷணைகள் இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவை களில் கொழுப்புச் சத்துகூட முக்கியமானது. ஏனெ னில் அது சக்தியை அளிக்கவும், ஆகாரத்தை ருசி யுள்ளதாக்கவும் செய்கிறது. மேலும் விடமின்களை பயன்படுத்த தேகத்திற்கு உதவியாயிருக்கிறது.



வனஸ்பதி — தூய்மையான கொழுப்புச் சத்து!

நமது தினசரி உணவில் குறைந்தது 2 அவுன்ஸ் கொழுப்புச் சத்து சேர்ந்திருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கணக்கிட்டுள் ளார்கள். இந்த அளவு கொழுப்புச்சத்து சுலபமாகவும் குறைந்த செலவிலும் கிடைக்க நீங்கள் செய்யவேண்டியதெல் லாம் உணவுப் பொருள்களை வனஸ்பதியில் சமையல் செய்வதே.

வனஸ்பதி பரிசுத்தமான தாவர எண்ணெய். அது விஞ்ஞான முறைப்படி பக்குவம் செய்யப்படுவதால் சாதாரண எண்ணெய் களைக் காட்டிலும் சிறந்தது. ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர் நேஷனல் யூனிட் விடமின் 'ஏ' சேர்க்கப் பட்டுள்ளது. விடமின் 'ஏ', சருமத்தையும் கண்களையும் பாதுகாக்கவும் தேக ஆரோக் கியத்தை அதிகரிக்கவும் செய்கிறது.

வனஸ்பதி நவீனமானதும், சுத்தமானது மான பாக்டரிகளில், விஞ்ஞான முறைப்படி சிறந்த ரீதியில் தயாரிக்கப்பட்டு, டப்பாக் களில் சீல் செய்யப்படுகிறது. அதனால் அதை வாங்கும்போது, அது மிக்க போஷாக்கு வாய்ந்ததென்றும் சுத்தமானதென்றும் நீங்கள் பூரணமாக நம்பலாம்.

வனஸ்பதி

இல்லாருக்கு வரப்பிரசாதம்!

தி வனஸ்பதி மான்யுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

அத்தியாயம் 28

வேடம் வெளிப்பட்டது!

குழல்மொழியின் முகத்தில் தென்பட்ட வியப்பைக் கண்டு துறவி சிரித்தார். "இந்த அறைக்குள் இருப்பதை 'நான் எப்படி இவ்வளவு சரியாகக் கண்டு பிடித்துக் கூறினேன்' என்று தானே நீ வியப்படைகிறாய்?"

குழல்மொழி அவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் ஒருகணம் அவருடைய முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"ஏன் அப்படி என்னையே பார்க்கிறாய்? என்னுடைய ஆருடத் திறமையைப் பரிசோதிப்பதுபோல் நீ கேள்வி கேட்டாய். நான் பதில் கூறினேன். இத்தனை கட்டுக் காவல்களையும் கடந்து யவன வீரர்கள் வாளேந்தி நின்று அயராமல் காக்கும் இந்த இடத்துக்குள் இருப்பதைப் புள்ளி பிசகாமல் தெள்ளத் தெளிய அடிகள் எப்படிக் கூறினாரென்று சிந்தித்துப் பார்க்கிறாயா?"

"அதுதான் அங்கிருப்பதை உங்கள் ஆருடத்திறல் சொல்லிவிட்டீர்களே!"

"சொன்னால் மட்டும் போதுமா? எங்களுடைய முன்னோர் சுந்தர முடியையும், வீர வாளையும், நான் ஒரு முறையாவது கண் குளிரக் காண வேண்டாமா?" துறவி உருக்கமான குரலில் அவளைக் கெஞ்சினார்.

"அதென்ன; 'எங்களுடைய முன்னோர்' என்கிறீர்கள்? அடிகளுக்குத் தமிழின் தன்மை, முன்னிலை, படர்க்கை, வேறுபாடொன்றும் தெரியவே தெரியாதோ? நீர்தான் பாண்டிய





அடிகளின் கேள்வியைக் கவனிக்காதது போல் இருந்துவிட்டு, "சரி! வாருங்கள். மேலே சுற்றிப் பார்க்கலாம்" என்று கூறி அவரை அந்த இடத்திலிருந்து அழைத்துச் செல்ல முயன்றாள் குழல்மொழி.

"முடியாது, பெண்ணே! நான் ஏமாற மாட்டேன். இந்த யவன வீரர்களின் காவலுக்கு அப்பால் என்ன இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் இங்கிருந்து ஒரு அடிகூட நகர மாட்டேன்!" என்று கூறி அவர் பிடிவாதமாக அங்கிருந்து புறப்பட மறுத்தார்.



மரபின் இறுதி வாரிசு போலல்லவா பேசுகிறீர்?" என்று திருப்பிக் கேட்டாள் இடையாற்றுமங்கலம் நம்பியின் புதல்வி.

"ஏன்? அப்படி இருக்க முடியாதோ? உனக்கு வேண்டுமானால் அது தெரியாமல் இருக்கலாம். இதோ ஒரு கணம் பொறுத்திரு" என்று சொல்லி விட்டு அங்கே பக்கத்திலிருந்த வேறோர் மண்டபத்தில் நுழைந்து மறைந்தார் அடிகள். அவர் என்ன செய்யப் போகிறார் என்று அறியும் ஆவலோடு அந்த மண்டபத்தின் வாயிலையே பார்த்துக் கொண்டு தான் நின்றிருந்த இடத்தை விட்டு அசையாமல் நின்றாள் குழல்மொழி.

சிறிது நேரம் கழித்து மண்டபத்துக்குள்ளிருந்து வெளி வந்த ஆளைப் பார்த்த போது அவள் அப்படியே அதிர்ச்சியடைந்து போய் நின்றாள். அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. இளவரசன் இராசசிம்ம பாண்டியன் அவள் முன்பு வந்து நின்றான். அவனுடைய கவர்ச்சிகரமான கண்களிலும், சிரிப்புக் குடியிருக்கும் செவ்விதழ்களிலும் குறும்புத்தனம் குமிழியிட்டது. வியப்பும் பயமும், வெட்கமும் ஆகிய அத்தனை உணர்ச்சிகளும் அந்தப் பெண்ணின் பிறைச் சந்திரனையொத்த நெற்றியில் சங்கமமாயின.

"நான்தான் துறவி. துறவிதான் நான். இந்த உண்மை உன் தந்தைக்கும் அவருடைய அந்தரங்க ஒற்றனான நாராயணன் சேந்தனுக்கும் நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே உனக்கு மட்டும் இதைத் தெரியவிடாமல் மறைத்துக் கொண்டேன் நான். இப்போது நீயும் தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வந்து விட்டது. தெரிந்து கொள்" என்றான் இராசசிம்மன்.

துறவியாக வேடம் போட்டு இளவரசராக மாறித் தன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி நிற்கும் அவரிடம் என்ன பேசுவதென்று தெரியாமல் திகைத்தாள் அவள்.

"இப்போதாவது சொல்! எதிர்காலத்தில் யாருடைய தலையில் சூடுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறதோ அவன் கூடவா தனது முன்னோர் பயன்படுத்திய சுந்தர முடியையும் வீர வாளையும் பார்க்கக் கூடாது?"

"இனி உங்களைத் தடுக்க நான் யார்? அதோ பயங்கரமான அந்த யவனக்காவல் வீரர்களே உங்களை இன்னாரென்று தெரிந்து கொண்டவுடன் உருவிய வாளை உறைக்குள்ளே போட்டுக் கொண்டு வணங்கி நிற்கிறார்களே?" என்று அது வரையில் வாய் திறவாமல் இருந்த குழல்மொழி வாய் திறந்து மறுமொழி சொன்னாள்.

"அந்த வாள்களுக்கு நான் என்றும் அஞ்ச மாட்டேன். இதோ குறுகுறுவென்று வண்டு சுழல்வது போல் என்னைப் பார்க்கின்றனவே, இந்த வாள்கள் தான் என்னைப் பயமுறுத்துகின்றன" என்று நகைத்துக் கொண்டே அவள் கண்களுக்கு அருகில் சுட்டுவிரலை நீட்டிக் காட்டினான் இராசசிம்மன்.

குழல்மொழியின் பொன்னிறக் கன்னங்களில் குங்குமக் கோடுகள் படர்ந்தன. கண்களின் விழித்திரைகளில் இன்ப நிறைவு பொங்கும் உணர்ச்சியின் சாயல்கள் ஓடி மறைந்தன.




"வேடம் மாறியதற்கு ஏற்பப் பேச்சும் மாறுகிறாற் போலிருக்கிறதே? இளவரசர் தலைமறைவாக இருந்த காலத்தில் படித்துக் கொண்ட பேச்சுக்கள் போலிருக்கின்றன இவையெல்லாம்!" என்றாள் அவள்.

"எல்லாம் அந்த நாளிலிருந்தே உன்னைப் போன்ற பெண்களிடம் படித்துக் கொண்ட பேச்சுத்தானே? பத்துப் பன்னிரண்டு ஆண்டு

ளுக்கு மூன்றும் அரண்மனை நந்த வனத்தில் சிறு குழந்தைகளாக விளையாடிக்கொண்டிருப்போமே, அப்போது நடந்ததெல்லாம் உனக்கு நினைவிருக்கிறதா, குழல்மொழி? உங்களுக்கெல்லாம் அப்போது ஏழெட்டு வயது கூட இருக்காது. பட்டுப் பாவாடை மண்ணில் புரள நீ, தளபதியின் தங்கை பகவதி, ஆசிரியர் மகள் விலாசினி, இன்னும் இரண்டு மூன்று சிறுமிகள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அரண்மனை நந்தவனத்துக்குப் பூப்பறிக்க வருவீர்கள். நான் அப்போது பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவன். வாட்போர் கற்றுக் கொண்டிருந்த சமயம் அது. வேடிக்கையாக வாளை உருவிச் செடிகளை வெட்டுவேன். உங்கள் பூக் கூடைகளைத் தட்டி விடுவேன். உங்களுக்கு அப்போது எப்படிக் கோபம் வரும்? என்னை என்னென்ன பேச்சு பேசுவீர்கள்?" பழைய இளமை நினைவுகளை நினைத்துப் பார்க்கும்போது ஏற்படும் ஒருவித ஏக்கம் மிகுந்த குரலில் பேசினான் இராசசிம்மன்.

"ஏ, அப்பா! உங்களுக்குத்தான் எவ்வளவு நினைவாற்றல்? நாங்கள் கூட மறந்து விட்டோம். சிறுவயதில் நடந்தவற்றையெல்லாம் மறந்து விடாமல் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறீர்களே?" என்று சொல்லிச் சிரித்தாள் குழல்மொழி. சொல்லிமுடித்ததும் அவள் நெஞ்சம் மேலெழுந்து தணிய ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது. அவள் உள்ளத்திலும் துள்ளித் திரிகின்ற காலமான அந்தப் பிள்ளைப் பருவத்து நிகழ்ச்சிகள், அவற்றைப் பற்றிய நினைவு அலைகள்; கழிவிரக்கங்கள் எல்லாம் குமுறி எழுந்தன.



"வயது ஆக ஆக மனிதனுக்கு எது தன்னுடைய சொந்தக் கணக்கில் மீதமாகிறது தெரியுமா, குழல்மொழி? பழைய இளமை நினைவுகள் மட்டும் தான். இதோ என்னைப் பார். எத்தனை அரசியல் குழப்பங்கள், வெற்றிகள், தோல்விகள், சூழ்ச்சிகள், சோதனைகள் எல்லாம் வயதான பிறகு என்னைப் பிடித்துக் கொண்டன! தெரிந்தோ, தெரியாமலோ என் வயதையும், பொறுப்பையும் இவை அதிகப்படுத்தி விட்டன. அந்தப் பிள்ளை மனம், அந்த விளையாட்டுத்தனமான குறும்புகள் இப்போது கல்லாக முற்றி விட்டன."

தன் உள்ளத்தின் அடக்க முடியாத துன்ப உணர்ச்சிகளின் தடுக்க முடியாத வெள்ளத்தையே உடைத்து விடுவது போல் அவளிடம் மனம் திறந்து பேசினான் அவன்.

பேசிக் கொண்டே இருந்தவன் பேச்சை நிறுத்திவிட்டு அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தபோது மென்மை



யான சோகம் படிந்தவை போன்ற கண்களின் கடைக்கோடியில் இரு நீர்முத்துக்கள் உதிர இருந்தன. அவன் பார்த்ததும் திடுக்கிட்டவள் போலத் தன் கையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் குழல்மொழி.

"அடாடா! உணர்ச்சி வசப்பட்டு எதையெதையோ பேசி உன் துன்பத்தைக் கிளறிவிட்டு விட்டேன் போலிருக்கிறது. இதுவரை நான் கூறியவற்றை மறந்து விடு. வா! உள்ளே போய் அந்தச் சுந்தர முடியையும், வீர வாளையும் இருவருமே பார்த்துவிட்டு வருவோம்."

"நான் வரவில்லை! நீங்கள் மட்டும் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்."

"பரவாயில்லை! நீயும் வா!" இராசசிம்மன் அவளை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.

ஆகா! அந்த அறைக்குள் தான் என்ன ஒளி! என்ன அழகு! தாமரைப் பூவைப் போல் வட்டமாக ஒரு பளிங்கு மேடை! அந்த மேடையின் மேல் ஒரு நீண்ட, பெரிய தந்தப்பேழை. பக்கத்தில் பட்டு உறையினால் பொற்சிம்மாசனம் மூடி வைக்கப்பட்டிருந்தது. தரைப் பரப்பின் மேல் குங்குமச் சிவப்பில் ஒளி நிறைந்த இரத்தினக் கம்பளங்களை விரித்திருந்தார்கள். கோவிலின் கர்ப்பக்கிருகத்துக்குள் நிற்பதைப் போன்று பயபக்தியோடு தந்தப் பேழைக்கு முன் வந்து நின்றனர் இராசசிம்மனும் குழல்மொழியும். அறை முழுதும் பரிமளமான மணங்கள் கலந்து நிறைந்திருந்தது. தெய்வச் சிலைக்கு முன் நின்று மரியாதை மிளிரும் கண்களால் பார்ப்பது போல் அந்தப் பேழையை இமையாமல் பார்த்துக் கொண்டு நின்றான் அவன். பிறகு அருகில் நெருங்கி அந்தப் பேழையைத் திறந்தான் இராசசிம்மன். உள்ளிருந்து ஒரு நட்சத்திர மண்டலமே எட்டிப் பார்ப்பது போல் ஒளிக் கீற்றுக்கள் பாய்ந்தன. மஞ்சள் நிறப் பட்டு விரிப்பின் மேல் அந்த மின்னல் முடி வெண்ணிலா விரித்தது. அதனருகே பேழையின் நீளத்துக்குச் சரியாக வைரக் கற்களும், வெண்முத்துக்களும், விரவிப் பதித்த உறைக்குள் வீர வாள் ஒன்று மறைந்துகொண்டிருந்தது.

"மகாமன்னரான என் தந்தைக்குப் பின்னர் இந்த ஒளி முடியும், வீரவாளும் இப்படியே பேழையில் உறங்க வேண்டியதுதானா? இவற்றைப் பேழையாகப் பார்க்கும்போது கண்ணின் நடுமையத்துக் கருவிழிகளைக் கூச வைக்கும் இந்த ஒளியைப் பார்க்கும்போது என் உள்ளம் ஏன் இப்படிப் பொங்கி மேலெழுகிறது? உணர்ச்சிகளில் ஏன் புதிய வேகம் உண்டாகிறது? வெறும் முடியும், வாளும் மட்டுமா இதற்குள் அடைபட்டிருக்கின்றன? என் கண்களுக்கு இவை வேறொரு விதமாகவும் தோன்றுகின்றனவே! என் தந்தையின் தலை முறைக்குப் பின் பாண்டியப் பேரரசின் புகழும், வீரமுமே இப்படிச் சிறைப்பட்டு விட்டனவா?" அவனுடைய உள்ளத்தில் அலை அலையாகச் சிந்தனைகள் எழுந்தன.

இரண்டு கைகளாலும் அவற்றைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். குழல்மொழி எதுவும் பேசத் தோன்றாமல் மருண்ட விழிகளால் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அவன் பேழையை மூடி விட்டுக் கடுமையான காவலுக்கு உட்பட்ட அந்தச் சிறிய அறையைச் சுற்றிலும் தன்னுடைய விழிகளைச் சுழற்றினான்.

பின்பு, "போகலாம் வா!" என்று குழல்மொழியையும் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான். பவன வீரர்கள் மறுபடியும், வணக்கத்தோடு வழி விட்டு விலகி நின்றுகொண்டனர்.

மாளிகையின் மற்றப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கும்போது குழல்மொழியும் இராசசிம்மனும், ஒருவருக்கொருவர் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. இதற்கிடையில் தன் தோற்றத்தைப் பழையபடி துறவி போல் மாற்றிக் கொண்டுவிட்டான் அவன்.

கடைசியாக இடையாற்று மங்கலம் மாளிகையின் மேல் மாடத்தில் நிலா முற்றத்தின் திறந்த வெளியில் வந்து நின்றார்கள் அவர்கள் இருவரும். அந்த மாளிகையிலேயே உயர்ந்த இடம் அது தான். அங்கிருந்து கீழே நாற்புறத்துக் காட்சிகளும் அற்புதமாகத் தெரிந்தன. இடையாற்றுமங்கலம் என்ற பசுமைப் பிரதேசத்துக்கு இரண்டு ஓரங்களிலும் வெள்ளைக் கரையிட்டது போலப் பறளியாறு பாய்ந்து கொண்டிருந்தது. வர்ணக் கலவைகளை வாரி இறைத்தது போல் அரண்மனை நந்தவனத்தில் பல நிற மலர்களும் தெரிந்தன.

"உலகத்தின் சாதாரணமான அழகை உலக நிலைக்கும் மேலே இருந்து கண்டால் எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்த்தாயா?" என்று சிரித்துக் கொண்டே கூறினான் இராசசிம்மன்.

"உண்மைதான்! எந்தச் சாதாரணப் பொருளின் நிலையையும் நன்றாக உணர வேண்டுமானால் அதைவிட உயர்ந்த நிலையிலிருந்துதான் காண வேண்டும்."-- குழல்மொழி பேச்சில் தத்துவத்தைக் கொண்டு வந்து புகுத்தினாள்.

ஆனால் இராசசிம்மன் அவளுடைய பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வேறொரு காட்சியில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

"இதென்ன? என்னிடம் பேச்சுக் கொடுத்து விட்டு இதைக் கவனிக்காமல் எங்கோ பார்க்கிறீர்கள்?" என்று சிறிது சினத்துடனே கடிந்து கொண்டு அவன் பார்வை சென்ற திசையில் தானும் பார்த்தான் குழல்மொழி.

பறளியாற்றின் நடுவில் ஒரு படகு வேகமாக அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருந்தது. படகில் வீற்றிருந்தவர்கள் நன்றாகத் தெரியாவிட்டாலும் வேளானன்தான் அதைச் செலுத்திக் கொண்டு வருகிறான் என்று தெரிந்து கொள்ள முடிந்தது. படகில் இருந்த மற்றொரு மனிதரை இன்னாரென்று குழல்மொழியால் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் அந்தத் திசையில் பார்த்துக் கொண்டிருந்த இளவரசன் இராசசிம்மனின் முகத்தில் வியப்பு மலர்வதை அவள் கவனித்தாள்.

"இவ்வளவு அவசரமாக வேளான் யாரைப் படகில் ஏற்றிக் கொண்டு வருகிறான்?" என்று ராஜசிம்மனிடமே கேட்டாள் குழல்மொழி.

"ஆம்! அவசரம்தான். நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு முக்கியமான மனிதன் என்னைச் சந்திக்க வந்து கொண்டிருக்கிறான். நீ சிறிது நேரம் இங்கேயே இரு. அவனைச் சந்தித்துப் பேசி விட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே மேன்மாடத்திலிருந்து இறங்கிச் சென்று விட்டான் இராசசிம்மன். அவன் நின்று பதில் சொல்லாமல் வேகமாகச் செல்வதைக் கண்டு திகைத்துப்போய் நின்றாள் குழல்மொழி.

அத்தியாயம் 29


சேந்தன் மனத்தில் சில சந்தேகங்கள்

நிலவறையிலிருந்து ஆள் தப்பித்துக் கொண்டு மேலே ஓடும் காலடியோசை கேட்டதும் நாராயணன் சேந்தனுக்கு இதயத் துடிப்பே நின்று விடும் போலிருந்தது. அப்படியே இருட்டில் தாவிப் பாய்ந்து ஓடிப் பிடிக்கலாமென்றால் காலடியில் அவனைச் சுற்றிக் கூர்மையான வாள்கள் சிதறிக் கிடந்தன.

அவற்றை மிதியாதபடி பதறாமல் கீழே குனிந்து உட்கார்ந்துகொண்டு கை விரல்களை அறுத்து விடாமல் சிதறியிருந்த வாள்களை ஒதுக்கி வழி உண்டாக்கிக் கொண்டான். பின்பு தப்பிச் சென்றவனைத் துரத்திக் கொண்டு படியேறி ஓடினான். ஆனால் தப்பித்தவன் போகிற போக்கில் தன்னைத் தப்பிக்க முடியாதபடி கதவை அடைத்து மேற்புறத்தில் தாழிட்டுக் கொண்டு போயிருப்பதைக் கண்டதும் சேந்தனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

பலங்கொண்ட மட்டும் கதவைத் தன் கைகளால் ஓங்கித் தட்டினான். நீண்ட நேரமாக அப்படித் தட்டிக் கொண்டே இருந்தான். கைகள்தான் வலித்தன. "சரிதான்! வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன். இந்த முரட்டுக்


பண்டிகை தினத்தன்று சிறந்ததொரு





மாடல் 717: மாடல் U-717 ஏஸி/டிஸி ஸெட், 5 வால்வுகள், 3 பாண்டுகள். மாடல் B-717 டிரை பாட்டரி ஸெட்: 4 வால்வுகள், 3 பாண்டுகள்.

ரூ. 250/-




மாடல் 722: மாடல் A-722 ஏஸி ஸெட், மாடல் U-722 ஏஸி/டிஸி ஸெட். 6 வால்வுகள், 3 பாண்டுகள்.

ரூ. 335/-


நேஷனல்-எக்கோ

ரேடியோவை பரிசு அளியுங்கள்!


வரப்போகும் பண்டிகை தினத்தன்று உங்கள் குடும்பத்தினர் விரும்பும் சிறந்த பரிசு ஒன்று அளியுங்கள் — ஒரு நேஷனல்-எக்கோ ரேடியோ வாங்கிக் கொடுங்கள். வருஷக்கணக்கில் அவர்கள் ஒலிபரப்புகளைக் கேட்டு மகிழ்வார்கள். அவரவர் சக்திக்கேற்றவாறு வாங்கிக்கொள்ள பல்வேறு விலையில் 12 நேஷனல்-எக்கோ மாடல்கள் உள்ளன. உங்களுக்கு அருகாமையிலிருக்கும் நேஷனல்-எக்கோ டீலரிடம் சென்று அவைகளை இயக்கிக் காண்பிக்கச் சொல்லுங்கள்.



மாடல் B-722: டிரை பாட்டரி செட், 5 வால்வுகள், 3 பாண்டுகள். ரூ. 335/-



மாடல் A/U-187: 6 வால்வுகள், 8 பாண்டுகள், மாடல் A-187 ஏஸி செட், மாடல் U-187 ஏஸி/டிஸி செட். ரூ. 475/-



மாடல் A-317: 7 வால்வுகள், 8 பாண்டுகள், செளகரியமான ரேடியோ செட்; ஏஸி மாத்திரம். ரூ. 595/-

நேஷனல் - எக்கோ செட் ஒவ்வொன்றும் ஒரு வருஷ உத்திரவாதம் கொண்டது

நேஷனல் - எக்கோ ரேடியோக்கள் சிறந்தவை — அவைகள் மான்செஸ்டரில் செய்யப்பட்டவை.

விலைகளில் கழிவில்லை. உள்ளூர் வரிகள் தனி.

GRA ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையென்ஸெஸ் பிரைவேட் லிமிடெட், ஆப்பேரா ஹவுஸ், பம்பாய்-4 • 3, மதன் ஸ்ட்ரீட், கல்கத்தா-13 • ப்ரேஸர் ரோடு பாட்னா • 1/18, மௌண்ட் ரோடு, மதராஸ் • 36/79, ... ரோடு, பெங்களூர் • ... சந்தினி சௌக், டெல்லி

GRA. 7050

கதவை விடிய விடியத் தட்டினாலும் யாருக்குக் கேட்கப் போகிறது? இந்த இருட்டுக் கிடங்கில் பட்டினி கிடந்து சாக வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறதோ, என்னவோ?" என்று கதவடியில் கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்து விட்டான். காலையில் இடையாற்றுமங்கலத்திலிருந்து கோட்டாற்றுக்கும், கோட்டாற்றிலிருந்து தளபதியை அலைக் கழிப்பதற்காகத் திருநந்திக்கரைக்கும் அலைந்து களைத்திருந்த நாராயணன் சேந்தன் உட்கார்ந்தவாறே தூங்கத் தொடங்கி விட்டான்.

மறுபடியும் அவன் கண் விழித்தபோது அவனுக்காகவே திறந்து வைக்கப்பட்டிருந்தது போல் நிலவறையின் மேற்கதவு திறந்திருந்தது. கதவுக்கு அப்பால் மந்திராலோசனை மண்டபத்தில் யாரோ பெண்களின் சிரிப்பொலியும் பேச்சொலியும் கேட்டன. அதற்குள் ஒரு குட்டித் தூக்கம் தூங்கி முடித்திருந்த சேந்தன் மேலே எழுந்து வந்தான். 'யார் கதவைத் திறந்து வைத்திருக்கக் கூடும்?' என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. 'தான் கைவலிக்கத் தட்டிய போது ஒருவரும் திறக்கவில்லை. அதன் பின்னால் கண்ணயர்ந்து விட்டபோது யாரோ பூனை போல் மெல்ல வந்து கதவைத் திறந்திருக்கிறார்கள். திறந்ததுதான் திறந்தார்கள்; ஆனால் கீழே கதவருகில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னைக் கவனிக்கவில்லையே!' என்று அவன் நினைத்தான்.

உள்ளிருந்து வெளியேறி மேலே வந்த பின் கதவை முன் போலவே அடைத்துத் தாழிட்டு விட்டு மந்திராலோசனை மண்டபத்தில் கும்மாளமடிக்கும் அந்தப் பெண்கள் யார் என்று பார்க்க வந்தான்.

தளபதியின் தங்கை பகவதி, ஆசிரியர் மகள் விலாசினி, மகாராணியாரின் உடன் கூட்டத் தோழிகளைச் சேர்ந்த இன்னும் இரண்டு மூன்று பெண்கள்—எல்லோரும் அங்கு உட்கார்ந்து சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சதுரங்க விளையாட்டினிடையே இலக்கியச் சர்ச்சையும் நடந்து கொண்டிருந்தது.

"ஏனடி, விலாசினி? தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் அகத்தியரின் மாணவரா? அல்லது அதங்கோட்டாசிரியரின் மாணவரா?" என்று கேட்டாள் பகவதி.

"சதுரங்க விளையாட்டினிடையே இந்தச் சந்தேகம் உனக்கு எங்கிருந்து முளைத்தது?" — விலாசினி சிரித்துக் கொண்டே கேட்டாள்.

அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த சமயத்திலா நாராயணன் சேந்தன் அங்கே தலையைக் காட்ட வேண்டும்?

"ஆ! அதோ, அகத்தியரே நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவரையே நேரில் கேட்டு விடலாம்" என்று நாராயணன் சேந்தன் குட்டையாயிருப்பதைச் சொல்லாமல் சொல்லிக் கேலி செய்தாள் ஒருத்தி.

"ஓ! இந்த அகத்தியரா? இவருக்கு உளவறியும் வேலையைத் தவிர வேறு எதுவும் தெரியாதே. பாவம்! இந்த உலகத்தில் எல்லோருடைய உடம்பும் மேல் நோக்கி வளருகின்றன என்றால், இவருடைய உடம்பு மட்டும் கீழ் நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது" என்று காதில் கேட்டு விடாமல் மெல்லச் சொல்லிச் சிரித்தாள் ஒருத்தி.

"நிலவறைக் கதவைத் திறந்தது நீங்கள்தானா?" என்று கடுமையான குரலில் அவர்களைக் கேட்டான் சேந்தன்.



விளையாட்டை நிறுத்தி விட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் அந்தப் பெண்கள். அவர்கள் பதில் சொல்லாமலிருந்தது அவனுடைய கடுமையை அதிகப்படுத்தியது.

"பெண்களாகச் சேர்ந்துகொண்டு விளையாட்டாக ஏதாவது செய்து விடுகிறீர்கள். அதனால் பெரிய பெரிய காரியங்கள் கெட்டுப்போய் விடுகின்றன."

"ஐயா, ஒற்றர்பெருமானே! உமக்குக் கோடி வணக்கங்கள் செலுத்துகிறேன். எங்களிடம் வம்புக்கு வராமல் போய்ச் சேருங்கள். உள்ளே இருந்து யாரோ கதவைத் தட்டுவது போலிருந்தது. 'திறக்கலாமா, வேண்டாமா?' என்று நீண்ட நேரம் யோசித்தோம். கடைசியில் நாங்கள் திறந்தபோது யாரும் உள்ளேயிருந்து வெளியில் வரவில்லை. நிலவறைக்குள் எட்டிப் பார்த்ததில் படியருகில் யாரோ உட்கார்ந்திருப்பது போல் தெரிந்தது. இரண்டு மூன்று முறை 'யார்? யார்?' என்று இரைந்து கேட்டுப் பார்த்தோம். பதில் இல்லை

நிலவறைக்குள் இருட்டாக இருந்ததனால் எங்களுக்குப் பயமாக இருந்தது. பேசாமல் திரும்பி வந்து விட்டோம்'' என்றுபகவதிஅவனுக்குப் பதில்கூறினாள்.

சேந்தன் மகாமண்டலேசுவரரைச் சந்திப்பதற்காக அங்கிருந்து சென்றான். அவன் மனத்தில் சந்தேகங்களும் வயிற்றில் பசியும், உடம்பில் அலுப்பும் வளர்ந்து கொண்டிருந்தன. அவற்றுக்கு இடையே வேறொரு வகை பயமும் அவனுக்கு ஏற்பட்டது. ''முன்கோபக்காரனும், செல்வாக்கு மிகுந்தவனுமான தளபதி வல்லாள தேவனிடம் பொய் சொல்லி ஏமாற்றி விட்டேனே.' அதன் விளைவு என்ன ஆகுமோ?'' என்று உள்ளூற அஞ்சிக் கொண்டிருந்தான்.

'இன்னும் கூற்றத் தலைவர் கூட்டம் நடந்துகொண்டுதான் இருக்கும். அதற்குள் எங்கே முடிந்திருக்கப் போகிறது?' என்ற எண்ணத்தினால் மகாமண்டலேசுவரர் பட்டி மண்டபத்தில்தான் இருப்பா



ரென்று கருதிக் கொண்டு அங்கே சென்றான். ஆனால் பட்டி மண்டபத்தில் யாருமில்லை. கூட்டமும் முடிந்து அவரவர்கள் தங்கும் இடங்களுக்குப் போயிருந்தார்கள். சேந்தனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

பட்டி மண்டபத்திலிருந்து அவன் திரும்பிய போது பின்புறம் தோள் பட்டையின் வலது புறம் ஒரு கை அழுத்தித் தொட்டது. நாராயணன் சேந்தன் அலறிவிட இருந்தான். தன்னைச் சமாளித்துக் கொண்டு பயத்தை அடக்கியவனாகத் திரும்பிப் பார்த்தான். பட்டி மண்டபத்துத் தூண் ஒன்றின் மறைவிலிருந்து ஆபத்துதவிகள் படையணியின் தலைவனான மகரநெடுங்குழைக்காதன், சேந்தனுக்கு முன்னால் வந்து நின்றான், அவன் அப்போதிருந்த நிலையைப் பார்த்தபோது சேந்தனுக்கு வியப்பு மட்டும் ஏற்படவில்லை. பயம்தான் அதிகமாக ஏற்பட்டது. மகரநெடுங்குழைக்காதனின் கண்கள் நெருப்புத் துண்டங்களைப் போலச் சிவந்திருந்தன. அங்கியும், மேலாடையும் அங்கங்கே தூசியும், அழுக்கும் பட்டுக் கிழிந்திருந்தன. முகத்திலும் கைகால்களிலும் சிராய்த்து இரத்தக் கசிவு தெரிந்தது. அந்த நிலையில் நாராயணன் சேந்தனைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தான் அவன்.

''என்ன ஐயா? இங்கே பட்டி மண்டபத்துத் தூண் மறைவில் நின்றுகொண்டு என்ன செய்கிறீர்?'' என்று கேட்டான் சேந்தன். குழைக்காதன் சேந்தனுக்குப் பதில் சொல்லாமல் அவன் முகத்தை உற்றுப் பார்த்து, மெல்லச் சிரித்தான். இயற்கையாகச் சிரிக்கின்ற சிரிப்பாக இல்லை அது.

''ஆபத்துதவிகளின் செயல் மட்டும் தான் கடுமையானதென்று இதுவரையில் கேள்விப்பட்டிருந்தேன். அவர்களுடைய பார்வையும், சிரிப்பும், கூட அல்லவா கடுமையாக இருக்கின்றன!''

சேந்தன் அதோடு பேச்சை விடவில்லை. மேலும் தொடர்ந்தான்: ''உங்கள் திருமேனியில் தென்படும் விழுப்புண் (காயங்கள்) களையும், கிழிசல்களையும் பார்த்தால் யாருடனோ போரிட்டு விட்டு வந்திருப்பதுபோல் தோன்றுகிறதே?''

''அப்பனே! என் உடம்பைப் பற்றிச் சொல்ல வந்து விட்டாய். உன்னையே கொஞ்சம் நிதானமாகப் பார்த்துக் கொள். நீ எப்படியிருக்கிறாய் என்பது தெரிய வரும்.'' எதையோ மறைத்துக் கொண்டு சிரிக்கிறாற் போன்ற அந்த மர்மச் சிரிப்பு; அது ஆபத்துதவிகள் படைத் தலைவனுக்கே உரியது போலும். பேச்சின் முடிவில் கடைசி வார்த்தையும் அவன் வாயிலிருந்து வெளிவந்து முடிந்த பின் அந்தச் சிரிப்பு மலர்ந்தது. குழைக்காதன் கூறிய பின்புதான் சேந்தன் தன் தோற்றத்தைத் தானே பார்த்துக் கொண்டான். ஏறக்குறைய தன் நிலையும் அதேபோல் இருந்ததைச் சேந்தன் அப்போதுதான் உணர்ந்தான். ''அடடே! இந்தத் தோற்றத்தோடு மகாமண்டலேசுவரரைப் பார்ப்பதற்கு வேறு கிளம்பி விட்டேனே! நல்லவேளை; இவன் இதைக்கண்டு சொல்லியிருக்காவிட்டால் இப்படியே போய் அவருக்கு முன்னால் நின்றிருப்பேன்'' என்று எண்ணியவனாய் மகரநெடுங்குழைக்காதனிடம் விடைபெற்றுக் கொண்டு உடைமாற்றி வருவதற்குக் கிளம்பினான்.

நாராயணன் சேந்தனின் தலை மறைந்ததோ இல்லையோ, அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவன் போல் பட்டி மண்டபத்துக்குள் நுழைந்து மந்திராலோசனைக் கூட்டம் நடந்த இடத்தில் எதையோ தேடினான் ஆபத்துதவிகள் தலைவன். அங்கே அவன் தேடிய பொருள்

எதுவோ அது கைக்குக் கிடைப்பதற்கு அதிக நேரம் ஆகவில்லை.

பட்டி மண்டபத்தில் கூற்றத் தலைவர்களின் மந்திராலோசனைக் கூட்டம் நடந்தபோது மகாமண்டலேசுவரர் எந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாரோ, அதன் கீழேதான் அந்தப் பொருள் அவனுக்குக் கிடைத்தது. அது வேறொன்றுமில்லை; ஆபத்துதவிகளின் முத்திரைச் சின்னம் பொறித்த ஒரு பட்டுத்துணி. கீழே குனிந்து எடுப்பதற்கு முன் அதைத் தான் எடுப்பதை எங்கிருந்தாவது, யாராவது பார்க்கிறார்களா என்று அவன் மனத்தில் சந்தேகம் ஏற்பட்டிருக்கும் போலும்! ஒருவேளை தன்னைச் சோதிப்பதற்காக - தான் அதைத் தேடி வருவதைப் பார்ப்பதற்காகவே-அவ்வளவு சுலபமாகப் போட்டு வைத்திருக்கலாமோ என்று அவன் பயந்திருக்க வேண்டும்.

அதனால்தான் அவ்வளவு தயக்கத்துடன் சுற்றிலும் பார்த்துக் கொண்டு அவன் அதை எடுத்தான். ஆனால் தன்னுடைய நிதானமும் முன்யோசனையும், தன்னை ஏமாற்றி விட்டன என்பதை அந்தத் துணியை எடுத்து வழக்கம்போல் இடுப்பில் அணிந்து, தலை நிமிர்ந்தபோது அவன் தெரிந்து கொண்டான்.

மேலேயிருந்து இரண்டு பெரிய குடை மல்லிகைப் பூக்கள் அவனுடைய முன் தலையில் உதிர்ந்து நெற்றியில் நழுவி விழுந்தன. மகர நெடுங்குழைக்காதன் திடுக்கிட்டு மேலே நிமிர்ந்து பார்த்தான்.


மேலே அந்த இடத்துக்கு நேரே அந்தப்புரத்தின் மாடத்தில் ஒரு பெண் முகம் விருட்டென்று திரும்பி மறைந்தது. திரும்பும்போது கருநாகம்போன்ற அந்தப் பெண்ணின் சடை சுழன்று அதிலிருந்த மல்லிகைப் பூக்களில் மேலும் சில அவன்மேல் உதிர்ந்தன. இளம் பெண் முகமாகத்தான் தெரிந்தது. திரும்பிய வேகத்தில் அவனால் முகத்தை அடையாளம் கண்டு நினைவில் வைத்துக் கொள்வதற்கு முடியவில்லை. "எவ்வளவு முன்னெச்சரிக்கையோடு நான்கு புறமும் பார்த்தேன்! மேலே பார்க்கத் தவறி விட்டேனே!" என்று உதட்டைக் கடித்துக் கொண்டான் மகரநெடுங்குழைக் காதன். சிறிது நேரம் ஏதோ சிந்தித்துக் கொண்டு அங்கேயே நின்றான். கீழே கிடந்த அந்தக் குடை மல்லிகைப் பூக்களை ஒன்று விடாமல் பொறுக்கித் தன் அங்கியில் மறைத்து வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் புறப்பட்டுச் சென்றதும் அங்கு மற்றோர் ஆச்சரியம் நிகழ்ந்தது. உடை மாற்றிக் கொண்டு மகாமண்டலேசுவரரைச் சந்திக்கச் சென்றுவிட்டதாக நாம் யாரைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறோமோ, அவன் பட்டி மண்டபத்து மேல் கோடித் தூண் ஒன்றின் மறைவிலிருந்து வெளிவந்தான். உண்மையில் நாராயணன் சேந்தன் மகரநெடுங்குழைக் காதனிடம் விடைபெற்றுக் கொண்டு போவதுபோல் போக்குக் காட்டினானே ஒழிய அங்கிருந்து போய் விடவில்லை. பட்டி மண்டபத்தில் ஆபத்துதவிகள் தலைவன் அலங்கோலமான நிலையில் தனியாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடனே சேந்தனைப் போல் அறிவுக் கூர்மையுள்ள ஒற்றனுக்குச் சந்தேகங்கள் ஏற்படாமலிருக்குமா? தெளிவற்ற பல குழப்பமான எண்ணங்களும், சந்தேகங்களும் அவனுக்கு உண்டாயின. "ஆபத்துதவிகள் தலைவன் பட்டி மண்டபத்தில் தனியாக என்ன செய்கிறான்?" என்பதைப் பார்த்து வைத்துக் கொண்டால் பின்பு மகாமண்டலேசுவரர் கேட்கும்போது கூறுவதற்கு வசதியாக இருக்குமென்றுதான் அவன் மறைந்திருந்து அதைக் கண்காணித்தான்.

அதன்பின் சேந்தன் பட்டி மண்டபத்திலிருந்து வெளியேறிப் பராந்தகப் பெருவாயிலுக்கு வந்து நின்றான். பராந்தகப் பெருவாயிலிருந்து மேற்கு நோக்கி இரண்டாங்கோட்டை வாசல் திருச்சுற்றினுள்ளே சென்றால் அரண்மனை விருந்தினர் மாளிகைகள் பூந்தோட்டத்துக்கு நடுவே இருந்தன. அந்த மாளிகைகளில் ஒன்றில்தான் மகாமண்டலேசுவரர் தங்கியிருக்க வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும்.

கோட்டைக்குள் யாரோ குதிரையில் வரும் ஒலி கேட்டு அவன் பராந்தகப் பெருவாயிலின் முகப்பில் தயங்கி நின்றான். வருவது யார் என்று பார்த்துவிட்டு அதன்பின் விருந்தினர் மாளிகைக்குட்போகலாமென்பது அவன் எண்ணம். ஒரே குதிரையில் இரண்டு பேர்கள் ஏறிக் கொண்டு வருவதைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. முன்னால் உட்கார்ந்திருந்தவன் இன்னாரென்று தெரிந்து கொள்ள முடியவில்லை. தோற்றத்திலுள்ள நிலையைக் கொண்டு பார்த்தால் ஏதோ அரசாங்கத் தூதன் மாதிரி இருந்தது. குதிரை அருகில் வந்ததும் பின்னால் உட்கார்ந்திருந்த இரண்டாவது ஆளின் முகம் தெரிந்தது. அதைப் பார்த்ததும் சரேலென்று பூந்தோட்டத்தின் அடர்ந்த பகுதிக்குள் புகுந்து தன்னை மறைத்துக் கொண்டான் சேந்தன். கோட்டைக்குள் வந்த குதிரையில் வீற்றிருந்த இரண்டாவது ஆள் வல்லாளதேவன். (தொடரும்)

என்றும் சிறந்த துணிகள்



மடிப்பு கலங்காத நன்றாக சுருக்கப்பட்ட துணிகள்

"மேனிகோ", "மாபினைஸ்டு" & "மாப்ரிமா" மார்க்குகள் கொண்ட மபத்லால் துணிகள் சுலபமாக உலரவும், மடிப்பு கலங்காமலிருப்பதற்கும் இரு முறை டெஸ்ட் செய்யப்பட்டவை. இவைகள் பிரத்யேகமாக பாடம் செய்யப்பட்டிருப்பதால் அணியும்போது மடிப்பு கலையாது. சலவைக்குப் பிறகும் அதிகமான இஸ்திரி தேவையில்லை.

ஸ்ரீ மபத்லால் பைன் ஸ்பின்னிங் & மான்யு. கம். லிட். நவஸாரி.

மா 81

கிருஷ்ணாவின் குமாரி

கல்லூரிக்குச் செல்லுகிறாள்

கிருஷ்ணாவுக்கு இப்பொழுதெல்லாம் சந்தோஷத்திற்குக் குறைவே கிடையாது. அவனுடைய குடும்பத்திலேயே முதன் முதலாக காலேஜுக்குப் போவது அவன் பெண் சரோஜாதான். அவளால் காலேஜில் தன் பணக்கார சிநேகிதிகளுடன் சரி சமமாகப் பழக முடிகிறது. ஏன்? அந்த அளவிற்கு அவளுடைய ரேயான் புடவைகள் விலை சரஸமாக இருந்தாலும் பகட்டோடு மின்னுகின்றன. கிருஷ்ணாவுக்கு அவற்றை வாங்கிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு வசதியும் இருக்கிறது.

முதன் முதலில் 1950ல் நாங்கள் ரேயான் நூல்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்தோம். எங்கள் தயாரிப்பு இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தியாவிலுள்ள அநேக கிராமங்களிலும், டவுன்களிலும் உள்ள ஆயிரக் கணக்கான நெசவுத் தொழிலாளர்களுக்கு எங்கள் ரேயான் நூல்களைக் கொடுத்து சேவை செய்கிறோம்.



நாங்கள் தற்பொழுது சன்னமான நூல்கள், வெளுக்கப் பட்ட நூல்களோடு தேசத்திலேயே முதன் முதலாக கலர் நூல்களையும் தயார் செய்ய முன் வந்திருக்கிறோம். இந்தியாவில் ரேயான் தொழிலை முன்னுக்குக் கொண்டு வந்து, பல புது அபிவிருத்திகள் செய்து, நம் தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபடுகிறோம் என்று நாங்கள் மிகவும் சந்தோஷப் படுகிறோம்.

TRAYONS

திருவாங்கூர் ரேயான்ஸ் லிட்.,

இந்தியாவில் ரேயான் நூலை முதன் முதலாகத் தயாரித்தோர்

தொழிற்சாலை
ரேயான்புரம் போஸ்ட்
கேரளா

விற்பனை ஆபீஸ்,
2/6, செகண்ட் லேன் பீச்
சென்னை - 1

ஸ்டாக்கிஸ்டுகள்: **ரேயான் ட்ரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

சென்னை: 27, பவழக்காரத் தெரு ● சேலம்: 68/416, மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை ● மதுரை: 114-A, தெற்கு மாசி வீதி ● கோயமுத்தூர்: யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ், அவினாசி ரோடு

[ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் பற்றிக் கல்கி நேயர்களிடமிருந்து வந்துள்ள கடிதங்களிலிருந்து மேலும் சில கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன —ஆசிரியர்]

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள்

கல்கி ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைத் திரட்டி, ''அன்னியக் கடன்களும் அவற்றின் விளைவும்'' என்னும் புத்தகவடிவில் வெளியிட்டதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டை வரையில் ஒன்றையும் விடாது படித்து மகிழ்ந்தேன். எல்லாக் கட்டுரைகளும் உபயோகமுள்ள பல விஷயங்களைக் கிரமப்படுத்தித் தெளிவுடன் வாதிக்கின்றன. இவ்விஷயத்தைப் பற்றி, இன்னும் சில வருஷங்களுக்காவது இந்தப் புத்தகம் இன்றியமையாததாக இருக்கும்.

அடிப்படையாக, ஸ்ரீ சங்கராச்சாரியார் சொல்லிய கருத்துக்கள் என் மனத்தைக் கவர்ந்தன. ஜகத்குருவின் கருத்துக்களை முகவுரையாக கல்கி இப் புத்தகத்தில் பிரகசித்ததற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஒரு நோயாளியைக் குணப்படுத்த முன்வரும் வைத்தியன் எப்படித் தான் அந் நோய்க்கு ஆளாகாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமோ, அதுபோல் இந்தியா உலகத்துக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்றால், உலக நாடுகளின் (கடன்)ருணத்திலிருந்து முற்றிலும் தன்னை விடுவித்துக்கொள்ளவேண்டும்.

தம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் ஒரு வரம்பு நிச்சயித்துக் கொள்ள வேண்டும் என்றே எனக்கும் தோன்றுகிறது. 'மாந்தர்களின் நலனுக்காகப் பாடுபடுகிறோம்' என்ற நல்லெண்ணத்துடன் தவறான பாதைகளில் சென்று தவறுகள் செய்த சரித்திரப் பெரியார்களுள் ஆடாம் ஸ்மித், ரூஸோ, காரல் மார்க்ஸ் தலைசிறந்தவர்கள். இம் மூவரும், எது நாக்குக்கு ருசியோ அதையே விரும்பினர். அதுதான் வாழ்க்கைக்கு அவசியம் என்று ஸ்தாபித்தனர். உடல் பசியைப் பெரிதாக அவர்கள் எண்ணினார்களே தவிர ஆத்ம சாந்தியைப் புறக்கணித்து விட்டனர். நம் நாட்டு ரிஷிகள் வம்சத்தில் வந்த சந்ததிகள் இப்படிப்பட்ட மேல்நாட்டு அறிஞர்களின் போதனைகளுக்கிணங்கி வாழ்க்கையின் முன்னேற்றத்தை அளக்கின்றனர். இந்தப் போக்கை பதிந்து நாம் மிக ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். இல்லாவிடில் நமது உண்மை நாகரிகம் நசித்து, மக்கள் சமுதாயத்திலிருந்தே மறைந்து விடும்.

பொது மக்கள் நிதி நிர்வாகத்தில் கண்ட தவறுதல்களைக் கல்கி ஆராய்ச்சி அரங்கம் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறது. தன் இச்சைப்படி வகுத்த திட்ட இனங்கள், சர்க்கார் சிப்பந்திகளின் தாறுமாறுமான விஸ்தரிப்பு, செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள் சர்க்கார் கஜானாவிலிருந்து சலுகையுடன் செலவு செய்வது, திறமையில்லாதவர்களுக்குத் தனிச் சலுகை காட்டுவது, சர்க்கார் பணத்தைச் செலவு செய்வதில் கண்மூடித்தனம்—இவைதான் நமது திட்டத்தின் லக்ஷணங்கள். இப்போதாவது நமது அரசாங்கம் விழித்துக்கொண்டு நிலைமையைச் சீர்திருத்தாவிட்டால் அடுத்த பத்தாண்டுகளில் சீர்கேடுறுவது தவிர்க்க முடியாதது. அந்த நிலைமை ஏற்படுமேயானால் கல்கி ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைக் கையில் வைத்துக் கொண்டு ''எங்களை ஒருவரும் எச்சரிக்கவில்லையே?'' என்று அதிகார வர்க்கத்தினர் சாக்குப் போக்குகள் சொல்ல முடியாது.

பெங்களூர்
23—9—58 டி. வி. குண்டப்பா

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் அடங்கிய புத்தகம் சிறப்புற்று விளங்குகிறது. திரு மஸானியின் கட்டுரையில் உருப்படியான விஷயங்கள் பல அடங்கியிருக்கின்றன. எனினும் கனடா நாட்டின் உதாரணத்தை ஏனோ ஒருவரும் குறிப்பிடவில்லை.

1946-ம் ஆண்டில் கனடா பொருளாதாரத் துறையில் பின் தங்கிப் போன நாடு. ஆனாலும் சென்ற 12 ஆண்டுகளுக்குள் அந் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் இரண்டு மடங்குக்கும் மேலாக உயர்ந்திருக்கிறது.

அயல்நாட்டுத் தொழிலதிபர்கள் தங்கள் நாட்டுத் தொழில்களில் முதலீடு செய்வதைக் கனடா வரவேற்றதோடு, தங்களுக்குத் தேவையான முதலீட்டையும், செயல் திறனையும் தங்களிடம் சேர்க்கப் பல சலுகைகள் அளிக்கிறது. கனடா தேசத்துப் பங்குகளில் முதலீடு செய்து அதனால் கிடைக்கும் வருமானம் நூற்றுக்கு இரண்டு சதம் என்று குறைந்து போனாலும், ஆங்கிலேய முதலாளிகள் அதைக் கொண்டே திருப்தியடைகின்றனர். உதாரணமாக ஹட்ஸன் வளை குடாக் கம்பெனியின் பங்குகளைச் சொல்லலாம். தன் நாட்டிலேயே 5 சதவீதம் வட்டி கொடுக்கக் கூடிய அரசாங்கக் கடன் பத்திரங்கள் இருந்தாலும் கனடாவில் முதலீடு செய்வதை அவர்கள் விரும்பினர். காரணம், அங்கே தொழில் வளர்ச்சிக்குத் தடைகள் கிடையாது. வரிகளின் சுமைக் குறைவு, ஏன், மற்றெல்லா நாடுகளில் இருப்பதைவிட இங்கே குறைவு. இந்தத் தேசத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதைப் போல் வேறெந்த நாட்டிலும் உயர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் நாணயம்கூட அமெரிக்க டாலரைக் காட்டிலும் ''கடின'' நாணயமாக ஆகிவிட்டது.

கனடாவின் உதாரணம் போதாதென்றால் மேற்கு ஜெர்மனியையும், ஜப்பானையும், அல்லது 1951-ம் ஆண்டுக்குப் பின் இங்கிலாந்து அடைந்த அபிவிருத்தியைக் கவனித்தால் இதே உண்மை இன்னும் தெளிவாகப் புலப்படும். கம்யூனிஸ்ட்களும் சோஷலிஸ்டுகளும், வரையறை விதிப்பதில் பிரியம் கொண்ட சர்க்கார் திட்டங்களும் அபிவிருத்தியைப் பெருக்குவதைக் காட்டிலும் தனித் தொழில் அதிபர்கள் நிச்சயமாகத் தொழில் வளத்தைப் பெருக்குவார்கள். ஒவ்வொருவரும் மனிதத்தன்மையுடன் கூடியவன்

என்பதை மேலே சொன்ன கட்சிவாதிகள் மறந்து, அவனை ராஜ்யத்தில் ஒரு சின்னஞ் சிறு துளி என்று எண்ணிவிடக் கூடும். ஆனால் ஒரு தொழிலதிபர் இவ்வாறு எண்ணிவிட முடியாது. அவ்வாறு எண்ணினால் அவருடைய ஸ்தாபனம் நீண்ட நாள் நீடிக்காது.

சென்னை—1
30—9—58
ஜி. டபிள்யூ. டென்பி

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளெல்லாம் எளிய நடையில் சாதாரண ஜனங்களுக்கும் விளங்குமாறு எழுதியிருப்பதை நான் பாராட்டுகிறேன். நான் அவற்றை யெல்லாம் படித்து ரசித்தேன். என்னைப்போல் இவற்றை எல்லாம் படித்து மற்றவர்களும் பயனடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

வெற்றிகரமாக இந்த அரங்கத்தை நடத்தி முடித்ததற்குக் கல்கியைப் பாராட்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி
2—9—58
வி. சேஷையாமி

★

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலையில் இக் கட்டுரைகள் முக்கியமான விஷயத்தைப் பற்றி வெகு திறமையாக விவாதித்திருக்கின்றன. கட்டுரையாசிரியர்கள் கூறிய கருத்துக்களை வாசகர்கள் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளா விட்டாலும், இவ் விஷயத்தைப் பற்றிய உண்மைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன என்பது நிச்சயம். வாசகர்களுக்கு இம்மாதிரி அறிவுக் கட்டுரைகள் வழங்குவதுதான் ஒரு பத்திரிகை செய்யக் கூடிய உயர் பணி.

பம்பாய்
29—8—58
வி எச். ஜே. மூாஜெஹனஸ்
ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி

★

என்னைப் போன்ற சாதாரண மக்களுக்கு உங்கள் ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் சிக்கல் மிகுந்த இந்த விஷயத்தில் அறிவூட்டுகின்றன.

நான் முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை. நான் இக்கட்டுரைகளிலிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல; இவ்விஷயத்தைப் பற்றி நான் கொண்டிருந்த சில தவறான கருத்துக்களையும் திருத்திக் கொள்வதற்கு முடிந்தது. கல்கிக்கு என் பாராட்டுக்கள்.

பெங்களூர்
21—8—58
கே. ஜி. பரமேச்வரன்
(ஆக்கோ பாட்டரிஸ் லிமிடெட்)

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் ருசிகரமாக அமைந்திருக்கின்றன. நான் இவற்றை எங்கள் கம்பெனியின் அயல் நாட்டுக் கூட்டாளிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். இந்தியாவில் இவ்விஷயத்தைப் பற்றி என்ன விதம் சிந்திக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள இவை உதவும்.

நாட்டின் இதர பிரச்னைகளைப் பற்றியும் கூட இம்மாதிரி கட்சிச் சார்பற்ற அறிஞர்களைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினால் பொதுமக்களுக்கு நற்பயன்படுவதோடு அரசாங்கத்துக்குக்கூட உதவியாக இருக்கும். இம்மாதிரி முயற்சிகளைத் தொடர்ந்து செய்யவும்.

பம்பாய்
26-8-58
எப். மர்டோச்
ஜாப் பாலக் அண்டு கம்பெனி (பிரைவேட்) லிட்.

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளை மிகவும் கவனமாகப் படித்தேன். முக்கியமாக ஒரு விஷயம் என் மனத்தைக் கவர்ந்தது.

நுட்பம் மிகுந்த விஷயங்களைப் பற்றி எவ்வளவு எளிமையாகவும் தெளிவாகவும் தமிழில் விளக்க முடிகிறது என்பதைக்கண்டேன். தமிழ் மொழியின் வளமே வளம். நம் நாட்டுக்கு ஆட்சி மொழியாக எந்த பாஷை இருக்க வேண்டுமென்று ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தினால் நான் தமிழுக்குத் தான் வோட்டுக் கொடுப்பேன். ஆம், நான் கேரள ராஜ்யத்தைச் சேர்ந்தவனாயினும் தமிழுக்குத்தான் வோட்டளிப்பேன்!

ஒரு வேண்டுகோள். ஒரு விஷயத்தில் எங்களுக்கு இவ்வளவு விரிவாகச் சிந்தனைக்கு விருந்தளித்து விட்டு, அத்துடன் நின்று விடக் கூடாது. ஜனநாயக ஆட்சிமுறையை நாம் திறம்பட நடத்த நாம் இன்னமும் தகுதியுடையவர்களாக ஆகவில்லை. நாம் சோம்பேறிகளாக ஆகி விட்டோம். அறிவைப் புகட்டி, ஆர்வத்தை எழுப்பி, ராமராஜ்யத்தை ஸ்தாபிக்க, பல ஆராய்ச்சி அரங்கங்களை நீங்கள் நடத்த வேண்டும். கல்கிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பம்பாய்-1
18—8—58
ஏ வி. அய்யர்

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் எல்லாம் தேச முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களால் தேசாபிமான உணர்ச்சியுடன் தான் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் கருத்துக்கள் சர்க்கார் கருத்துக்கு மாறுபட்டவையாக இருந்தாலும் அவர்களுடைய மனப்போக்கில் தேச நலன்தான் முன் நிற்கிறது. அதே மாதிரி மனப்பான்மையுடன் அரசாங்கமும் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

இப்போது அன்னிய உதவி கிடைத்துவிட்ட படியால் நெருக்கடி தீர்ந்து விட்டதென்று நிம்மதியுடன் இருக்காமல் வருங்காலத்தில் மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பூனா-3
5-9-58
எஸ். எல். கிர்லோஸ்கர்

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளால் என் போன்று வெளிநாட்டில் பல வருஷங்களாக வாழ்ந்து வரும் இந்திய சகோதரர்களுக்கு இந்தியாவின் பொருளாதாரத்தை அறிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பல அறிஞர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்ற கல்கியைப் போற்றுகிறேன்.

சைகோன்
4—9—58
எஸ். சிங்காரவேலு

நவராத்திரி

மற்றும்

தீபாவளி

ஜவுளிகளுக்கு....

நல்லி சின்னசாமி செட்டி

(பனகல் பார்க் எதிரில்)

தியாகராயநகர் - - சென்னை-17

டெலிபோன் நெ. 88115

அசல் கொள்ளேகாலம் பட்டில் தயாரித்த

- ★ காஞ்சீபுரம் சேலைகள்
- ★ பாவாடைத் துண்டுகள்
- ★ ரோளி - பீஸ்கள்

அற்புதமான வேலைப் பாடுகளமைந்த

- ★ நூல் சேலைகள்
- ★ ஜரிகை வேஷ்டிகள்
- ★ அங்கவஸ்திரங்கள்

இத்துடன் சகலவிதமான நவீன மில் ரகங்களும் தற்பொழுது ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

பின்னி

ரகங்கள் அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்

A. R. C.



5000 ஆண்டுகளாக
வளரும் கைத்தொழில் கலை


தெளிவான வடிவு — நுணுக்கமான கலையின் திறமான நிறைவேற்றம் — இவற்றை மோகஞ்சோதரோ, ஆரப்பாவின் காலத்திலிருந்தே காத்துப் பேணி வருகிறது நமது கலைப் பரம்பரை.

ஆனால் சமூகத்திலோ பழையவை மறைந்து புதியவை மலர்வது இயல்பு. கைத்தொழில் போர்டு அமைத்துத் தரும் திட்டங்கள் புதிய வகைத் துறைகளையும் உபகரணங்களையும் கலைஞருக்குக் காட்டித் தருகின்றன.

கைத்தொழில் என்றுமே ஒரு கலைதான். ஆனால் எதிர்காலக் கைத்தொழில் கலைஞன் தன் கலை நுணுக்கத்தில் கைதேர்ந்தவனாகத் திகழ்வான்.




அகில இந்தியக் கைத்தொழில் போர்டு



கைத்தொழில் பொருள்கள் — ஒவ்வொன்றும் உயர்ந்த ரகமே!

DA 58-103


காகிதமும் கத்தரிக்கோலும்





காகிதத்தையும் கத்தரிக்கோலையும் வைத்துக் கொண்டு எத்தனையோ அற்புதமான வேடிக்கைகளையெல்லாம் செய்யலாம். நெட்டிலிங்க மரம் பார்த்திருக்கிறீர்களா? சில விநாடிகளில், அந்த நெடிதுயர்ந்த மரத்தையும் அந்த மரத்துக்கு இணையான ஏணியையும் காகிதத்தில் சிருஷ்டி செய்யும் வித்தை முறையை உங்களுக்கு இப்போது சொல்லித்தரப் போகிறேன். இதற்கு வேண்டியதெல்லாம் வர்ணக் காகிதங்கள் கொஞ்சம், நூல், ஒரு கத்தரிக்கோல். (வர்ணக் காகிதமானால் பார்வைக்குக் கவர்ச்சிகரமாக இருக்கும். இல்லாவிட்டால் நியூஸ் பேப்பரிலும் செய்யலாம்) 12 அங்குல அகலமும் 15 அங்குல நீளமுமான மூன்றுவித வர்ணக் காகிதத் துண்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள். மூன்று வர்ணக் காகிதத்தையும் ஒரு காகிதத்தைச் சுருட்டி அதன் முடிவு முனையில் அடுத்த காகிதத்தை இணைத்துப் படம் 1-ல் காட்டியபடி சுருட்டிக் கொள்ளுங்கள். மிகவும் இறுக்கிச் சுருட்டக் கூடாது. மடிப்புப் பிரியாதிருக்க ஒரு முனையில் நூலால் கட்டிவிடுங்கள். இனி நூல் கட்டாத மறு முனையை ஒரு கத்தரிக்கோலால் 4 அங்குல நீளத்துக்குப் படம் 2-ல் காட்டியபடி நான்கு பாகமாக வெட்டுங்கள். வெட்டிய பின் படம் 3-ல் காட்டியபடி அவைகளை வெளிப்புறமாக வளைத்து மடித்து விடுங்கள். இடது கையில் காகிதச் சுருளின் வெட்டப்படாத அடிப் பாகத்தைப் பிடித்துக் கொண்டு தொங்கும் காகிதத் துண்டுகளின் உச்சியிலுள்ள ஒரு காகிதத்தைப் பிடித்து மேலே இழுத்தால் படம் 4-ல் காட்டியபடி நெட்டிலிங்க மரம் தயாராகி விடும்!

ஏணி செய்வதற்கு, முதலில் செய்தது போலவே காகிதத்தைச் சுருட்டிக் கொள்ள வேண்டும். இரு முனைகளிலும் நூலைச் சுற்றி முடியுங்கள். காகிதச் சுருளின் இரு முனைகளிலும் 4 அங்குலம் தள்ளி நடுவில் 4 அங்குல நீளத்துக்குப் படம் 5-ல் காட்டியபடி வெட்டிக் கொள்ள வேண்டும். இனி, சுருளின் இரு முனைகளும் கீழ்நோக்கி இருக்கும்படி படம் 6-ல் காட்டியபடி மடித்துக் கொண்டு வெட்டப்பட்ட பாகத்தின் உச்சிக் காகிதத்தைப் பிடித்து மெதுவாக மேல்நோக்கி இழுத்தால் படம் 7-ல் காட்டியுள்ளபடி உயரமான ஏணி உண்டாகும். மந்திரமல்ல மாயமல்ல. கைத்திறமையும் கத்தரிக்கோலின் மகிமையுமே! செய்து பார், ரொம்ப சுலபம்

மூர்த்தி







9. கார் கவிழ்ந்தது!

சேகரும் ரங்கசாமியும் நகரத்தைத் தாண்டி வெகு தூரம் வந்து விட்டார்கள். முன்னால் போகும் காரின் அடையாளங்கள் எதுவுமே தெரியவில்லை. ஆனால் ரங்கசாமி நம்பிக்கையை இழக்காமல் காரை விரட்டி முன்னேறிக் கொண்டிருந்தான். திடீரென்று வெகுதூரத்தில் பின்னால் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. சேகர், ரங்கசாமி இருவரும் உற்றுக் கேட்டார்கள். சந்தேகமில்லாமல் அது ஒரு மோட்டார் கார் என்ஜினின் சத்தம்தான். இதைத் தீர்மானிக்கு முன் ஒரு கார் இவர்களுடைய காரை விருட்டென்று கடந்து முன்னால் சென்றது. அந்தக் காரைக்கண்ட ரங்கசாமி கத்தினான். "அந்தப் பயல்களின் கார்தான். அதே கார்தான்! நம்மையல்லவா அவர்கள் பின் தொடர்ந்து வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது? இத்தனை நேரம் எங்கே, என்ன செய்தார்கள்?" என்று சொல்லிக் கொண்டே ரங்கசாமி தனது காரின் வேகத்தை இன்னும் அதிகமாக்கினான்.

"நம் வருகைக்காகத்தான் அவர்கள் எங்கோ ஒளிந்து காத்திருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். தவிர நம்மையும் நமது காரியங்களையும் அவர்கள் கண்காணிக்கிறார்கள். நம்மிடமிருந்து தப்பிச் செல்வது அவர்கள் நோக்கமில்லை. சந்தேகம் கொண்ட நம்மைத் தங்கள் வழியிலிருந்து விலக்கி ஒழித்துக் கட்டினால்தான் அவர்களுக்கு நிம்மதி. ஆகவேதான் நம்மைப் பின்தொடருகிறார்கள்" என்றார் சேகர்.

முன்னால் சென்ற கார் திடீரென்று இவர்கள் பார்வையிலிருந்து மறைந்து விட்டது. நேரான ரஸ்தாவிலிருந்து குறுக்கே மரங்கள் அடர்ந்த தோப்பு வழியே ஒரு பாதை பிரிந்து செல்லுகிறது. அதன் வழியாகப் போனால் மறுபடியும் நகரத்துக்குத்தான் கொண்டுவிடும். அவர்கள் அதில்தான் திரும்பித் தப்பித்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டினான் ரங்கசாமி. அதே சமயம் பேரிரைச்சலுடன் ஒரு ஜீப் கார் இவர்களைக் கடந்து சென்றது. அதிலிருந்தவர்கள், சாதாரண மனிதர்கள் இல்லை. போலீஸ்காரர்கள்! பாதைபிரியும் இடத்தில் ஒரு விநாடி தாமதித்த ஜீப் குறுக்குப் பாதையில் இறங்கித் தன் பிரயாணத்தைக் கன வேகமாகத் தொடர்ந்தது. "போலீஸும் அந்த அயோக்கியர்களைப் பிடிக்கத்தான் போகிறார்கள் போலிருக்கிறது" என்றான் ரங்கசாமி.

'எதற்காக இருக்கும்?' என்று சிந்தனையுடன் மௌனமானார் சேகர். கொஞ்ச நேரத்தில் போலீஸ் ஜீப்பும் அதன் முன்னால் போய்க் கொண்டிருக்கும் மற்றொரு காரும் இவர்களின் பார்வையில் பட்டன. போலீஸ் ஜீப் வர வரத் தன் முன்னால் போய்க் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தினரின் காரை நெருங்கிக் கொண்டிருந்தது. ஜீப்பிலிருந்து ஒரு போலீஸ்காரர், வெளியே ஒட்டில் வந்து தொத்திப் பிடித்துக் கொண்டு நின்றபடி சதிகாரர்களின் காரை நெருங்கியதும் அதில் தாவிக் குதிக்கத் தயாராக இருந்தார்.

அதோ, ஜீப் சதிகாரர்களின் காரை நெருங்கி விட்டது. தோளோடு தோள் இடித்தபடியே இரண்டும் சில விநாடிகள் சென்றன. பிறகு ஒன்றையொன்று முந்திக் கொள்ள முயன்றன. ஒரு திருப்பத்தில் திடீரென்று குறுக்கே ஒடித்துத் திருப்பிப் பாய்ந்து முன்னேறியது சதிகாரர்

களின் கார். இதை எதிர்பாராத போலீஸ் ஜீப் விபத்தைத் தவிர்க்க, பிரேக் போட்டுத் திருப்பவே, நிலைதடுமாறிப் பாதையோரத் துப் பள்ளத்திலே தலைகுப்புறக் கவிழ்ந்தது.

இத்தனையையும் கவனித்துக் கொண்டு பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ரங்கசாமி உருண்டு கிடந்த ஜீப்பின் அருகில் வந்ததும், ''வாங்க சார்! நம்ம காரிலே ஏறிக் கொள்ளுங்கள்'' என்று அழைத்தான். ஜீப்பிலிருந்த நான்கு போலீஸ்காரர்களில் ஒருவருக்குப் பலத்த காயம். அவரைக் கவனிக்கும்படி ஒருவரை நிறுத்திவிட்டு, மற்ற இருவரும் ரங்கசாமியின் காருக்குள் வந்து உட்கார்ந்ததும், மறுபடியும் ஓட்டம் தொடர்ந்தது. ''முன்னால் போகும் அந்தக் காரை எதற்காக அப்படித் துரத்திப் பிடிக்கப் பார்க்கிறீர்கள்?'' என்று தம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கேட்டார் சேகர்.

''அது திருட்டுக் காருங்க. நகைக் கடை நாராயண செட்டியாரோட காரு அது. நேற்று மாலை பூங்காவுக்கு வெளியே காரை நிறுத்திவிட்டுக் குழந்தைகளோடு உள்ளே போயிருக்கிறார் செட்டியார். ஞாபக மறதியாகக் காரைப் பூட்டிச் சாவியையும் அதிலேயே வைத்து விட்டுப் போய்விட்டார். இந்தப் பயல்கள் அதைக் கிளப்பிக்கொண்டு போய் விட்டார்கள். செட்டியாரிடமிருந்து எங்களுக்கு இரவு ஏழு மணிக்குத்தான் தகவல் வந்தது. அப்போதிருந்து இரவு முழுவதும் தேடியலைந்தோம். ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் இவர்கள் கன வேகமாக நகரத்தை விட்டு வெளியே போய்க் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தோம். அதிலிருந்து துரத்திக்கொண்டு வருகிறோம்'' என்றார் கான்ஸ்டபிள் 1087.

''அந்த அயோக்கியர்களின் காரும் திருட்டுச் சொத்துத்தானா?'' என்றான் ரங்கசாமி. அவர்கள் மீது வேறுவிதமான சந்தேகம் போலீஸாருக்கு இல்லை என்பதை அறிந்த சேகருக்கு நிம்மதியாக இருந்தது.

ரஸ்தா ஒரு இடத்தில் இரண்டாகப் பிரிந்தது. முன்னால் சென்ற கார் எந்த வழியாகப் போயிருக்கும் என்பதை எப்படி நிர்ணயிப்பது? ரங்கசாமி சட்டென்று காரிலிருந்து கீழே குதித்து, கையிலிருந்த பாட்டரி விளக்கினால் ரஸ்தாவை உற்று நோக்கினான். புதிதாகச் சென்ற கார் டயரின் அடையாளங்களை அவன் கண்கள் ஆராய்ந்தன. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாகக் காரில் ஏறி உட்கார்ந்து அதைக் குறிப்பிட்ட ஒரு பாதையில் செலுத்தலானான் ரங்கசாமி. மோட்டாரை வேகமாக ஓட்டும் ரங்கசாமியின் திறமையைப் போலீஸ்காரரே வியந்து பாராட்டினர்.


தூரத்திலே புலித்தேவன் தோப்பு தெரிந்தது. ஊரையே ஒரு சுற்றிச் சுற்றிக் கொண்டு மறுபடியும் ரங்கசாமி புலித்தேவன் தோப்பை நெருங்கிக் கொண்டிருந்தான். சதிகாரர்கள் அதுவரையில் கண்ணில் படவில்லை. தப்பி விட்டார்கள் என்று நம்பிக்கை இழந்து விட்டார் சேகர். போலீஸாரின் முகத்திலும் அசடு வழிந்தது. ரங்கசாமிக்குக் கூடக் குறைதான். இத்தனை வேகமாக அவர்களைப் பின்தொடர்ந்தும் கடைசியில் ஏமாந்து விட்டோமே என்று ஏக்கமாக இருந்தது அவனுக்கு. அதைவிட, 'கிட்டு என்ன ஆனான்?' என்ற விவரத்தை அறிய முடியவில்லையே என்பதை நினைத்த போது ரொம்ப வேதனையாக இருந்தது. உற்சாகம் குன்றிப்போன ரங்கசாமி தனது காரின் வேகத்தைக் குறைத்து விட்டான். மங்கிய நிலவொளியில் மொந்தாகாரமாகத் தெரிந்த புலித்தேவன் தோப்பு இப்போது வர வரத் தீர்க்கமாகத் தெரியலாயிற்று. மேலே என்ன செய்வது என்ற சிந்தனையிலே எல்லோரும் மூழ்கியிருக்கும்



போது புலித்தேவன் தோப்புக்கு அப்பாலிருந்து ராட்சதனின் கண்களைப் போல் இரண்டு சுடர்விடும் விளக்குகள் பளீரென்று ஒளி வீசிக் கொண்டு நகர்ந்தன. அது ஒரு மோட்டாரின் 'ஹெட் லைட்'தான். கண்ணைக் கூச வைக்கும் அந்த ஒளியிலே ஒரு விநாடி ரங்கசாமி திக்குமுக்காடிப் போனான். வெகு வேகமாக அந்த ஒளி இவன் காரை நோக்கி வரலாயிற்று. இரண்டாவது முறையாக இதன் மீது மோதிக் கவிழ்க்கவே அத்தனை வேகமாகக் கார் வந்து கொண்டிருந்தது.

அதே சமயம் இரண்டு கார்களுக்கும் இடையிலே ஒரு உருவம் தரையிலிருந்து தள்ளாடித் தடுமாறி எழுந்திருந்தது. அதன் கையில் ஏதோ பெட்டி போன்ற ஒரு பொருள். மிகுந்த பிரயாசையுடன் அந்த உருவம் அதைத் தன் தலைக்குமேலே

கதையும் கணக்கும்



ஒரு குடியானவன் சந்தைக்குச் சாமான் வாங்கப் போய்க் கொண்டிருந்தான். எதிரில் ஒரு தந்திரசாலி வந்தான். குடியானவனைப் பார்த்து, "தம்பி! காட்டிலே ஐயனார் யானை ஒன்று இருக்கிறது. அதன் வயிற்றுக்குள் நாம் எதை வைத்தாலும் அதை இரட்டிப்பாக்கித் தருகிறது" என்று சொன்னான். குடியானவனுக்கு ஆசை. "ரூபாயை வைத்தால் கூடவா! அப்படியானால் வா போகலாம் அங்கே!" என்றான்.

"போகலாம் இரு. ஆனால் இந்த ரகசியத்தைக் கண்டு பிடித்துச் சொன்ன எனக்கு என்ன தருகிறாய்?" என்று கேட்டான் குறும்பன்.

கடைசியாகக் குறும்பனும் ஒரு நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டான். குடியானவனின் பணம் ஒவ்வொரு தடவையும் இரட்டிப்பாகும் போது தனக்கு ஒரு ரூபாயும் 20 நயேபைசேவும் கொடுத்துவிட வேண்டியது என்று.

ஒப்பந்தப்படி ஐயனார் யானையிடம் போனார்கள். குடியானவன் தன்னிடம் இருந்த பணத்தை யானையின் வயிற்றுக்குள் வைத்து விட்டு நூறுவரை எண்ணி, முடிப்பை எடுத்துக் கொடுத்தபோது உண்மையாகவே குடியானவன் வைத்த தொகை இரட்டிப்பாகி யிருந்தது. ஒப்பந்தப்படி குறும்பன் ரூ 1-20 பெற்றுக் கொண்டான். குடியானவன் மறுபடியும் அவனுக்குக் கொடுத்ததுபோக மீதியை யானையின் வயிற்றுக்குள் வைத்தான். இந்தத் தடவையும் பணம் இரட்டிப்பாயிற்று. ஒப்பந்தப்படி குடியானவன் கூட்டாளிக்கு ரூ. 1-20 கொடுத்தான். தப்பாசை விடவில்லை. மீதியைமறுபடியும் யானையின் வயிற்றுக்குள் வைத்து இரட்டிப்பாக்க விரும்பினான். வைத்த பணம் இரண்டு பங்காயிற்று. ஆனால் ஒப்பந்தப்படி கூட்டாளிக்கு ரூ. 1-20 கொடுத்தபிறகு குடியானவனிடம் ஒன்றுமே பாக்கியில்லை. வெறுங்கையோடு வருத்தத்துடன் வீடு திரும்பினான். அப்படியானால் குடியானவன் துண்டிலே முடிந்திருந்த முடிச்சில் இருந்தபணம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?-மூர்த்தி

(விடை அடுத்த இதழில்)

உயர்ந்து வீசியெறிந்தது. எறிந்த வேகத்தோடு அப்படியே மடாரென்று கீழே சாய்ந்து விட்டது.

கார் விளக்கின் ஒளிப் பிழம்பிலே அந்த உருவத்தைக் கண்ட சேகர் "மணி!... மணி!" என்று கத்தினார். ரங்கசாமியும் மிகுந்த சாமர்த்தியத்தோடு காரை வளைத்துத் திருப்பி பிரேக்கைப் போட்டான்—மோத வரும் காரின் குறிக்கு இலக்காகா வண்ணம்.

அந்தப் பிராந்தியமே அதிரும் வண்ணம் 'படார்' என்ற ஒரு பெரிய சத்தம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 'கிரீச்'சென்ற கார் டயர்களின் ஒலியும் நெருப்பும் புகையும் அந்தத் தோப்பு முழுதும் வியாபித்தன. சதிகாரர்களின் கார் தலைகுப்புறச் சாய்ந்து கிடந்தது. அதிலிருந்து தீ ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது. காரின் பெட்ரோல் டாங்க் உடைந்து சிதறியதால், பாழடைந்த புலித்தேவன் பங்களாவிலும் ஆங்காங்கே தீப்பிடித்துச் சிறிது நேரத்தில் வெகு வேகமாகப் பரவிக் கொழுந்து விட்டு எரியலாயிற்று.

சில நிமிஷங்களுக்குச் சேகரும், ரங்கசாமியும் அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டார்கள். என்ன செய்வது என்றே தோன்றவில்லை. அவ்வளவு சீக்கிரமாகத் தீ எப்படி புலித்தேவன் பங்களா முழுதும் பரவிக் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது என்று அவர்களுக்குப் புரியவில்லை.

"ரங்கசாமி! அருகிலுள்ள டெலிபோன் ஸ்டேஷனுக்குப் போய் நெருப்பணைக்கும் படைக்குச் செய்தி அனுப்பு ஓடு! ஓடு!" என்று விரட்டினார் சேகர். போலீஸ்காரர்கள் மண்ணை வாரி வாரி எரிந்துகொண்டிருக்கும் மோட்டாரின் மீது வீசிக்கொண்டிருந்தார்கள். சேகரும் அவர்களோடு அந்தப் பணியில் ஈடுபட்டார். ஆனாலும் அவர் சிந்தையெல்லாம் வேறு எங்கோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது. 'திடீரென்று நடு வீதியில் தோன்றித் தள்ளாடி விழுந்த மணி என்ன ஆனான், எங்கு போனான்?' என்று தேடியாக வேண்டும். கிட்டுவின் விஷயம் மர்மமாக இருக்கிறது. ஒருவேளை பட்டுவைப் போல் கிட்டுவும் அந்தச் சதிகாரர்களிடம் சிக்கி. அவனை அவர்கள் இந்தக் காரிலேயே வைத்திருந்தால்!...திகுதிகுவென்று ஜுவாலை விட்டெரியும் தலைகீழாகப் புரண்டு கிடந்த காரைப் பார்த்தார் சேகர். அவர் நெஞ்சு நடுங்கியது. 'கிட்டு இந்தக் காரில் இருந்தால் ...அவனை உயிருடன் காண முடியாதே!'

போலீஸ்காரர்கள் காருக்குள்ளிருந்த சடலங்களை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்கள். "உங்கள் டிரைவர் பயர் எஞ்சினுக்கு போன் செய்யப் போயிருக்கிறாரா, சார்?" என்று கேட்டார் போலீஸ்காரர்களில் ஒருவர். (தொடரும்)



இரு குழந்

" ஏன் இவ்வளவு பிடிவாதம் உங்களுக்கு? நமக்கு இருப்பது அவள் ஒருத்திதானே? அவள் சந்தோஷமாக இருந்தால்தானே நமக்குநிம்மதி!"

" மீனு! சாரு விஷயமாக இது வரையில் நீயோ அவளோ ஒன்று சொல்லி நான் இரண்டாவது சொன்னதுண்டா?"

" அதனால்தான் எனக்கும் இப்பொழுது ஆச்சரியமாக இருக்கிறது!"

" சொல்லாதவன் சொல்கிறான் என்றால் அது ஒரு காரணத்துடன் தான் என்று நீ உன் எண்ணத்தை மாற்றிக் கொண்டால் என்ன?"

" அந்தக் காரணம் என்ன என்றுதான் உங்களிடம் கேட்கிறேன்."

" அது உன்னிடம் சொல்லக் கூடியதல்ல!"

" மனமொத்த தம்பதிகளிடம் அப்படியும் ஒரு ரகசியம் இருக்க முடியுமா? இருக்கலாமா?"

" இருந்து தொலைகிறதே என்றுதான் நானும் வேதனைப்படுகிறேன்!"

" என்னவோ அவள் அவனைத்தான் மணந்து கொள்ள ஆசைப்படுகிறாள். அவள் ஆசையைத் தான் நாம் கெடுப்பானேன் என்று நான் சொல்வேன். பிறகு உங்கள் பாடு! உங்கள் பெண் பாடு!" என்று கூறிக் கொண்டே எழுந்திருந்து பின்கட்டுப் பக்கம் சென்றாள் மீனு.

"ஊ... ம்..." என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் வேதஸ்வாமி. அவருடைய உள்ளம் வெகுவாகக் குழம்பித் தவித்தது. விதி வகுத்துக் கொண்டால் அதன் விளைவாக ஏற்படும் இடையூறுகள் தான் எவ்வளவு? அவைகளினால் சம்பவிக்கும் மன உளைச்சல்கள்தான் எத்தனை? ஒரு பொய்யை மறைக்க எவ்வளவு பொய்கள் உரைக்க வேண்டியிருக்கிறது? 'விதி விட்ட வழியில் போகாது, நாம் ஏன் அப்படியொரு செயல் புரிந்தோம்' என்று தோன்றியது வேதஸ்வாமிக்கு. அளவுகடந்த வேதனையினால் அவர் மனம் துன்புற்றது. நினைவுப் புறு எண்ணப் பாதையில் பின்னோக்கி வெகுதூரம் பறந்து சென்றது.

வேதஸ்வாமிக்குக் கலியாணமாகிப் பன்னிரண்டு ஆண்டுகளாகியும் ஒரு குழந்



தைக்குத் தகப்பனாராகக் கூடிய பாக்கியம் ஏற்படவில்லை. அவரை விட மீனுதான் அது விஷயமாக அதிகம் துன்புற்றவள். செய்யாத பரிகாரமில்லை. செல்லாத ஸ்தலங்கள் இல்லை. ஒன்றும் பலன் அளிக்கவில்லை. குழந்தை பிறக்காமலே இருந்து விட்டால் கூடப் பாதகமில்லை. பிறந்து பிறந்து பிரசவ அறையிலேயே இறந்து போய்க் கொண்டிருந்த துர்ப்பாக்கியத்தைத்தான் மீனுவால் பொறுக்கவே முடியவில்லை. முழுப் பிரசவமாக மூன்று. அரைகுறையாக ஆறு. போதுமா? மீனுவின் உடல் மிகவும் பலஹீனமுற்றது. மனம்? அதை விவரிக்கவே முடியாது. அவளுக்கு இது வரையில் மூளை கலங்காமல் இருந்ததுதான் அதிசயத்திலும் அதிசயம்.

இந்த நிலையில் மறுபடியும் கருவுற்றாள் மீனு. அவளுக்குக் குறைப் பிரசவமாக ஆகாதிருக்க ஆயிரம் மாத்திரைகள் வாங்கிக் கொடுத்தார் வேதஸ்வாமி. லேடி டாக்டர் 'இந்தத் தடவை மீனுவை ரொம்பவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்' என்று எச்சரித்திருந்தாள். மனித முயற்சி எவ்வளவு உண்டோ, அவ்வளவையும் செய்தார் வேதஸ்வாமி. பேறு காலமும் வந்தது. மீனு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

இந்தத் தடவையும் பிரசவம் கஷ்டமானதுதான் என்று பெரிய டாக்டர் அறிவித்ததும் வேதஸ்வாமி வேதனையினால் துடித்தார்.

ஒரு குழந்தையுடன் கொஞ்சி விளையாடி மகிழவே முடியாது. என்றாலும் இனிமேல் இவ்விடமிருந்து வெறுங்கையுடன் வீட்டுக்குப் போகும் வேதனையைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. ஆமாம்! நான் சொன்னதை நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும். கேட்பீர்களா?'' பொங்கி வரும் அழுகையின் நடுவே தழுதழுத்த குரலில் கேட்டாள் மீனு.

"ஆகட்டும், பேசாமலிரு!" என்று அன்புடன் கடிந்து கொண்டார் வேதஸ்வாமி. பிறகு...?


நேரம் வளர்ந்தது. நெஞ்சம் உழன்றது.

வேதஸ்வாமி வேண்டாத தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தார்.

பெரிய டாக்டர் வந்தார். வழக்கப்படி கேட்கிற கேள்வியைத்தான் இன்றும் கேட்டார். "பெரிய உயிர் வேண்டுமா? சிறிய உயிர் வேண்டுமா? யோசித்துச் சொல்லுங்கள். ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்.

வேதஸ்வாமியின் மனம் குழம்பாகக் கொதித்தது. மீனு சொன்னபடி, 'சின்ன உயிர்தான் வேண்டும்' என்று கூறிவிடலாமா என்று எண்ணினார். மறுகணமே அவரது மனம் 'சீ! நீயும் ஒரு மனிதனா?' என்று சீறி விழுந்தது. தவியாய்த் தவித்தார். இந்தச் சமயம், "வேதஸ்வாமி! மீனு பிரசவித்து விட்டாளா? என் மனைவி பிரசவித்து விட்டாள். சிசு

தைகள் !



"மீனு! என்னால்தானே உனக்கு இப்படி..." என்று மனைவியின் கரங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வடித்தார்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். உலகில் இது சகஜம்தானே? நான் அதிர்ஷ்டமில்லாதவள். அதனால்தான் பெற்றுப் பெற்றுக் குழியில் வைத்துக் கொண்டே வருகிறேன். இந்தத் தடவை டாக்டர் 'பெரிய உயிர் வேண்டுமா? சின்ன உயிர் வேண்டுமா?' என்று கேட்டால், 'பெரிய உயிர் தான்வேண்டும்' என்று சொல்லிவிடாதீர்கள். நான் உயிருடன் இருக்கிற வரையில் நீங்கள்



நேரத்துக்கு முன்பு. இரண்டு பெண் குழந்தைகள் பிறந்திருக்கின்றன ..." என்று மொழிந்தபடி வேதஸ்வாமியின் அருகில் வந்து நின்றார் அவரது ஆப்த நண்பர் வாஞ்சிநாதன்.

"வாஞ்சி...!" என்று அலறியபடி நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டு விட்டார் வேதஸ்வாமி.

"நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்பாயா?" என்று கேட்டார் வாஞ்சி.

"சொல்லு! சீக்கிரம் சொல்லு!"

"பெரிய உயிர்தான் வேண்டும் என்று சொல்லி விடு!"

"மீனு அப்படியும் உயிர் தரிக்க மாட்டாள், வாஞ்சி! இந்தத் தடவையும் குழந்தை இறந்தே பிறந்தது என்பதை அறிந்தால் அவள் உயிர் தானுகவே அவளை விட்டுப் போய் விடும்" என்றார் வேதஸ்வாமி அழுகுரலாக.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம்! என் இரண்டு பெண் குழந்தைகளில் ஒன்றை உனக்குத் தந்து விடுகிறேன். இந்த விஷயம் மீனுவுக்குத் தெரியவே வேண்டாம். என் குழந்தை அவள் குழந்தையாகவே இருந்து விடட்டும்" என்று கூறினார் வாஞ்சிநாதன் சலனமற்ற குரலில்.

"நிஜமாகவா?" என்று அலறினார் வேதஸ்வாமி உற்சாக மிகுதியால்.

"ஆமாம்! கவலைப்படாமல் டாக்டரைப் போய்ப் பார்" என்று கூறினார் வாஞ்சிநாதன்.

அதிகம் வளர்த்துவானேன்? மீனு செயற்கை முறைப்படி பெற்ற இறந்த குழந்தையை அப்புறப்படுத்தி விட்டு, அவள் அருகில் வாஞ்சிநாதனின் மனைவி பெற்ற மதலையைக் கிடத்தி விட்டனர்.

இந்தத் தடவை மீனு என்றுமில்லாத சந்தோஷத்துடன் கையில் குழந்தையும் தானுமாக மகிழ்ச்சியோடு வீடு வந்து சேர்ந்தாள். குழந்தை சாருமதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள்.

இந்த நாடகம் பதினறு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. இன்று நடப்பது சாருமதியின் திருமணத்தைப் பற்றிய பிரச்னை.

"சாருவுக்கு இந்த வருஷம் கலியாணத்தைச் செய்து விட்டால் என்ன?" என்று காலையில் பேச்சைத் துவக்கிய மீனு, "சாரு வாஞ்சிநாதனின் மூத்த மகன் ஸ்ரீதரனை மணக்க விரும்புகிருள். அவள் ஆசைப்படி அவனுக்கே அவளை மணம் முடித்துவிட வேண்டும்!" என்று தீர்மானமாகக் கூறினாள்.

தூக்கி வாரிப்போட்டது வேதஸ்வாமிக்கு. ஒன்று வெட்டப் போய்ப் பூதம் புறப்பட்ட கதையாகவல்லவோ இருக்கிறது? ஸ்ரீதரனும் சாருவும் சகோதர சகோதரிகளாயிற்றே? எப்படி அவர்களுக்கு மணம் முடித்துவைப்பது என்று அவர் திகைத்தார்.

"என்ன யோசிக்கிறீர்கள்? ஸ்ரீதரன் சாருவுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானவன்தான்" என்று கூறினாள் மீனு விடாப்பிடியாக.

ஏதேதோ இல்லாத பொல்லாத காரணமெல்லாம் தாமாகவே சிருஷ்டித்துக்கூறிப்பார்த்தார் வேதஸ்வாமி. மீனு எதற்கும் மசியவில்லை. 'குழந்தையின் சந்தோஷம், குழந்தையின் சந்தோஷம்' என்கிற ஒரே பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடினாள் அவள்.

வேதஸ்வாமி பெருத்த யோசனையில் ஆழ்ந்து போனார். 'உண்மையைச் சொல்லித்தானாக வேண்டுமா? பதினாறு வருஷங்களாகக் காப்பாற்றி வந்த ஒரு ரகசியத்தை இன்று அம்பலப்படுத்தித்தானாக வேண்டுமா?' என்று நெக்குருகினார். வேறு வழியொன்றும் புலப்படாது அவர் வேதனைக் குளத்தில் மூக்குளித்துக் கொண்டிருந்தார்.

அச்சமயத்தில், "என்ன, வேதஸ்வாமி! யோசனை பலமாக இருக்கிறதே!" என்று கேட்டபடி அவருடைய அறைக்குள் வந்து உட்கார்ந்தார் வாஞ்சிநாதன்.

"பார்த்தனுக்குப் பரந்தாமனைப் போல் நீ எனக்கு வாஞ்சி. நீதான் இதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்.." என்று ஆரம்பித்து தம் உள்ளக் குழப்பத்தின் உண்மை நிலையை எடுத்துரைத்து யோசனை கேட்டார் வேதஸ்வாமி.

வேதஸ்வாமி சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த வாஞ்சிநாதன் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டுப் பிறகு, "வேதஸ்வாமி! நீ சாருவை அவள் விருப்பப்படி ஸ்ரீதரனுக்கே மணம் முடித்து வைக்கலாம்" என்றார்.

"என்ன உளறுகிறாய், வாஞ்சிநாதா! சாருமதி ஸ்ரீதரனின் தங்கையாயிற்றே!" என்றார் வேதஸ்வாமி ஆத்திரத்துடன்.

"இல்லை! சாருமதி ஸ்ரீதரனின் தங்கையில்லை!" என்று கூறினார் வாஞ்சி.

"என்ன, நிஜமாகவா? அப்படியானால் சாருமதி உன் பெண்ணல்லவா?" என்று வியப்புடன் வினவினார் வேதஸ்வாமி.

"சாரு என் பெண்தான். வந்து... வந்து...ஸ்ரீதரன் என் பிள்ளையில்லை!" நிதானம் குறையாமல் பேசினார் வாஞ்சி.

"என்ன !" வியப்பினால் விழிகள் விரிந்தன வேதஸ்வாமிக்கு.

"ஆம்! ஸ்ரீதரன் என் சகோதரியின் மகன். பிறக்கும்போதே தாயை யிழந்த சில நாட்களில் தந்தையையும் இழந்து விட்டவன் அவன். அவனை நானும் எனது மனைவியும் எங்களுடைய குழந்தையாகவே பாவித்து வளர்த்து வருகிறோம். அவன் எங்கள் இருவரையும் தனது பெற்றோர்கள் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் எண்ணத்தைக் குலைக்காமலிருக்க வேண்டும் என்பதே எங்கள் இருவருடைய லட்சியம் !" என்றார் வாஞ்சிநாதன்.

"ஸ்ரீதரன் உன் பிள்ளை இல்லை என்பதை நம்பவே முடியவில்லையே !" என்று அங்கலாய்த்தார் வேதஸ்வாமி.

"சாருமதி உன் பெண் இல்லை என்பதை எப்படி நம்ப முடியாதோ, அப்படித்தான் இதுவும்" என்று கூறினார் வாஞ்சிநாதன்.

அச்சமயம் வாஞ்சிநாதனின் பிள்ளைகளில் ஒருவன் வந்து, "அப்பா ! யாரோ ஒரு பெரிய மனிதர் வந்திருக்கிறார். உங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம்" என்று அழைத்தான்.

"சாயங்காலம் வருகிறேன் வேதா.." என்று கூறி அவசரமாக வெளியேறினார் வாஞ்சிநாதன்.

வியப்பினால் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார் வேதஸ்வாமி.

"இன்னமும் சாருவை ஸ்ரீதரனுக்குக் கொடுக்க என்ன தடை?" என்று வினவியபடியே மீனா அவர் அருகில் வந்து நின்றாள், இதழ்களில் மென்னகை தவழ விட்டுக் கொண்டே.

"மீனா !" என்றார் வேதஸ்வாமி மிகுந்த நடுக்கத்துடன்

"கவலைப்படாதீர்கள் ! நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்ததினால் குடி முழுகி விடாது. சாரு என் பெண்ணல்ல என்கிற உண்மை எனக்கு நான் பிரசவித்த மூன்றாம் நாளே தெரிந்து விட்டது. இரண்டு நர்ஸ்களின் இரகசிய சம்பாஷணை எனக்கு அந்த ரகசியத்தைத் தெரிவித்தது. இன்று நான் புதிதாகத் தெரிந்து கொண்ட ரகசியம் சாரு உங்களுடைய நண்பரின் பெண் என்பதும், ஸ்ரீதரன் அவருடைய பிள்ளையில்லை என்பதும்தான்" என்று கூறிச் சிரித்தாள் மீனா.

"உண்மை தெரிந்துமா நீ சாருவை இவ்வளவு பாசத்துடன் வளர்க்கிறாய்? அது உன்னால் எப்படி முடிகிறது. மீனா?" என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டார் வேதஸ்வாமி.

"ஒரு பெண் மனம் வைத்தால் எதையும் செய்ய முடியும் ! ஒரு குழந்தையின் கொஞ்சுமொழிக்காக ஏங்கும் உங்களுடைய கரை காணாத ஏக்கம் சாருவை என் பெண்ணாகக் கருதச் செய்தது."

"அப்பாடா! மீனா! இன்றுதான் என் மனம் நிம்மதியடைந்தது. வீணாக உன்னைப் பொய் சொல்லி ஏமாற்றிக் கொண்டு வருகிறோமே என்று நான் இந்தப் பதினாறு வருஷங்களாக அநுபவித்து வந்த மனவேதனை சொல்லி முடியாது ! உன் விருப்பப்படியே சாருவின் திருமணத்தை இந்த மாதமே நடத்தி விடுவோம்" என்று உற்சாகம் பொங்கக் கூறினார் வேதஸ்வாமி.

இதே சமயம் வாஞ்சிநாதன் தம் வீட்டில் பூஜை அறையில் முருகனின் திருவுருவப் படத்தின் எதிரில் நின்று கொண்டு, "முருகா ! என்னை மன்னித்து விடு. அன்று, அதாவது பதினாறு வருஷங்களுக்கு முன் மீனாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒரு பொய்யைச் சொன்னேன். ஆம்! நான் வேதஸ்வாமியிடம் வாக்களித்தபடி என் இரண்டு பெண் குழந்தைகளில் ஒன்றை அவனுக்குக் கொடுக்க முடியாமல் விதி என்னை வஞ்சித்து வேடிக்கை பார்த்தது. கொஞ்சமும் எதிர்பாராத விதத்தில் எனது இரண்டு குழந்தைகளில் ஒன்று இவ்வுலகைவிட்டு இறைவனடியைச் சேர்ந்து விட்டது. இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டு கண்கலங்கி நின்ற எனக்கு அபயம் அளித்தவள் எனக்கு மிகவும் வேண்டியவளான பெரிய டாக்டர். ஆம்! அவள்தான் பிறக்கும்போதே தன் தாயை இழந்துவிட்ட ஒரு அனாதைப் பெண் குழந்தையை என்னிடம் கொடுத்தாள். அந்தக் குழந்தையைத்தான் என் குழந்தை என்று பொய் சொல்லி வேதஸ்வாமியிடம் கொடுத்தேன்.

"இன்று மறுபடியும் ஒரு பொய்யைச் சொன்னேன். ஒரு அனாதைப் பெண்ணின் நல்வாழ்வுக்காக ஸ்ரீதரன் என் மகனில்லை, என் சகோதரியின் மகன் என்பதுதான் அது. இதற்காக நீ என்னை மன்னித்துத்தான் ஆக வேண்டும். அப்பனே !" என்று நெஞ்சுருக வேண்டினார்.

அவருடைய நல்லெண்ணத்தை ஆமோதித்தது போல் முருகனின் திருவுருவப் படத்திலிருந்து ஒரு நாகலிங்கப் புஷ்பம் நழுவிக் கீழே விழுந்தது. "நீ என்னை மன்னித்து விடுவாய் என்று எனக்குத் தெரியும்" என்று கூறியபடி அந்தப் புஷ்பத்தை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார் வாஞ்சிநாதன்.


அவனுக்கு
ஜான்ஸன்ஸ்
பேபி பவுடரே
ஏற்றது
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson


10 Cigarettes 10
PLAYER'S "MEDIUM" NAVY CUT
Player's Please
NAVY CUT MEDIUM
CIGARETTES
Rs. 3.80 nP. per tin of 50, 75 nP. per packet of 10
Issued by The Imperial Tobacco Company of India Limited

தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சி

எம். எஸ். சிவஸ்வாமி

தொழில் அபிவிருத்தியிலும் வர்த்தகத் துறையிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் தென்னிந்தியா, பாரதத்தின் இதர பகுதிகளைப் போல் வேகமாக முன்செல்லவில்லை யென்றும், இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து போதிய கவனிப்பும் ஆதரவும் கிடைக்கவில்லை யென்றும் இந்தப் பகுதி ஒரு பின்தங்கிய பிரதேசம், புறக்கணிக்கப்பட்டுப் போன பிராந்தியம் என்றும், இப்போதெல்லாம் அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. இந்நிலைமையை இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் நன்கு உணர ஆரம்பித்து விட்டபடியால் இதற்குப் பரிகாரம் தேட வேண்டியது அவசியமாகிறது.

நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்தவும் பிளவை வளர்க்கும் சக்திகளை ஒடுக்கவும், அரசியல் நோக்கில் மட்டும் ஒற்றுமை யிருந்தால் போதாது. அபிவிருத்தியிலும் கூட ஏற்றத்தாழ்வின்றிப் பாரதத்தின் பல்வேறு பகுதிகளும் இணைந்தே முன்னேற வேண்டும். இதன் அவசியத்தை வலியுறுத்தவும், தென்னிந்தியாவின் பொருள்நிலை புறக்கணிக்கக் கூடியதல்ல என்று எச்சரிக்கவும் வர்த்தக சமூகம் இப்போது முன்வந்துள்ளது.

சௌந்தரியத்துக்குப் பெயர்பெற்ற மைசூர் ராஜ்யத்தின் தலைமை வர்த்தக ஸ்தாபனமாகிய மைசூர் வர்த்தக சபை மேற்கொண்ட முயற்சியின் பயனாக, சென்னை, ஆந்திரா, கேரளா முதலிய ராஜ்யங்களில் செயலாற்றி வரும் பதினைந்து வர்த்தகச் சங்கங்களின் பிரதிநிதிகள் சுமார் இருநூறு பேர்கள், பெங்களூரில் செப்டம்பர் 19, 20 தேதிகளில் ஒரு மகாநாடு கூடித் தங்களுக்குப் பொதுவாக உள்ள பலவிதப் பிரச்னைகளை விவாதித்தனர். மைசூர் பிரதமர் திரு பி. டி. ஜட்டி மகாநாட்டைத் துவக்கி வைத்ததுடன், மைசூரின் நிதிமந்திரி திரு டி. மரியப்பா இத்தொழில் அதிபர்களின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டு, அவர்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் விசேஷமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆகவே, வர்த்தகர்கள் எழுப்பும் குரல் வெறும் வறட்டுக் கத்தலாக இருக்காது என்ற நம்பிக்கைக்கு இது இடமளிக்கிறது.

இந்த மகாநாடு ஒரு அரசியல் கூட்டம் அல்ல. கட்சிக் கூட்டமும் அல்ல. அமைதியான சூழ்நிலையில் வர்த்தகத் தலைவர்களும் தொழில் அதிபர்களும், பொறுப்புணர்ச்சியுள்ளவர்களும், உணர்ச்சி வசப்படாமல், நிதானத்துடன் செயலாற்றிய மகாநாடு இது. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளும், கூறிய கருத்துக்களும் நிறைவேற்றிய தீர்மானங்களும் கவனிக்கப்பட வேண்டியவை; சிந்திக்கத் தகுந்தவை; நாட்டின் நலனுக்கு ஏற்றவை.

"பாரதத்தின் தற்போதைய மாறுபட்ட சூழ்நிலையில் நாங்கள் வர்த்தகர்கள் என்று மட்டும் எண்ணாமல் நாங்களும் இந்தியர்கள், இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறை உண்டு என்று உணர்ந்து கொண்டு, எங்களுக்குள் இருக்கும் குறைவு நிறைவுகளை மட்டும் ஆராயாமல் அரசாங்கத்துக்கும் உருப்படியான ஆலோசனைகள் கூறியும், உதவி புரியவும்தான் இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது" என்று மகாநாட்டின் நோக்கத்தை எடுத்த எடுப்பிலேயே மைசூர் வர்த்தக சபைத்தலைவர் திரு பி. கே. சாரங்கபாணி முதலியார் தமது வரவேற்பு உரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கி வைத்தார். நடவடிக்கைகளும் இந்நோக்கத்தை அனுசரித்தே நடந்தன. அவர்கள் ஆராய்ந்த முதல் பிரச்னை தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சி.

தென்னிந்தியாவின் நிலப்பரப்பு, ஜனத்தொகை, பாரதத்தின் பொருளாதார வளர்ச்சியில் அதனுடைய பங்கு, அதன் தற்போதைய நிலை முதலியவற்றைக் கவனிக்குமிடத்து, திட்டக்கமிஷன் தென்னிந்தியப் பகுதியின் அபிவிருத்திக்கென ஒதுக்கியுள்ள தொகை மிகவும் குறைவு. அதை நிவர்த்தி செய்து, தென்னிந்தியாவில் மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து சாதனங்கள், ரயில் அபிவிருத்தி முதலியவைகளுக்கு அதிக கவனம் செலுத்துவது அவசியம் என்பதை முதல் தீர்மானமாக டி. என். ஜோனாலே பிரேரேபித்தார். இதை ஆமோதித்துப் பேசிய திரு வி. எம்பெருமானார் செட்டியார் இதற்குத் தக்க ஆதாரங்களை யெல்லாம் எடுத்துக் காட்டினார்.

பாரதத்தின் மொத்தப் பரப்பில் தென் மண்டலம் ஐந்தில் ஒரு பாகம். மொத்த ஜனத்தொகையில் நூற்றில் 26 பேர்கள் அதாவது நாலில் ஒருவர் தென்மண்டலத்தில் இருக்கின்றனர்.

எனினும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் செலவிடப்பட்ட தொகையில் எட்டில் ஒரு பாகம்தான், அதாவது ரூ. 255 கோடி மட்டுமே தென்மண்டலத்தில் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் தென் மண்டலத்துக்கு ஒதுக்கப்பட்ட முதலீடு ரூ. 545 கோடி மட்டும், அதாவது மொத்தத்தில் பத்தில் ஒரு பாகம்தான். உருக்குச்சாலை, ரசாயனச்சாலை போன்ற பெரிய அளவில் இங்கே தொழில் நிறுவனங்கள் ஒன்றுமில்லை. இரண்டாவது திட்டத்தில் சர்க்கார் தொகுதியில் மத்திய சர்க்கார் செலவிடும் ரூ. 501 கோடியில் தென் மண்டலத்தில் செலவிடுவது ரூ. 75 கோடிக்கும் குறைவே. இது திட்டக் கமிஷன் கவனிக்க வேண்டிய விஷயம். நிலக்கரி இல்லாத மண்டலமாகையால் இங்கே மின்சார சக்தியைத்தான் நம்பவேண்டியிருக்கிறது. இதன் அபிவிருத்தியைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

வரி முறைகளைப் பற்றியும் அவற்றின் சுமையினால் தொழில் வளர்ச்சி எப்படிப் பாதிக்கப்படுகிறதென்பதையும் சுவையுடன் விளக்கி

னார் திரு என். நாராயணஸ்வாமி. கம்பெனிகள் பங்குதாரர்களுக்கு வழங்கும் போனஸ் தொகை மீது வசூலிக்கப்படும் "போனஸ் வரியை"யும், கம்பெனிகள் மீது விதித்துள்ள செல்வ வரியையும் உலகத்திலே கண்டிராத "புதுமையிலும் புதுமை" என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டினார்.

"ஜனநாயகம் சிதைவுறாமலிருக்க வேண்டுமானால் திட்டம் வெற்றிபெற வேண்டும். திட்டம் வெற்றியடைய வேண்டுமானால் நிதி தேவை. விதித்துள்ள வரி முறைகள் அநீதியென்றால் மாற்று முறைகளைச் சிபாரிசு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவை கட்டாயமாகக் கவனிக்கப்படும். இது வர்த்தகர்கள் பொறுப்பு" என்று சர்க்கார் கொள்கையைத் திரு மரியப்பா விளக்கினார்.

திட்டத்தின் வெற்றிக்காகத்தான் வரி விதிக்கப்படுகிறது என்ற பூச்சாண்டியை வெகு நாளுக்காக அவர்கள் அம்பலப்படுத்தினார்கள். "புது வரிகள் மூலம் கிடைக்கும் 81 கோடி ரூபாயும் ஒவ்வொரு வருஷமும் 50 கோடி உணவு இறக்குமதியிலும் 35 கோடி ராணுவ தளவாடத்திலும் தானே செலவாகின்றன? திட்டத்தின் எந்த அம்சத்துக்குச் செலவு செய்யப்படுகிறது' ஒன்றைச் சொல்லிப் பணம் வசூலித்து மற்றொன்றுக்குச் செலவு செய்வது எப்படி முறையாகும்" என்று எடுத்துக் காட்டினார்கள்.

ஏற்றுமதி விஸ்தரிக்கவும், அன்னியச் செலாவணி சம்பாதிக்கவும், உற்பத்தி வரி, ரயில் கட்டண விகிதங்கள் முதலியவற்றைத் தக்கபடி மாற்றுவது அவசியம் என்பதைத் தென்னிந்திய வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த திரு ஸி. சேஷாசலம் ஒரு தீர்மானம் மூலம் எடுத்துக் காட்டினார்.

தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ரோட்—ரயில் போக்குவரத்து சாதனங்கள் விஸ்தரிக்கப்பட்டு ஒன்றோடொன்று இணைந்து செயல் புரிய வேண்டும் என்றும், இதற்காக அரசாங்கம் ஒரு கொள்கையை உருவாக்கிச் செயல் முறைக்குக் கொண்டு வருவது அவசியம் என்பதைப் பற்றியும் திரு கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

தொழிலாளர்—முதலாளி உறவு பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. தொழில் தகராறுகளைத் தீர்த்து வைக்க ஒருவர் கொண்ட தொழில் 'ட்ரிபியூனல்'களையும், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிற் சங்கங்களில் புகுந்து நல்லுறவைக் குலைப்பதையும் அதனால் தொழில் உற்பத்தியும் நிர்வாக—தொழிலாளி ஒத்துழைப்பு சிதைவுறுவதையும் திரு வி. பாண்டுரங்கய்யா ஒரு தீர்மானத்தில் விளக்கமாக எடுத்துக் காட்டினார்.

வர்த்தகர்கள் கூடினால் அதிலும் ஏற்றுமதியில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து விட்டால் "ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனை"ப் பற்றிப் பேசாமல் இருக்க முடியுமா? பேசினார்கள்; வெகு ரசமாகப் பேசினார்கள். தேசிய வர்த்தக ஸ்தாபனத்தை தையாண்டி செய்வதற்காக அல்ல. முதலில் உத்தேசித்தபடி எந்த வியாபாரத்துக்காக இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதோ அதை மட்டும் கவனித்தால் போதும். தெரியாத வர்த்தகத்தில் பிரவேசித்து நஷ்டப்பட வேண்டாம் என்று எடுத்துக் காட்டுவதற்கே.


இப்படிப் பலவாறு பேசிவிட்டு, சாதாரண மகாநாடு கலைவது போல் வர்த்தகத் தலைவர்கள் கலைந்துவிடவில்லை. தென் மண்டல கௌன்ஸில் என்று ஒரு சிறிய குழுவை ஏற்படுத்திக் கொண்டு தென்னிந்தியாவில் செயலாற்ற ஒவ்வொரு பிரதான வர்த்தக சபைகளிலிருந்து இருவரை அங்கத்தினர்களாகக் கொண்டு, ராஜ்ய சர்க்காருடனும் மத்திய சர்க்காருடனும் ஒத்துழைத்து, காரிய சித்திக்கு வழியும் வகுத்துக் கொண்டனர். வர்த்தகர்கள் கெட்டிக்காரர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

இருநூறு வர்த்தகர்களையும் தொழிலதிபர்களையும் ஒன்றுகூட்டி அவர்களுடைய சௌகரியங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டு, அவர்களுடைய நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெறவேண்டுமென்றால் சாமானிய காரியமா? ஆனால் அதைச் சாதித்து விட்டார் திரு பி. கே. சாரங்கபாணி முதலியார். பார்ப்பதற்கு மிகச் சாது மனிதர் போல் இரண்டு நாள் மகாநாட்டிலும் மேடைமீது கம்பீரமாக அமர்ந்திருந்த போதிலும் அவருடைய ஏற்பாடுகள் ஒரு சிறிதும் வழுவாது எண்ணெயிட்ட யந்திரம்போல் நடைபெற்றன. 'நம்முடைய பெருமைகளைப் பற்றியே பேச வேண்டாம். அமெரிக்காவில் வர்த்தகச் சங்கங்கள் எப்படிச் செயல் புரிகின்றன' என்பதை அமெரிக்க ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த ஹெரோல்ட் இ. ஹால் என்பவரைக் கொண்டு ஒரு பிரசங்கத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார். பேச்சு மட்டும் ரசிக்குமோ, ரசிக்காதோ என்று ஒரு விருந்தையும் வைத்துப் பேசச் சொன்னார். பேச்சுப் பேசி அலுத்துப் போனவர்களுக்கு உற்சாகம் ஊட்ட அவரது பேத்தி குமாரி உஷாராஜ் அவர்களின் பரதநாட்டியக் கச்சேரி முதல்தரமாக அமைந்திருந்தது. அந்த நடன விழாவுக்குத் தலைமை தாங்கித் திருவிதாங்கூர் இளையராஜா அதைச் சிறப்பித்தார். சந்தர்ப்பத்தை நழுவவிடாது வெகு நாளுக்காக, "நீங்களும் எங்கள் வர்த்தக சபையில் சேர்ந்து எங்களுக்கு உற்சாகமூட்டினால் நாங்கள் நலம் பெறுவோம்" என்று ராஜாவையே "கான்வஸ்" செய்தார் திரு சாரங்கபாணி முதலியார். சந்தேகமென்ன? இவர் ஒரு அசகாய சூரர்!

விழாக் காட்சிகளை எதிர்ப்பக்கத்திற் காணலாம்.

---

1. மைசூர் வர்த்தகச் சங்கத்தினர் திரு பி. கே. சாரங்கபாணி முதலியாருடன் அமர்ந்திருப்பவர் திரு எம். ஜி. லக்ஷ்மி நாராயண். திரு சித்ரா என். நாராயணஸ்வாமி பேசுகிறார். 2. திரு ஹரோல்ட் இ. ஹால் பிரசங்கம் செய்கிறார். 3. திரு ஹாஜா ஷெரீப் பேசுகிறார். 4. திரு கே. வி. சீனிவாசன் தலைமையில் இரண்டாவது நாள் நடவடிக்கைகள் நடந்தன. 5. திருவாங்கூர் இளைய மஹாராஜா பரதநாட்டிய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிப் பேசுகிறார். 6. நடன விருந்தளித்த குமாரி உஷாராஜ். 7. மைசூர் நிதிமந்திரி மரியப்பா பேசுகிறார். 8. மகாநாட்டைத் துவக்கிவைத்த மைசூர் முதலமைச்சர் திரு பி. டி. ஜட்டி. 9. சென்னை பிரபல தொழிலதிபர் திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியாரும் மற்றவர்களும்.


வர்த்தகர்கள் மகாநாடு
1
2
3
4
5
6
7
8
9

வானத்தில் வரும் வெண்ணிலவு

இருபத்திரண்டாம் அத்தியாயம்

"ஐம்பதினாயிரம் ரூபாய்"

கி. ராஜேந்திரன்

எத்தனையோ விதமான உணர்ச்சிகளை மாறி மாறி அனுபவித்து, சொற்களை உதிர்த்துக் கொண்டே போன சுகுமாரனுக்குக் கடைசியாக 'அந்தப் படுபாதகமான வார்த்தைகளைச் சொல்வது கடினமாக இல்லை.

அவர் இறுதியில் !' கூறியவை கதிர்வேலன், மல்லிகா ஆகிய இருவரது காதிலும் நன்றாக விழுந்தன. ஆனால் அத்தகைய விபரீதமான சொற்களை, கொஞ்சமும் தயக்கமில்லாமல் எளிதாகச் சொல்லி விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. காதுகள் கேட்டவற்றை மனம் நம்ப மறுத்தது.

உள்ளத்தில் பெருக்கெடுத்த பலவித உணர்ச்சிகளை வார்த்தைகளாகக் கொட்டித் தீர்த்த பிறகு ஆயாச மிகுதியினால் மூச்சு இறைக்க நின்றார் சுகுமாரன்.

நீண்ட நேரம் அங்கே அச்சம்தரத்தக்க அமைதி நிலவியது.

அந்தப் பேரமைதியைக் கிழித்துக் கொண்டு பயமும் அருவருப்பும் சோகமும் நிரம்பிய ஒரு தீனக் குரலில் 'வீல்' என்று சத்தமிட்டாள் மல்லிகா. அந்தக் கூக்குரலைத் தானே கேட்க விரும்பாமல் காதைப் பொத்திக் கொண்டு ஓடினாள்.

சேகருடைய அறையை அடைந்த பிறகுதான் அவளுடைய ஓட்டம் நின்றது. தட தடவென்று அவன் அறைக் கதவைத் தட்டினாள். பரபரப்புடன் கதவைத் திறந்த சேகர், மல்லிகாவின் பீதி நிறைந்த முகத்தைப் பார்த்ததும் ஒன்றுமே பேசத் தோன்றாமல் நின்றான்.

"ஒரு நிமிஷம்கூட இங்கே தங்கியிருக்காதீர்கள். உடனே போய் விடுங்கள். இனி என்னைப் பார்க்கவே முயற்சி செய்யாதீர்கள்"—வெறி பிடித்தவளைப் போலக் கத்தினாள் மல்லிகா.

"சத்தம் போடாதே, மல்லிகா! யாராவது தவறாக நினைத்துக் கொள்வார்கள். என்ன நடந்து விட்டது இப்போது? எதற்கு இப்படிக் கத்துகிறாய்?" என்று அதட்டினான் சேகர். மல்லிகாவின் குரல் சற்றுத் தணிந்தது.

"ஐயோ! சொன்னால் கேளுங்களேன், தயவுசெய்து போய் விடுங்களேன். இல்லாவிட்டால் அவர்கள் உங்களை... உங்களை..." மல்லிகாவினால் அந்த வார்த்தைகளைச் சொல்லி முடிக்க முடியவில்லை. கேவிக் கேவி வெளிப்பட்ட வாக்கியம் முற்றுப் பெறாமல் நின்றது.

"மல்லிகா! இது என்ன அசட்டுத்தனம்? குழந்தையைப் போல் இப்படியா அழுவார்கள்? முகத்தைத் துடைத்துக் கொள், ஏரிக்கரைக்குச் செல்வோம். உன் மனம் நிம்மதி அடையும். அப்புறம் நீ இஷ்டப்பட்டால் சொல்ல வந்ததைச் சொல்லு. இப்போது ஒன்றும் பேசாதே!"

மல்லிகா கண்களைத் துடைத்துக் கொண்டாள். இருவரும் நிதானமாக நடந்தார்கள். சிறிது நேரத்தில் மல்லிகாவின் அழுகை நின்றுவிட்டது. ஆனால் விட்டு விட்டு ஒரு விம்மல் தொண்டையிலிருந்து வெளிப்பட்டது.

உயர்ந்தும் தாழ்ந்தும் சென்ற பாதையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஏறியும் கட கடவென்று வேகமாக இறங்கியும் சென்று ஏரியை அடைந்தார்கள்.

மனோரம்யமாக வீசிய மலை மாருதம் மல்லிகாவுக்கு இதமாக இருந்தது. சேகர் துடைப்பு வலித்தபோது சிதறிய குளிர்ந்த நீர்த் துளிகள் அவள் முகத்தில் பட்டதனால் தெளிவு பெற்றாள். பகமையான அந்தச் சூழ்நிலையில் அவளுடைய மனப்பதற்றம் ஓரளவு குறைந்தது.



"உன்னுடைய அழுகையெல்லாம் ஒருவாறு ஓய்ந்து விட்டதா, மல்லிகா! ஓரேயடியாக அமர்க்களப்படுத்தி என்னைக் கதிகலங்க அடித்து விட்டாயே?" என்று கேட்டான் சேகர்.

வெட்கப் புன்னகையுடன் ஒரு விரலால் நீரைக் கிழித்துக் கோலம் போட்டு விளையாடினாள் மல்லிகா.

"அப்பா! இப்போதுதான் உன் முகத்தைப் பார்க்க முடிகிறது. இதுவரை சகிக்கவில்லை. மல்லிகா! குறும்புப் பார்வையும் புன்சிரிப்பும் உன்னுடன் கூடப் பிறந்தவை. எப்போதும் கலகலப்பாகப் பேசிச் சிரிக்க வேண்டும். தெரிந்ததா?" என்றான் சேகர்.

"உங்கள் உயிருக்கே ஆபத்து நேரக்கூடும் என்று அறிந்த பிறகு நான் எப்படிச் சிரிக்க முடியும்?"

"என் உயிருக்கு ஆபத்தா? இது என்ன கூத்து? ஒருவேளை கனவு ஏதாவது கண்டு விட்டு அப்படி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தாயோ?"

"வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்க இது சந்தர்ப்பமில்லை. உங்கள் உயிருக்கு உலைவைக்க அப்பா யோசிக்கிறார்."

துடுப்பை வலித்துக் கொண்டிருந்த சேகருடைய கரங்கள் நின்றன. ஆடாமல் அசையாமல் இருந்தான் அவன். தன் பாட்டுக்கு நகர்ந்து சென்ற படகும் சிறிது நேரத்தில் நின்றது. மல்லிகா கூறியவற்றை மனத்தில் வாங்கி ஜீரணித்துக் கொண்டிருந்தான் சேகர்.

"எனக்குப் புரியவில்லையே, மல்லிகா! எதற்கு என்னை அவர் கொல்ல முயற்சி செய்ய வேண்டும்?"

"உங்களுக்குப் புரியாமல் இல்லை. எனக்குப் புரிந்து விட்டதா என்று சோதிக்கிறீர்கள். அப்படித்தானே!"

சேகருடைய கைகள் மறுபடியும் அசைந்தன. படகு நகர்ந்தது.

"இன்னும் எதற்கு இந்த மூடுமந்திரமெல்லாம்? நீங்கள் என்னைத் தேடி வந்த போது, என்னிடம் கொண்ட காதலினால்தான் என்று நினைத்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள் என்ற ஆத்திரத்தில் முன்பு விரட்டி அடித்த அதே வாயினால் அன்புடன் வரவேற்கத் தீர்மானித்தேன். நடுவே நம்மிடையே ஏற்பட்ட மனத் தாங்கல்களை மறந்து இன்பமாகப் பேச எண்ணினேன்.

""உன்னை ஒன்று கேட்பேன், தருவாயா?' என்று நீங்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் கண்ணாடி வீட்டில் சொன்னபோது என் உடல் புல்லரித்தது. என்னுடைய காதலைத்தான் மீண்டும் கேட்கப் போகிறீர்கள் என்று இந்தப் பேதை மனம் நினைத்தது. சுற்றியிருந்த பூஞ்செடிகளில் இருந்த மலர்களெல்லாம் மகிழ்ந்து அசைந்தாடி என்னை அதிர்ஷ்டசாலி என்று வாழ்த்தின.

''அடுத்த கணமே மிகப் பெரிய ஏமாற்றம் எனக்காகக் காத்திருந்தது. அதைக் கொஞ்சம்கூட நான் எதிர்பார்க்கவில்லை. அத்தகைய ஏமாற்றத்தை நீங்களேதான் அளித்தீர்கள்.

''காதலை எதிர்பார்த்த என்னிடம் பணத்தைப் பற்றிப் பேசினீர்கள். அப்போது கூட உங்களுடைய உள்ளக் கருத்தை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஏதோ கைமாற்றாகக் கேட்கிறீர்கள் என்று நினைத்தேன். அலட்சியமாகப் பதிலளித்தேன். நான் அசடாக இருந்தது உங்களைச் சங்கடத்துக் குள்ளாக்கி விட்டது. என்னைவிட்டு விட்டு அப்பாவைத் தனிமையில் சந்தித்துப் பேசியிருக்கிறீர்கள். என்னைப்போல் அல்லாமல் அவர் உங்களைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டார். பணம் கொடுத்து அனுப்பினார்.

''ஆனால் மறுபடியும் மறுபடியும் பணத்துக்காக வந்து தொந்தரவு செய்வீர்களோ என்று பயப்படுகிறார். அதற்காகவே உங்களை ஒழித்துக் கட்டத் திட்டம் வகுக்கிறார். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். மறுபடியும் அவரிடம் பணத்துக்காகப் போவதில்லை என்று சத்தியம் செய்யுங்கள். அதை நான் அப்பாவிடம் சொல்லி அவர் மனத்தை மாற்றுகிறேன்.''

''மல்லிகா! நீ அனாவசியமாகப் பயப்படுகிறாய். உன் அப்பா என்னை என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கிறாய்? கொலை புரிந்து விட்டு எத்தனை நாட்கள் வெளியே சுதந்திரமாக நடமாட முடியும்? செண்பகபுரம் கிராமத்திலே ஊர் பேர் தெரியாத ஒருவனைத் தீர்த்துக் கட்டி விட்டு ஓடி வந்து விடுவது வேறு, இதைப்போன்ற பட்டணங்களில் எல்லோருக்கும் நன்றாக அறிமுகமான என் போன்ற ஒருவனை ஒழித்துக் கட்டுவதற்கு முயல்வது வேறு.''

''உங்களுக்கு அவருடைய குணம் தெரியவே தெரியாது. எதற்கும் துணிந்தவர் அவர். உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். திரும்பவும் அவரிடம் சென்று விடாதீர்கள். அவர் எடுத்த திரைப் படத்தில் நான் நடித்ததற்காக நான் கேட்காமலேயே ஐம்பதினாயிரம் ரூபாய் என் பெயரிலேயே பாங்கியில் போட்டு வைத்திருக்கிறார். நான் வேண்டாம் என்று சொன்னேன். பிடிவாதமாக அவர் செய்த காரியம் இது. அந்த ஐம்பதினாயிரத்தையும் அப்படியே உங்களிடம் கொடுத்து விடுகிறேன். என்னிடமிருந்து வாங்கிக் கொண்ட புகைப் படத்தையும் எனது கடிதங்களையும் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!''

ஏரியின் பரந்த நீர்ப்பரப்பையும் தாண்டி நாலாபுறமும் இருந்த மக்களைத் திரும்பிப் பார்க்கும்படி செய்த ஒரு அவுட்டுச் சிரிப்பு சிரித்தான் சேகர்.

''யாரை ஏமாற்றப் பார்க்கிறாய், மல்லிகா? இவ்வளவு நேரம் நீ நடித்ததையெல்லாம் உண்மையென்றே நம்பி விட்டேன். மிகச் சிறந்த டைரக்டரல்லவா சுகுமாரன். நீதான் என்ன இலேசுப்பட்டவளா? எப்பேர்ப்பட்ட சினிமா நட்சத்திரம்? அவர் டைரக்ஷனில் நீ நடிக்கக் கேட்பானேன்? கொன்று விடுவார்களாம். குழிவெட்டி மூடுவார்களாம். காப்பாற்றுவதற்கு வந்திருக்கிறாளாம். அடடா! என்ன பரிவு என்மீது? அவ்வளவும் கடைசியில் ஐம்பதினாயிரம் கொடுத்து என்னைச் சரிக் கட்ட முடியுமா என்று பார்க்க!

''மல்லிகா! ஒருமுறை தவறுதலாக உன்னிடம் பேரம் பேச நினைத்தேன். மறுபடியும் அதே தவறைச் செய்யமாட்டேன். எந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறது என்று எனக்குத் தெரிந்து விட்டது. சுகுமாரன் கறக்கக் கறக்க வற்றாமல் சுரந்து கொண்டே இருப்பார். நீ சீக்கிரமாக வற்றி விடுவாய்.''

''உங்களுக்கு சுவிரக்கமே கிடையாதா? உங்களுக்குப் போய் உதவி செய்ய நினைத்து ஓடி வந்தேனே? எவ்வளவு பெரிய முட்டாள் நான்?''


கோபத்துடன் மல்லிகா எழுந்து நின்றாள். படகு இப்படியும் அப்படியுமாக ஆட ஆரம்பித்தது.

''மல்லிகா! உட்கார். படகு கவிழ்ந்து விடும்'' என்றான் சேகர்.

''உடனே கரையை நோக்கிப் படகை ஓட்டுகிறீர்களா? அல்லது இப்படியே குதித்து நீந்திப் போய் விடட்டுமா?'' என்று கேட்டாள் மல்லிகா.

''வேண்டாம்! வேண்டாம்! நானே கரைக்கு விடுகிறேன்'' என்றான் சேகர்.

கரையில் சுகுமாரனும் கதிர்வேலனும் காரில் வந்து காத்திருந்தார்கள். ''அப்பா! வாருங்கள் போகலாம்'' என்று சொல்லிக் காரில் ஏறினாள் மல்லிகா.



இருபத்துமூன்றும் அத்தியாயம்

கண்கள் இருண்டன!

மல்லிகா ஓடிச் சென்றபோது அவளைக் கட்டிப் பிடிக்க முயன்றான் கதிர்வேலன். சுகுமாரன் அவனைத் தடுத்து நிறுத்தினார். அவளைத் தடை செய்தால் மறுபடியும் கூச்சல் போடுவாள். ஏக ரகளையாகி விடும் என்று பயந்தார். அவள் போக்கில் விட்டுவிட விரும்பினார். ஒரு நாற்காலியில் நிதானமாக உட்கார்ந்தார். அதன் இரு கைகளையும் தனது உலக்கை போன்ற கரங்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு அவர் முகத்துக்கு நேரே குனிந்தான் கதிர்வேலன்.

"மாமா! இன்னொரு தடவை அந்தப் பாபச் சொற்களைப் பேசாதீர்கள். என்னால் தாங்கவே முடியாது."

"சொல்லத்தான் சொல்வேன், கதிர்வேலு! எப்படியாவது எனக்கு நீ இதில் உதவி செய்துதான் ஆக வேண்டும்!"

"மாமா! இத்தனை வருஷங்களாக நீங்கள் சொன்னபடியெல்லாம் கேட்டு வந்திருக்கிறேன். உங்களுக்காக என்னை நானே எத்தனை எத்தனையோ அபாயங்களுக்கெல்லாம் உட்படுத்திக் கொண்டு செய்யக் கூடாத காரியங்கள் பலவற்றைச் செய்திருக்கிறேன்.

"நீங்கள் குளிர்ச்சி சாதனம் பொருத்தப்பட்ட அறையில் சௌகரியமாக மெத்தை மேல் படுத்துத் தூங்கிய போது நான் திறந்த வெளியில் புல் தரையில் படுத்திருக்கிறேன். மோட்டார் காரில் நீங்கள் உல்லாசமாகச் சவாரி செய்த போது நான் நடுக் கடலில் உங்களுக்காகப் படகில் போயிருக்கிறேன். நீங்கள் கௌரவமான பெரிய மனிதராகக் கவலையின்றி வாழ, நான் போலீஸாருக்குப் பயந்து ஒடுங்கி ஒளிந்து வாழ்ந்திருக்கிறேன்.

"எல்லாம் ஒரே ஒரு நாள் நீங்கள் என்னிடம் காட்டிய பேரன்புக்குப் பிரதி உபகாரமாக, நன்றியாக..."

"இதெல்லாம் எனக்குத் தெரியாதா, கதிர்வேலு! உன்னை மாமல்லபுரத்திலிருந்து மல்லிகாவைப்பார்க்க அழைத்து வந்தபோது என்ன நினைத்தேன் தெரியுமா? எப்படியோ வேண்டிய செல்வம் திரட்டியாகி விட்டது. இனிமேலும் கதிர்வேலுவை இம்மாதிரியான காரியங்களில் ஏவி விடக்கூடாது. அவனுக்கு மல்லிகாவைக் கல்யாணம் செய்து கொடுத்து இருவரும் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவதைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் 'நாம் ஒன்று நினைக்க' என்பது போல் விதி வேறு விதமாகச் சதி செய்தது. நீ நிர்மலாவைச் சந்தித்துக் காதல் கொண்டாய். நடராஜன் மல்லிகாவைப் பார்த்ததிலிருந்து மனம் தடுமாறிக் கொண்டிருக்கிறான். விமலா மனம் புண்பட்டுக் கண்ணீர் விட்டு அழுகிறாள். இத்தனை சிக்கல்களும் போதாதென்று இப்போது சேகர் வேறு வந்து இறுக்கமாக ஒரு முடிச்சைப் போட்டிருக்கிறான். அந்த முடிச்சை அவிழ்க்கவே முடியாது. அறுத்துவிட வேண்டியதுதான்!"

"இது வரை என்னைச் செய்யச் சொல்லாத ஒரு காரியத்தை இப்போது செய்யும்படி பணிக்கிறீர்கள். இது வரையில் நான் உங்களுடைய தூண்டுதலின் பேரில் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பயங்கரமான குற்றத்தைச் செய்யும்படி நீங்கள் என்னை ஏவுகிறீர்கள்."

"அதற்கு ஒரு நல்ல யோசனையும் சொல்கிறேன். சேகரிடம் நெருங்கி நண்பனாகப் பழகு. நாளைக்கு அல்லது மறுநாள் அவனை அழைத்துக் கொண்டு 'தொட்ட பெட்டா' மலைச்சிகரத்துக்குப் போ. அங்கே யாரும் பாராத சமயத்தில் அவன் கால்களுக் கிடையில் ஒரு காலைக் கொடுத்து கைகளினால் தள்ளிவிடு. தவறி விழுந்து இறந்து விட்டான் என்று நினைத்துக் கொள்வார்கள்."

"அத்தகைய படுபாதகமான செயலைச் செய்ய இந்தக் கைகளுக்கும் கால்களுக்கும் வன்மை உண்டு, மாமா! ஆனால் துணிவு கிடையாது. அதற்குத் துணிந்த கரங்களை வைத்துக் கொண்டிருப்பதை விடத் துண்டித்து விடுவதே மேல்!"

"நீ எனக்கு உதவவில்லையானால் எனக்கு நானே உதவி செய்துகொள்ள வேண்டியதுதான்!"

"வேண்டாம், மாமா! வேண்டாம். முன்பு ஒரு முறை குடி போதையில் இதே போன்ற குற்றத்தைச் செய்தீர்கள். அப்போது உங்கள் சித்தம் சுவாதீனத்தில் இல்லை. ஆனால் இப்போது மனமறிந்து அதே குற்றத்தை மீண்டும் செய்யாதீர்கள். அதை என்னால் கூடப் பொறுக்கவே முடியாது."

"வேறு வழியில்லையே, கதிர்வேலு!"

"ஆத்திரத்தில் நீங்கள் யோசிக்கும் திறனை இழந்து விட்டீர்கள், மாமா!

உணர்ச்சி வசப்பட்டதால் உங்கள் கூர்மையான புத்தி மழுங்கி விட்டது. அமைதியாக யோசித்துப் பாருங்கள். ஏதாவது வழி புலப்படும்.''

சுகுமாரன் கால்களை நீட்டி உடலைத் தளரவிட்டார். கண்களை மூடிக்கொண்டு அமைதியாகச் சிந்திக்க ஆரம்பித்தார். அவரை யோசிக்க விட்டு அறைக்கு வெளியே வந்து விட்டான் கதிர்வேலு. வருஷக்கணக்காகப் பழகியதில் அவருடைய சுபாவம் அவனுக்கு நன்கு தெரிந்திருந்தது. ஐந்து நிமிஷங்கள் இப்படி யோசித்தாரானால் நிச்சயம் விடையைக் கண்டுபிடித்து விடுவார்.

மூன்றே நிமிஷத்தில், '' கதிர்வேலு !'' என்று அழைத்தார் சுகுமாரன். உள்ளே நுழைந்த அவனைச் சந்தோஷத்தினால் அப்படியே கட்டிக் கொண்டு விட்டார்.

'' நீ சொன்னது உண்மைதான். வழி கண்டுபிடித்து விட்டேன், கதிர்வேலு ! என்னிடம் சேகர் வந்து பணம் கேட்கக் காரணமாயிருப்பது என்ன ? ஒரு போட்டோவும் சில கடிதங்களும்தானே? அவற்றை அவனிடமிருந்து எப்படியாவது நாம் எடுத்துக் கொண்டு வந்து விட முடியுமானால்...?''

'' சபாஷ், மாமா ! இவ்வளவு சுலபமாக முடிகிற காரியத்துக்குப் பயங்கரத் திட்டம் போட்டீர்களே !''

'' நீ சொன்னது போல்] ஆத்திரத்தில் யோசிக்கும் திறனை இழந்துதான் விட்டேன், கதிர்வேலு ! இந்த இரண்டாவது திட்டத்துக்குத் தயங்காமல் நீ எனக்கு உதவி செய்வாயல்லவா ?''

'' கண்டிப்பாக உதவி செய்கிறேன். ஆனால் பாவம், மல்லிகாவைத்தான் ரொம்பப் பயமுறுத்தி விட்டீர்கள். சேகரைப் பார்க்கத்தான் அவள் ஓடிச் சென்றிருப்பாள். அவனிடம் அவள் என்ன சொன்னாளோ !''

'' நாம் சதி செய்வதாகச் சொல்வாள். சொல்லட்டும், பரவாயில்லை. சேகருக்குக் கொஞ்சம் பயமாவது இருக்கும் அல்லவா ? சரி, வா ! அவளைப் போய் அழைத்து வரலாம்.''

சேகருடைய அறையை இருவரும் அடைந்தார்கள். அறை திறந்திருந்தது. நிலைகுலைந்த மல்லிகாவைக் கண்டதினால்



ஏற்பட்ட மனக் கிலேசத்தில் அறையைக் கூடப் பூட்டாமல் அவனை அழைத்துக் கொண்டு ஏரிக்கரைக்குச் சென்று விட்டான் சேகர். உள்ளே ஒருவரும் இல்லை என்று கண்டதும் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சுகுமாரனும் கதிர்வேலுவும் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். சேகருடைய பெட்டி படுக்கைகளைத் துருவித் துருவித் தேடினார்கள்.

கடைசியில், ''இங்கே கொண்டு வந்திருக்க மாட்டான், மாமா! சென்னையில் வீட்டிலேயே பத்திரமான இடத்தில் வைத்திருப்பான்'' என்றான் கதிர்வேலு.

''நானும் மல்லிகாவும் இங்கேயே இருக்கிறோம். நீ காரை எடுத்துக் கொண்டு சென்னைக்குப் போய் வந்து விடு. சேகர் இங்கு இருக்கும்போதே போனால் உன் வேலை சுலபமாக முடிந்து விடும். அவனுக்குச் சந்தேகம் ஏற்படாதவாறு இங்குநாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றார் சுகுமாரன்.

காரில் ஏறிக் கொண்டு மல்லிகாவை அழைத்து வருவதற்கு ஏரிக் கரைப் பக்கம் சென்றார்கள்.

** ** **

சுகுமாரன் எதிர்பார்த்ததுபோல் சேகர் சந்தேகப்படாமல் இருக்கவில்லை. அறைக்குத் திரும்பியதுமே பெட்டி படுக்கை முதலானவை கலைந்திருப்பதைப் பார்த்தான். யாரோ எதையோ தேடியிருக்கிறார்கள் என்று உடனே தெரிந்துவிட்டது. அதை உணர்ந்ததும் தனக்குத் தானே அவன் இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

மறுநாள் சுகுமாரனையும் மல்லிகாவையும் மட்டுமே அவனால் சந்திக்க முடிந்தது. கதிர்வேலனையும் சுகுமாரனுடைய காரையும் அவன் தேடினான். அகப்படவில்லை. இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்குப் போடுவது அவனுக்குக் கஷ்டமாக இல்லை.

சுகுமாரனைத் தனியாகச் சந்தித்து, ''டைரக்டர் சார்! ரொம்பப் பிரமாதமான யோசனைதான் போங்கள்! ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மறந்து விட்டீர்கள்.



நான் காமிராமேன். மல்லிகா எழுதிய ஒவ்வொரு கடிதத்தையும், போட்டோ பிடித்து வைத்திருக்கிறேன். அதேபோல் செண்பகபுரத்தில் என்னிடம் கிடைத்த போட்டோவையும் மறுபடியும் போட்டோ எடுத்து வைத்திருக்கிறேன். அந்த 'நெகடிவ்களை' ஒரு பாங்கியில் கொடுத்து இரும்பு அறையில் வைக்கச் சொல்லியிருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் அவற்றைக் கொண்டு வந்து 'போட்டோ பிரிண்டு'கள் போட முடியும் என்றால்!'' என்று சொல்லி விட்டு 'இடி இடி' யென்று சிரித்தான்.

சுகுமாரன் ஸ்தம்பித்து நின்றார்.

** ** **

மலையிலிருந்து வளைந்து வளைந்து கீழே இறங்கியது மோட்டார். கதிர்வேலன் மெதுவாகவே வண்டியைச் செலுத்தினான். மலைமீது ஏறுவதைவிடக் கீழே இறங்குவதில்தான் அபாயம் அதிகம் என்று அவனுக்குத் தெரியும். திருப்பங்களில் அதிகமாக பிரேக் போட்டால் சறுக்கிவிடும் என்று பயந்து 'கிய'ரை மூன்றாவதுக்கு மாற்றி வேகத்தைக் குறைத்து ஜாக்கிரதையாக ஓட்டினான்.

அதிகாலையிலேயே இருட்டோடு இருட்டாக அவன் ஊட்டியை விட்டுக் கிளம்பி விட்டான். கன்னங்கரிய இருளில் கார் திரும்பும்போதெல்லாம் விளக்குகளின் ஒளி பிம்பம் மலைச்சாரலுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

மலையிலிருந்து இறங்கிச் சமதரையை அடைந்த பிறகு வேகத்தைக் காட்டும் கருவியின் முள் அறுபதை எட்டி அதிலேயே நிலைத்து நின்றது.

அவனுடைய மனோ வேகத்துக்குக் காரின்வேகம் போதவில்லை. தன்னுடைய சாமர்த்தியம் அத்தனையும் உபயோகித்து காரை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்றான். கார் ஓடுவதாகவே தெரியவில்லை. ஆனால் சாலையின் இரு புறங்களில் இருந்த மரம் செடி கொடி எல்லாம் அவனை எதிர் நோக்கி வெகு வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தன. கார் சென்னை நகரை நெருங்குகிறது என்பதைச் சாலையில் வைக்கப்பட்டிருந்த மைல் கற்கள் கதிர்வேலனுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தன.

கதிர்வேலனுக்கும் சென்னைமா நகரத்துக்கும் இடையே இருந்த தூரம் குறையக் குறையத்தான் இவ்வளவு வேகமாகக் காரை ஓட்டிச் செல்வதில் அர்த்தமில்லை என்பது அவனுடைய அறிவுக்கு எட்டியது. எப்படி இருந்தாலும் நடு நிசிக்கு மேல்தான் சேகரு

டைய வீட்டைச் சோதனையிட முடியும். அதற்கு இப்போது முதற் கொண்டே அவசரப்படுவானேன்?

** ** **

அரை வட்டமான சந்திரன் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். சந்தடி அடங்கி எங்கும் அமைதி நிலவியது. ஊரில் உள்ளவர்கள் களைத்து உறங்கிய அந்த நேரத்தில், சேகருடைய வீட்டு வாசலில் சுகுமாரனுடைய கார் நின்றது. அதிலிருந்து கதிர்வேலன் கீழே இறங்கித் தோட்டத்துக்குள் நுழைந்து சென்றான். வீட்டைச் சுற்றி ஒரு முறை வலம் வந்து நோட்டம் பார்த்தான்.

மறுபடியும் காருக்குச் சென்று பின் பக்கத்தில் சாமான்கள் வைக்கும் அறையைத் திறந்தான். அதிலிருந்து, சக்கரத்தை மாற்றும்போது காரைத் தூக்கி நிறுத்த உபயோகிக்கும் 'ஜாக்கி' என்னும் கருவியை எடுத்துக் கொண்டு மறுபடியும் வீட்டுப் பக்கம் சென்றான்.

சேகருடைய வீடு பழைய காலத்தை ஒட்டியும் இல்லாமல் நவீன காலத்தைப் போலும் அல்லாமல் கட்டியிருந்தது. அதிலிருந்த ஜன்னல்கள் நல்ல உறுதியான கம்பிகளால் ஆக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு ஜன்னல் அருகிலும் சென்று அதன் கம்பிகளைத் தன்பலம் பொருந்திய கைகளால் பிடித்து அசைத்து அசைத்துப் பார்த்தான். கடைசியில் ஒரு ஜன்னலுக்கு அருகில் வந்து நின்றான். நான்கு புறமும் ஒரு முறை சுற்றிப் பார்த்தான். அந்த ஜன்னலில் இருந்த இரண்டு கம்பிகளுக்கிடையே அந்தக் கருவியைக் கொடுத்து இயக்கினான். கம்பிகள் சிறிது சிறிதாக விலகிக் கொண்டன. மிகுந்த பிரயாசைப்பட்டுத் தன் அகன்ற மார்பையும் தோள்களையும் அங்கு ஏற்பட்ட இடைவெளி வழியே நுழைத்து வீட்டினுள் புகுந்தான்.

ஓசைப்படாமல் ஒவ்வொரு அறையாகச் சோதனையிட்டான். ஒரு அறையில் சேகருடைய மனைவியும் இரு குழந்தைகளும் நன்றாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். சத்தமில்லாமல் கதவைச் சாத்திவிட்டுச் சேகருடைய பிரத்தியேக அறையை அடைந்தான். கையிலிருந்த பேனாக் கத்தியின் உதவியினால் ஏதோ மந்திர ஜாலம் செய்வது போல் அலட்சியமாக மேசை உள் பூட்டுகளைத் திறந்தான். அடுத்த கணம் மேசை டிராயர்களை ஓசைப்படாமல் திறந்தான். ஒவ்வொரு டிராயரையும் துருவித் துருவி ஆராய்ந்தான். நான்காவது டிராயரில் அவன் தேடி வந்த போட்டோவும் கடிதங்களும் கிடைத்தன. அவற்றைப்

பத்திரமாகப் பையில் வைத்துக்கொண்டு திரும்பினான் கதிர்வேலன்.

** ** **

காரியம் வெற்றியடைந்ததில் ஒரே உற்சாகம் கதிர்வேலனுக்கு. அதைச் சுகுமாரனுக்கு உடனே தெரிவிக்க விரும்பினான் அவன். அவருடைய வீட்டுக்குப் போய் டெலிபோனில் ஊட்டியைக் கூப்பிட்டுச் சொல்ல நினைத்தான்.

சுகுமாரன் வீட்டுக்கருகே கதிர்வேலன் காரை நிறுத்தியபோது சற்றுத் தூரத்தில் இன்னொரு கார் நின்று கொண்டிருந்தது. அதனுள் இருந்தவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். நெருப்புக் குச்சி எரிந்தபோது அவன் முகம் பளிச்சென்று தெரிந்தது. குணநாயகா!

'ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மற்றொரு கன்னத்தைக் காட்டுவது பைபிளில். குற்றம் புரிந்தவனை மன்னிப்பது கீதையில். என்னிடம் அதெல்லாம் கிடையாது. நீயும் நானும் ஈடுபட்டிருக்கும் இந்தத் தொழிலில் அப்படியெல்லாம் நடக்காது. அடித்தவனுக்குப் பதில் அடி. குத்தியவனுக்குக் குத்து. உதைத்தவனுக்கு உதை. கதிர்வேலு! என்னை அடித்தாய், குத்தினாய், உதைத்தாய். உனக்கு மரணம்! உனக்கு மரணம்!' என்று கதிர்வேலன் அடித்ததால் ஏற்பட்ட காயம் ஆறாத அவனுடைய வாய் முணுமுணுத்தது.

'உன்னுடைய வருகைக்காகத்தான் காத்திருந்தேன். வந்து விட்டாய். வா! வா!' என்று வரவேற்றது.

உற்சாகம் கரைபுரண்டு ஓடத் துள்ளல் நடை போட்டான் கதிர்வேலன்.

குணநாயகா சிகரெட்டை வீசி எறிந்து விட்டுக் காரைக் கிளப்பிக் கொண்டு வேகமாக அவனை நோக்கி வந்தான். காரின் பிரகாசமான விளக்குகள் கதிர்வேலனுடைய கண்களைக் கூசச் செய்தன. மிகுந்த பிரயாசைப்பட்டு ஒரு கணம் கண்ணைத் திறந்த அவனுக்கு அந்தக் காரின் நிறம் நடுக்கத்தை உண்டாக்கியது. ஒரே சிவப்பு!

தன்னை நோக்கியே அந்தக் கார் வருவதைக் கண்டதும் சமயோசித புத்தி வேலை செய்து நடுக்கத்தை நீக்கியது. சட்டென்று அப்பால் நகர்ந்து கொள்ள யத்தனித்தான் கதிர்வேலன். ஒரு கல் காலைத் தடுக்கி விட்டது. மலையைப் புரட்டினாலும் கதிர்வேலனுடைய உடம்பைப் புரட்ட முடியாது. அந்த உடல் இப்போது கல் தடுக்கிக் கீழே விழுந்தது. ஒரு காலில் இருந்த செருப்பு உயரப் பறந்தது. கையிலிருந்த சாவிக்கொத்து எகிறி விழுந்தது.

அந்தச் சிவப்பு நிற மோட்டார் உறுமிக் கொண்டே முன்னேறிக் குன்றின் மீது ஏறி இறங்கி விரைந்தது. கதிர்வேலனுடைய கண்களில் ஒரே சமயம் நூறு சூரியன்களின் ஒளிக் கற்றைகள் தாக்கின. அடுத்த கணம் அவன் கண்கள் இருண்டன. எங்கோ அதள பாதாளத்தை நோக்கியபடி கீழே, கீழே இன்னும் கீழே போய்க் கொண்டிருந்தான் கதிர்வேலன். (தொடரும்)

கால்கேட் குளோரோபில்* ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.

வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.


சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!



இதோ! பெரிய எக்கானமி அளவில் கிடைக்கிறது



கனக்கு வந்தால்...

ரா. வீ.


ஷிங்கியாங்மாகாணத்தில்நைன்கிங் கிராமத்தைச் சேர்ந்தவன் லீ கங். அவன் வீட்டில் அவன் மனைவியைத் தவிர, இரு புதல்வர்களும், இரு புதல்விகளும் இருந்தார்கள். இவ்வளவுதான் அவனது குடும்பம். நைன்கிங்கில் லீ கங்கின் எத்தத் தொழிலும் வளமுற்று வேர் பிடிக்க வில்லை. எனவே, சாங்காயிக்குச் சென்று ஒரு ஹோட்டல் வைப்பது என்று முடிவு செய்தான். ஹோட்டல் வைப்பது என்ற எண்ணம் உதித்ததுமே, அவன் தன் முதலீடுகளை யெல்லாம் ஒன்றுசேர்த்துக் கொண்டான். தன் குடும்பத்தார்களிடம் விடைபெற்றுக் கொண்டு தனியாகவே சாங்காயிக்குப் புறப்பட்டுச் சென்றான். சாங்காய் சென்று தொழில் பிடித்துக் கொண்டு விட்டால் குடும்பத்தார்களை அழைத்துச் செல்லலாம் என்பது அவன் உள்ளூறப் போட்டு வைத்திருந்த திட்டம்.

சாங்காய் சென்றதும் லீ கங் தன் பழைய வேலைக்காரன் சியாங்கை அவனது குடும்பத்துடன் வரவழைத்துக் கொண்டான். சியாங்கை அவன் சமையற்காரனாக நியமித்தான். சியாங்கும் நல்ல நல்ல ருசிகரமான உணவுப் பொருள்கள் தயாரிப்பதில் தன் பொழுதைச் செலவிடலானான்.

லீ கங்கின் ஹோட்டல் தொழில் நன்றாக நடக்கத் தொடங்கி விட்டது. ஹோட்டலின் முன்னேற்றத்தில் கருத்துக் கொண்ட அவன் வேலைக்கு அழகிய யுவதிகளை நியமிக்கத் தொடங்கினான். உணவு பரிமாறும்பொழுது பெண்கள் வாடிக்கைக்காரர்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கேற்ப, கேலியும் கொம்மாளப் பேச்சுமாகப் பேசி மகிழ்விக்கலாயினர். வாடிக்கைக்காரர்கள் உணவருந்தி விட்டுப் போகும் பொழுது, அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்குமாறு அவர்களுக்கு அன்பு அழைப்பும் விடுக்கலாயினர்.

வியாபாரம்வளர்ந்தது. லீ ஹோட்டலிலேயே யாத்திரிகர்கள் வந்து தங்குவதற்கான ஏற்பாட்டையும்செய்தான். லீயின் உத்தரவுப்படி ஹோட்டலில் தங்கும் யாத்திரிகர்களின் சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ளும் முழுப் பொறுப்பும் பெண்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்கள் அதில் அக்கறை செலுத்தத் தொடங்கினார்கள்.

நாளடைவில் லீ இன்னொரு புதிய ஏற்பாடும் செய்து விட்டான். எந்த அறைக்கு எந்தப் பெண் நியமிக்கப்படுவாள் என்பதை லீ முன் கூட்டியே தெரிவிக்கலானான். அதோடு அந்த அறையில் அந்தப் பெண்ணின் படத்தையும் அழகுற அமைத்து அலங்கரித்து வைக்கலானான். இதனால் தங்கள் மனத்துக்குப் பிடித்த அறை கிடைக்க வேண்டும் என்



ஆட்காரர்: என்னை வெளியே தள்ளின கையோடே என்னுடைய காரையும் கொஞ்சம் தள்ளி விடுங்களேன்!

பதற்காக வாடிக்கைக்காரர்களுக்கிடையே போட்டி மனப்பான்மையே உண்டாயிற்று. அதனால் லீ கங்கைச் சுற்றிப் பண மழை பொன்மாரியாகப் பொழியலாயிற்று.

லீயின் மூளை வேகமாக வேலை செய்தது. சீனு, ஜப்பான், பர்மா முதலிய நாட்டு நங்கைகளைப் பொறியில் சிக்க வைத்துப் பிடித்து வருவதற்காகப் பல இடங்களிலும் தனது ஏஜண்டுகளை நியமித்தான். தனது குடும்பத்தைச் சாங்காய்க்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு எழவில்லை. பணம் காசு அனுப்புவதைத் தவிர அவன் தன் குடும்பத்தைப் பற்றி வேறு கவலையே கொள்வதில்லை. முதிர்ந்த பிராயத்தினனான சியாங்குக்குத் தனது எசமானனின் இந்த அடாத செயல்கள் துளிக்கூடப் பிடிக்கவில்லை. அதனால் அவன் பெரும்பாலும் தான் உண்டு, தன் அறை உண்டு என்றே இருந்து வந்தான். அதை விட்டு வெளியே வருவதே இல்லை. உண்மையைக் கேட்டால், அவனுக்கு வேலையிலிருந்து ஒரு நிமிஷமாவது ஓய்வு கிடைத்தால்தானே? தினம் தினம் யாராவது பெரிய தனவந்தர்கள் வருவார்கள். அவர்களுக்கு அறுசுவை உண்டி தயார் செய்வதிலேயே அவனது பொழுது போய் வந்தது.

"புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி!"

தினம் போல் தனது பிரார்த்தனையை முடித்தான் கிழவன் சியாங்க். இதே நேரத்தில் ஒரு வேலைக்காரன் பிரவேசித்து எசமானனின் கட்டளையைத் தெரிவித்தான்:

"சூகியாங்க் பிரதேசத்தைச் சேர்ந்த அரசகுமாரர் இன்று விஜயம் செய்திருக்கிறார். அவருக்கு உணவு எடுத்துக் கொண்டு இரவு எட்டு மணிக்குத் தாங்கள் ஆஜராக வேண்டும்!"

இரவு குறிப்பிட்ட நேரத்தில் உணவுத் தட்டுடன் சியாங்க் அரச குமாரரது அறையை அடைந்தான். அறைக்குள் அடிஎடுத்து வைத்ததும் சியாங்க் அங்கே கண்ட காட்சி அவனை நிலைகுலையச் செய்தது! மின்னொளி தாக்கியது போன்ற அதிர்ச்சியை உண்டு பண்ணியது. உணவுத் தட்டிலிருந்து அவ்வளவு பதார்த்தங்களும் தரையிலே விழுந்து சிதறின.

சியாங்கின் செல்வப் புதல்வி நித்லேயையே எசமானன் தன் வலையில் சிக்க வைத்து, அரசகுமாரருக்குப் பணிவிடை செய்ய நியமித்திருந்தான். சியாங்கின் கண்கள் எதிரே மையிருட்டு பரவியது. அவன் மூர்ச்சையுற்று அப்படியே அடியற்ற மரம் போலச் சாய்ந்தான். யாரோ அவனை மெதுவாக வெளியே எடுத்து வந்தான். நிறையச் சாராயத்தைப் புகட்டினான். அதன் பலனாக, ஏறக்குறைய பதின்மூன்று பதினான்கு மணி நேரம் சியாங்க் சுயநினைவு இழந்து கிடந்தான்.

காலையில் கட்டிலிலிருந்து எழுந்த சியாங்க் தனது அருமைப்புதல்வி நித்லே தன் கால்மாட்டில் அமர்ந்து பிழியப் பிழிய அழுது கொண்டிருப்பதைக் கண்டான். அவள் எசமானனது காவாலிக் கோஷ்டியினரை எதிர்த்துப் போரிட்டும் வெற்றி கிட்டாத கதையைக் கூறிக் கூறி அழுது கொண்டிருந்தாள். அவள் முதுகிலே பிரம்படியினால் உண்டான தடிப்புக் கோடுகளையும் கன்னத்திலே காவாலிகளின் நகங்கள் பதித்த கீறல்களையும் கண்ணுற்று சியாங்க் பதறிவிட்டான். நித்லே தயவே உருவான தந்தையின் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசித்தாள். கிழவனான சியாங்க் துயரம் தாங்காமல் கதறி அழுது கண்ணீரைப் பெருக விட்டான். அவன் தனது நிஷ்களங்கமான மகளின் கன்னங்களை வருடி, "நாம் இந்தப் பாவக் குழியை விட்டு விட்டு வெளியேறி விடுவோம். கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறினான்.

லீ கங் கதவிடுக்கில் நின்று இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் அவர்களெதிரே தோன்றிக் கடகடவென்று நகைக்கலானான். அந்த நகைப்பிலே அவனுக்கு இருமல் வந்தது. வந்த இருமலை ஒருவாறு சமாளித்து

அடக்கிக் கொண்டு கம்பீரமான குரலில் சியாங்கைப் பார்த்துச் சொன்னான்:

"ஜாக்கிரதை, சியாங்! இந்த மாதிரியெல்லாம் பேசாதே. நீ இங்கிருந்து எங்கும் போக முடியாது. உன் அப்பன் சாகும்பொழுது எனக்கு வாக்கு அளித்தானே, உனக்கு நினைவில்லையா? அந்த வாக்குப் பிரகாரம், கங் குடும்பம் நசிக்கும் வரையில், உங்கள் குடும்பத்தினர் அவர்களுக்கு அடிமை புரிய வேண்டும். அதற்கு மறுத்து நீ போகத்தான் போவேன் என்றால் நிந்ஷேயை என்னிடம் ஒப்புவித்து விட்டுத் தாராளமாக நீ போகலாம். அதற்கும் சம்மதமில்லையென்றால், நிந்ஷேயைப் போன்ற ஒரு அழகியை எனக்கு அடிமையாக்கி விட்டுப் போகலாம்!"

இவ்வளவு சொன்ன லீ கங் எதிராளியின் பதிலை எதிர்பாராமலே, இலட்சியம் செய்யாமலே, அங்கிருந்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டே சென்று விட்டான்.

சில தினங்களுக்குப் பிறகு சியாங் பாரத நாட்டுக்குப் புறப்பட்டு விடுவது என்று தீர்மானித்துப் பயணத்துக்கான ஆயத்தமும் செய்தான். தனது குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் அவன் படகில் ஏறியும் விட்டான்.

சியாங் புறப்பட்டு விட்டான் என்ற செய்தியை அறிந்த லீ மானேஜரை அழைத்து, "சியாங் தன் மகளை அழைத்துச் சென்று விட்டானா? அல்லது விட்டுப் போய் விட்டானா?" என்று கேட்டான்.

"நேற்று மாலை சியாங் ஒரு அழகிய இளம் மங்கையைக் கொண்டு வந்து ஆஜர் செய்து விட்டான். அதனால் தங்கள் உத்தரவுப் பிரகாரம் அவனுக்குப் போக அனுமதி அளிக்கப்பட்டு விட்டது!" என்றான் மானேஜர்.

"அந்தப் பெண் எங்கேயிருக்கிறாள்?"

"அறை எண் 40-ல்."

"அந்தப் பெண் மிகுந்த அழகியோ?"

"ஆம், எசமான்! அவள் ரொம்ப அழகுதான். முதல்நாள் ஆனபடியால் அவள் எத்தகைய வேலையையும் செய்ய மறுத்து, மிகுந்த குழப்பத்தை விளைவித்து விட்டாள். இன்று காலை முதல் அவளை ஒரு அறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறோம்!"

"சீக்கிரமே வழிக்கு வந்து விடுவாள்!" என்று இன்நகையாடக் கூறிவிட்டு லீ அந்தப் புதிய அழகியைப் பார்த்து வருவதற்காக அந்த அறைக்குச் சென்றான்.

அவன் அறைக் கதவைத் திறந்தான். உள்ளிருந்த பெண் முகத்தைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள். அடுத்தகணம்,



"அப்பா!" என்று அறை எதிரொலிக்க உரக்கக் கூவி விட்டாள். லீக்கு உடல் ரத்தம் உறைந்து விட்டது. அவள் வேறு யாரும் இல்லை. அவனது அன்புக்கண்பான மகள் சியூலிதான். சியாங் வாங்கிய இந்தப் பழி லீயின் உள்ளத்தைச் சுக்குநூறாக்கி விட்டது. அல்லல்பட்டு அவதியுற்ற மலரை யொத்த தன் மகளை மார்புறத் தழுவிக் கொண்டான். பத்தாண்டுகளுக்குப் பின் மகளுக்கும் தந்தைக்கும் இந்தப் பயங்கரச் சந்திப்பு ஏற்பட்டிருந்தது. அடிமை வேலை செய்த சியூலியின் முதுகில் பிரம்படியின் தழும்பும் கன்னங்களிலே கீறல்களும் தெரிந்தன.


லீயின் ஆத்மா அதிர்ச்சியினால் நடுக்கமுற்றது. அவன் உடனே தனது மானேஜரைக் கூப்பிட்டு உத்தரவிட்டான்:

"பிடித்து வந்திருக்கும் பெண்கள் அனைவரையும் விடுவித்து விடு. வேலைக்காரர்கள் அனைவருக்கும் அவரவர்கள் சம்பளத்தைக் கணக்குப் பார்த்துக் கொடுத்துத் தீர்த்து விடு!"

மறு நாள் காலையில் பார்த்தால் ஹோட்டல் வாசலில் ஒரு பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

"புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி!" என்று மனத்துள் முணுமுணுத்துக் கொண்டே, அவன் ஸிங்கியாங் மாகாணத்தைச் சேர்ந்த நைன்கிங் கிராமத்தை அடைந்தான். ஏன் தெரியுமா? ஸிங்கியாங் மாகாணத்திலுள்ள நைன்கிங் கிராமத்தைச் சேர்ந்தவன் அல்லவா லீ கங். அதனால்தான்!

[ஸ்ரீரத்னகர் குஜராத்தி எழுதிய கதை ஒன்றின் தழுவல்]



'இந்த வீட்டில்தான் குடியிருந்தோம். ஆனால் வீட்டுக் காரர்கள் ப்ளிட் அடிகக ஆரம்பித்துவிட்டார்கள்!'
FLIT
KILLS
ப்ளிட்
... ஸ்டான்வாக்
கம்பெனியால் வழங்கப்படுகிறது
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)



76. ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

நல்லதைச் சொல்வதானால் எத்தனை தரம் சொன்னாலும் தப்பாகாது. ஆகையால் ஏற்கெனவே சொல்லி விட்ட விஷயமானாலும் பரவாயில்லை. இன்னுமொருமுறை சொல்லி விடலாமே என்று தோன்றியது.

முதல் தடவை மாமனார் வீட்டுக்குச் செல்லும் புது மாப்பிள்ளைக்கு என்ன உபசாரம், மரியாதை ஆதரவு எல்லாம் கிடைக்குமோ அது பன்மடங்காகத் தில்லியிலுள்ள கல்கியின் நேயர்களிடமிருந்து கிடைத்தது. அன்பிலோ - ஒரு மகன் தன் தாயிடம் மட்டும் பெறக் கூடிய அன்பும் கனிவும் கிடைத்தன.

"பிரபோ! ஸ்ரீராமச்சந்திர! நான் எத்தனை பிறவி வேணுமானாலும் எடுக்கிறேன். ஆனால் ஒவ்வொன்றிலும் தில்லியிலுள்ள கல்கி நேயர்களைப் போன்றோருடன் இப்போதுள்ளது போன்ற தொடர்பு மட்டும் கட்டாயம் இருக்க வேணும்" என்று வேண்டிக் கொள்கிறேன்.

கல்கியின் வாயிலாகக் கிடைத்த அறிமுகமும் கல்கி நேயர்கள் அளிக்கும் அன்பும் வரவேற்பும் அத்தகையது. "தாங்க்யூ ஆல்" என்று சொல்லியோ, "இதற்காக வெல்லாம் எனது மனமார்ந்த நன்றிகள்" என்று சொல்லியோ, இதோடு விட்டது எனது நன்றிக் கடன் என்று நிம்மதிபெற ஆசையில்லை; துணிவுமில்லை. கல்கிக்கும் கல்கி நேயர்களுக்கும் பட்ட கடன் அப்படியே நிற்கட்டும். வட்டிகூடச் செலுத்தச் சாத்தியப்படாமல் இந்த அன்புக் கடன் அப்படியே நிற்கிறதே! 'கடன் தீர்க்க வழியில்லையே!' என்ற எண்ணம் எக்காலத்திலும் என் நெஞ்சில் நிலைத்திருப்பதில் தான் எனக்கு ஒரு ஆனந்தமுண்டு.

சொல்ல வந்த விஷயத்திலிருந்து நெடுந்தூரம் விலகி வந்து விட்டேனே! ஒரு குறிப்பிட்ட விஷயம் நேயர்கள் கடிதம் ஒன்றில் காண நேரிட்டது. அதற்குள்ள பதிலை எழுதியனுப்பினேன். ஆனால் அவ்விஷயத்தை ஏனைய கல்கி நேயர்களுக்கும் தெரிவிக்க வேணுமென்ற எண்ணம் எழுந்தது.

கடிதம் 591-ல் திருக்கோயிலூர் சகோதரி எழுதுகிறார்.

"நான் தங்களுக்குக் கடிதம் எழுதிய பிறகு...கட்டுரை 66-ல் ஈஸினோபைல் உள்ளவர்களுக்கு அச்வகந்தா லேகியம் கொடுக்கலாம் என்றும் தெரிய வந்தது. மறுதினம் முதல் நாளும் அச்வகந்தா லேகியம் தயாரித்து என் மகனுக்குக் கொடுத்து வருகிறேன். இருமலும் கபம் துப்புவதும் குறைந்திருக்கின்றது. மூச்சு இழுப்பு நின்றிருக்கிறது. இதைக் கண்டு எனக்கு மனம் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறது. தாங்கள் 22-6-58 கல்கி இதழில் எழுதிய...சீரகத்தை முசுமுசுக்கையில் ஊறவைத்து... கலந்து செய்த சூரணமும் செய்து அவனுக்குக் கொடுத்து வந்தேன். அதிலும் நல்ல குணம் ஏற்பட்டிருக்கிறது. தங்கள்..." பாக்கி எல்லாம் புகழுரை.

ஆகவே இந்த ஆஸ்த்மா விஷயமாகப் பல பேர்கள் தாங்களே பலனடையும் வகையில் தம் முயற்சியையே உபயோகிக்கத் தொடங்கி விட்டதால் இனி ஆஸ்த்மாவைப் பற்றி நேயர்கள் ஏதாவது கேட்டு எழுதினால் பதிலே போட மாட்டேன். ஏன்? அவசியமில்லையே!

கடிதம் 611-ல் சேலக்கரை சகோதரி எழுதுகிறார்.

"கல்கியில்... என்னால் புகழ்ந்து எழுத வார்த்தைகள் நான் நினைக்குமளவில் கிடைக்கவில்லை. ...முகப் பருக்கள் பற்றி எழுதிக் கேட்டிருந்தேன். அதற்குத் தாங்கள் கடித எண் 151/1 குறித்துள்ளபடி ...... அவைகளை உபயோகித்ததில், முகம் இப்பொழுது மினுமினுக்கிறது. முகாலேபனம் பற்றிய தங்களது கட்டுரைப்படி பொடிகள் செய்து உபயோகித்ததில் முன்னைய பருக்களின் வடுக்களும் குழிகளும் மறைந்து முகம் வழுவழுப்பாக மாறி இருக்கிறது. இதைப் பற்றித் தங்களை...." பிறகு புகழுரை தான். இவரே தொடர்ந்துஎழுதுகிறார்...

"221/1 கடிதத்தில் முடி விஷயமாக நீலிபிருங்காதியை உபயோகித்ததில் தலை முடி நரைப்பது நீங்கி, முடி நன்றாக வளர்ந்திருக்கிறது. தைலம் காய்ச்சும் முறையில் கல்கியில் வெளியான பின்னர் இங்கே காய்ச்சினோம். மலையாளத்தில்..." என்று தொடங்கி மருந்துகளின் மலையாளப் பெயர்களை எழுதி, பிறகு ஒரு புகழுரையுடன் கடிதத்தைப் பூர்த்தி செய்கிறார்.

ஆகவே முக மினுக்கி விஷயமாகவும் முடிகள் விஷயமாகவும் நேயர்கள் எழுதிக் கேட்பாராளுல் நான் பதில் எழுத மாட்டேன். அவ்வளவுதான்.

சீடிதம் 644/2-ல் நேயர் எழுதுவது தான் முக்கியமான விஷயம். இது சுவித்திரம் என்னும் வியாதியைப் பற்றியது. இதில் சருமத்தின் சுயநிறம் மாறி வெண்ணிறம் அல்லது வெண்மைக்கு ஏறத்தாழச் சமமான நிறம் ஏற்படுகிறது.

'' ஐயா! நான் பெண்ணுகப் பிறந்து'' ...என்று எழுதுகிருர்.

பாரதத்தில் பெண்ணுய்ப் பிறந்தவள் கண்கலங்கினுல் தர்மதேவதை பொறுக்க மாட்டாள். தெய்வம் பொறுக்காது. உதாரணம் திரௌபதியின் கண்ணீர்.

இவருடைய கஷ்டம்-பெற்ற சிகிச்சைகள், செலவான பணம் இவைகளைப் பற்றிய விவரம் ஒரு சோகக் கதை. இவருக்கு நான் எழுதிய சிகிச்சை விவரத்தைக் கல்கி நேயர்களுக்குத் தெரிவித்தல் அவசியம்.

1. அஸனம், வேங்கை என்னும் மரத்தின் உள் வைரம் தேவை. இதைக் கடையில் விற்கின்றனர். இந்த வைரத்தைச் சிறு துண்டுகளாகச் செதுக்கி, உரலில் நன்ருக இடித்து எடுத்த சூர்ணம் 5 பலம். இத்துடன் 4 பட்டணம் படி (ஒரு படிக்கு 64 அவுன்ஸ்) ஜலம் விட்டுச் சிறு தீயில் அரைப்படி கஷாயமாகக் காய்ச்சிக் கொள்ளவும். மருந்தைக் கசக்கிப் பிழிந்து, கஷாயத்தை வடிகட்டி, ஒரு பீங்கான் கிண்ணத்திலோ அல்லது, கற்சட்டியிலோ எடுத்துக் கொண்டு 5 பலம் பொறுக்கிச் சுத்தம் செய்து எடுத்த கார்போக அரிசியை இட்டு வெய்யிலில் காய வைக்கவும். நன்ருய்க் காய்ந்த பிறகு இதை...

2. கதிரம்—கருங்காலியின் வைரத்திலிருந்து மேற்சொன்ன விதம் தயாரித்த கஷாயத்தில் ஊறவைத்து, வெய்யிலில் காய வைத்துக் கிடைத்த கார்போக அரிசியைச் சூரணம் செய்துகொள்ளவும்.

3. ஜெலடின் காப்ஸ்யூல் என்று ஒரு பொருள் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் விற்கிருர்கள். 5 க்ரெயின் கொள்ளும் பரிமாணமுள்ள இச் சுரைகளை வாங்கி இவற்றில் மேற்சொன்ன சூரணத்தை நிறைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு வகையில் மாத்திரை போல் விழுங்குவதற்குச் சுலபமாக இருக்கும்.

இதில் பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு அல்லது இரண்டிரண்டு காப்ஸ்யூல் (மாத்திரை) களை வாயிலிட்டுச் சிறிது பால் பருகவும்.

ஆகாரத்தில் கூடுமான வரையில் பாலை அதிகமாகச் சேர்க்கவேணும். புளியைக் கூடுமான வரையில் குறைத்துக் காரத்துக்கு மிளகைச் சேர்த்துக் கொள்ளவும். வேறு பத்தியமில்லை. இவ்விதம் இதை ஆறு மாதங்கள் சாப்பிடுவதோடு இரவில் படுக்கப் போகும் சமயத்தில்...

4. மாணிபத்ரகுடம் என்ற மருந்தில் அரை- ஒரு தோலா அளவு சாப்பிட்டுப் படுக்கவும். மாணிபத்ரகுடம் என்னும் லேஹியத்தைத் தயாரிக்கும் முறையைக் 'கல்கி'யில் வெளியிட்டிருக்கிறேன்.

5. தினசரி உடல் முழுவதும் பிண்டதைலத்தைத் தடவி ஊறி, பச்சைப் பயிறு (கூடுமாளுல்) வாகையின் பூ இரண்டையும் சேர்த்துப் பொடித்ததை எண்ணெயைப் போக்கித் தேய்த்துக் குளித்துவர வேண்டும்.

6. மாம்பழத்தின் கொட்டையின் உட்பருப்பை எடுத்துச் சிறிது ஜலம் விட்டுச் சந்தனக் கல்லில் உரசி எடுத்ததை நிற பேதமுள்ள இடங்களில் இரவில் பூசி உலர்ந்த பிறகு படுத்து உறங்கவும்.

8. கொத்துக் கொத்தாக ஒடித்த மாவின் இலை - துளிராளுல் நல்லது - அல்லது வேப்பிலை இவற்றினுல் நிறபேதமுள்ள இடங்களை மறைத்துக் கொண்டு மாலை வெய்யில் கொள்ளவும்.

ஆறு மாச காலம் இதைச் செய்து குணகுணத்தை எழுதும்படி சகோதரிக்குத் தெரிவித்துள்ளேன்.

ஒரு செப்பாலடித்த காசு இனி வைத்தியர்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று எழுதியுள்ளேன். ஆறு மாசத்தில் கணிசமான குணம் ஏற்படுமென்பது எனது பரிபூரண நம்பிக்கை.

ஒரே ஒரு விஷயம் சகோதரிக்கு எழுதவில்லை. அவருக்காகவும் மற்றையவருக்காகவும் இங்கு தெரிவிக்கிறேன்.

ஆரோக்யத்தை விரும்புவோர் சூர்யனிடமாய்ப் பெற வேணுமென்று சாஸ்திரம். அவ்வித சரும நோயுள்ளவர் சுப்பிரமண்யரின் அருளைத் தேடவேணுமென்பதும் சாஸ்திரம். சம்பிரதாயமும் அவ்விதமே. ஆகவே முருகன் சன்னதியில் ஒரு ஸ்பூன் நெய் விட்டுத் தினமும் ஒரு சிறு திரியிட்டுத் தீபம் ஏற்றுவது மிகவும் நல்லது. தாமரைக் கொடியிலிருந்து எடுத்த நூலினுல் இத்திரியைச் செய்து நெய் விளக்கேற்றி வைத்தால் மிகவும் நல்லது. வெகு விரைவில் குணம் காணலாம்.

அடாடா! நான் வீர வைஷ்ணவனுயிற்றே! அதனுலென்ன? வேணுமாளுல் இத் தீபத்தைக் குருவாயூரப்பன் சந்நிதானத்தில் ஏற்றி வைக்கட்டும். அப்போதும் அதனுல் குணம் காண்பது நிச்சயம்.

(தொடரும்)


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
குடும்ப முழுவதிற்கும் மிக்க உகந்தது!
பெரிய எகானமி அளவு புட்டி
யினால் பணம் மிச்சமாகிறது!
மூன்று வித விருப்பான
வாசனைகளில் கிடைக்கும்.
லவண்டர்
மல்லிகை
ரோஜா


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்கால
மின் புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

முதல் வழக்கு

அன்று வியாழக்கிழமை. சென்னை உயர் நீதி மன்றத்தின் வராந்தாவில் நின்று கொண்டு கலங்கரை விளக்கைப் பார்த்துக் கொண்டு நின்றான் ராமநாதன். கப்பலுக்கு வழிகாட்ட அமைந்த அந்த விளக்கைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். இப்போது அவனுக்கு வழிகாட்ட யார் இருக்கிறார்கள்? நேற்றும் அதே இடத்தில் நின்றான். ஆனால் நேற்றைய நிலைமை வேறு. நேற்று அவன் சாதாரண ராமநாதன். இன்று அட்வகேட் ராமநாதன். அந்த அடைமொழியில் நிறைவு இருக்கிறது. ஆனால் அவனுடைய உள்ளத்தில் தான் நிறைவில்லை. இன்று தொழிலில் இறங்கியாகி விட்டது. தொழில் நடக்க வேண்டுமல்லவா?

பக்கத்து வீட்டு வக்கீல் அண்ணாசாமி சொந்த சம்பாத்தியத்தில் ஒரு பெரிய காரே வாங்கி விட்டதைப் பார்த்துத்தான் ராமநாதன் சட்டக் கல்லூரியில் சேர்ந்தான். ஆனால் எதிர்வீட்டு வக்கீல் வருடங்கள் முப்பதாகியும் ஒரு மாட்டு வண்டிகூட வாங்க முடியாமல் இருக்கும் உண்மை அப்போது ராமநாதனுக்குப் படவில்லை.

சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்த ராமநாதனுக்கு அவன் அப்பா விட்டுப்போன கொஞ்சம் நிலமும் ஒரு வீடும் துணையாக இருந்தன. அவன் சட்டம் பயின்று தொழிலில் இறங்கும்போது சொத்து முழுதும் கரைந்து விட்டது. பூர்விகச் சொத்து அவனுக்குப் படிப்பாக மாறிவிட்டது. ஏட்டுச் சுரைக்காயை வைத்துக் கொண்டு என்ன செய்வது? ராமநாதன் மலைத்து நின்றான். சோர்ந்தும் போய் விட்டான்.

"நீங்கள் இங்கேயா நிற்கிறீர்கள்?" என்று யாரோ பகட்டும் குரல் கேட்டுத் திரும்பினான். எதிரே...ஆ! என்ன அழகு! என்ன ஒய்யாரம்! சே, ரசிக்க முடியவில்லை. பாழும் மனம், வருங்கால வாழ்வை எண்ணி நடுங்குவதிலேயே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறதே! யார் இந்தப் பெண்? எங்கே இவளைப் பார்த்திருக்கிறோம்?

"நீங்கள் யார் தெரியவில்லையே?" என்றான். சிரிக்க முயன்றான். "உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறாற் போலிருக்கிறதே!"

"சொல்லுங்கள், பார்க்கலாம்" என்று குழைந்தாள் அந்த மோகினி. பாவம், ராமநாதன் இக்கட்டான நிலையில் அகப்பட்டுத் திண்டாடினான்.

"ஞாபகம் வரவில்லையே!" என்றான்.

"மகாபலிபுரத்தில் சந்திக்கவில்லையா?"

"ஓ... ஞாபகம் வந்துவிட்டது. ஸரி ஸரி!"


"நீங்கள் பிரதம நீதிபதியின் முன்னால் சன்னத்து வாங்குவதற்காக நின்றபோது பார்த்தேன். இன்றிலிருந்து வழக்கறிஞர் ஆகி விட்டீர்கள். என்னுடைய வாழ்த்துக்கள்" என்று சொன்னாள்.

"வந்தனம்" என்றான் சுருக்கமாக.

"இனி வழக்குகளை அலச வேண்டியது தான்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"வழக்கு வந்தாலல்லவா அலசுவதற்கு?" என்றான். விரக்தி குரலில் படர்ந்தது.

"அதற்குள் சலித்து விட்டீர்களே? நம்பிக்கையோடு இருங்கள். நான் வரட்டுமா?



எனக்கு வேறு வேலை இருக்கிறது'' என்று கூறி ஒரு கும்பிடையும் போட்டு விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அன்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் உட்கார்ந்திருந்தான் ராமநாதன். தூரத்தில் நீதிமன்றம் தெரிந்தது. தொழிலில் உயர்ந்துவிடலாம் என்ற நம்பிக்கை உள்ளத்தில் ஒட்டியிருந்தது. யாரோ பின்னால் வரும் சப்தம் கேட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தான். திகைத்தான். அந்த அழகி—காலையில் நீதி மன்றத்தில் சந்தித்தானே அவள்தான்—அவனை நோக்கி வந்தாள்!

'' இங்கேயா இருக்கிறீர்கள்? தினமும் இங்கு வருவீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே நெருங்கினாள் அந்தப் பெண்.

'' வாருங்கள்......தினமும் வருவதில்லை. இன்று வேலை இல்லை. இந்தப் பக்கம் வந்தேன்......உட்காருங்களேன்.'' அவன் பக்கத்தில் வந்து அவள் உட்கார்ந்தாள்.

'' நீங்கள் தனியாகத்தான் வந்தீர்களா?'' என்றான் ராமநாதன்.

'' இல்லையே! என் பாட்டியும் வந்திருக்கிறாள். வயதாகி விட்டது. மணலில் விரைவாக நடக்க முடியாது. கொஞ்ச நேரத்தில் அவள் வருவாள்.''

அவள்தான் பேசினாள்: '' உங்களை இந்த உடையில் அடையாளமே தெரியவில்லை...... உங்களுக்கு அந்தக் கறுப்புக் கோட்டுத்தான் ரொம்பப் பொருத்தம்.''

அவள் கேலி செய்கிறாளா அல்லது உண்மையிலேயே ரசித்துச் சொல்லுகிறாளா என்பது தெரியாமல் விழித்தான் ராமநாதன்.

''இனி, தினமும் நீங்கள் நீதிமன்றத்துக்குப் போக வேண்டுமா?''

'' வழக்கு எனக்கு இருந்தால் போக வேண்டும். நான் முதன் முதலில் வழக்குக்கு ஆஜராகும்போது நீங்கள் வந்து பாருங்கள்.''

'' வருகிறேன்...நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

'இங்குதானிருக்கிறேன். உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாருக்காவது வழக்குப் போட வேண்டியிருந்தால் என்னிடம் அவர்களை அனுப்புவீர்களா?''

'' ஏது. உங்களுக்கு வழக்கு வரும்வரையில் தூக்கம்கூட வராது போலிருக்கிறதே.''

'' நான் முதலில் அதிகமாகப் பணம் கேட்பேன் என்று பயப்பட வேண்டாம். என்னுடைய முதல் வழக்குக்குப் பணம் வாங்கப் போவதே இல்லை'' என்றான் ராமநாதன்; நல்லவேளையாக அவளுடைய பாட்டி அந்தச் சமயம் அங்கு வந்து சேர்ந்தாள்.

'' சாரதா. போகலாமா?'' என்றாள் பாட்டி. சாரதாவும் உடனே அவளைத் தொடர்ந்து போய்விட்டாள்.

'ஐயோ, போய்விட்டாளே! என் விலாசம் கொடுக்கவில்லையே? கட்சிக்காரர்களை என்னிடம் அனுப்பிவைக்க வேண்டுமானால் என் விலாசம் வேண்டாமா?'

எழுந்து அவளை நோக்கி ஓடினான். அவளை நெருங்கி, '' ஹி ...ஹி.....நீங்கள் என் விலாசம் வாங்கவில்லையே? விலாசம் தெரியாமல் எப்படிக் கட்சிக்காரர்களை என்னிடம் அனுப்புவீர்கள்?'' என்று கூறிக்கொண்டே தன்னுடைய விலாசம் அச்சடிக்கப்பட்ட ஒரு சிறு துண்டு அட்டையை அவளிடம் நீட்டினான். அவளுக்கு வந்த கோபத்தில் அதை அவன் முகத்தில் வீசியிருப்பாள். பாவம், பெண்மை தடுத்து விட்டது. அவனை எரித்து விடுபவள்



போல் பார்த்துவிட்டு அவள் கொடுத்ததைத் தன் பையில் வைத்துக் கொண்டு வேகமாக நடந்தாள். ராமநாதனுக்கு ஒன்றும் புரிய வில்லை. பாட்டி யிருக்கும்போது விலாசம் கொடுத்ததற்காகக் கோபப் பட்டாளோ என்று அவன் நினைத்துக் கொண்டான்.

மறுநாள் மாலை ராமநாதன் தன் அறை யில் உட்கார்ந்து கொண்டு, முதல் வழக்கு கிடைத்தால் நீதி மன்றத்தில் எப்படி யெல் லாம் பேச வேண்டும் என்பதைப் பற்றிய கற்பனையில் ஆழ்ந்திருந்தான். கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தான். திடுக்கிட்டான். வாசற்படியில் சாரதா சிரித் துக் கொண்டு நின்றாள்.

"வாருங்கள். உட்காருங்கள்" என்றான் முகம் மலர. அவள் உள்ளே வந்து நாற்காலி யில் அமர்ந்தாள்.

"உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் ராமநாதன்.

"என்னைப் பற்றியா? என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?" என்றாள் ஆவலுடன்.

"நான் சொன்னதை மறந்து விடுவீர் களோ என்று பயந்து கொண்டேயிருந்தேன்" என்று கூறினாள்.

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"பார்த்தீர்களா? மறந்து விட்டீர்கள். எனக்கு வழக்கு தேடிக் கொடுக்கும் விஷயந்தான்!"

சாரதாவின் உற்சாக மெல்லாம் படு பாதாளத்தில் விழுந்துவிட்டது. எரிச்சலுடன் அவளைப் பார்த்தாள். அந்தப் பித்துக்குளியோ அவளையே ஆவலுடன் பார்த்துக் கொண் டிருந்தான்.

"உங்கள் முகம் ஏன் இப்படி வியர்க்கிறது? ஓடிவந்தீர்களா?" என்றான். சாரதா யோசித் தாள். "வரும்வழியில் ஒருவன் என்னைத் தொடர்ந்துவந்தான். ஓடிவந்தேன்" என்றாள்.

ராமநாதன் துள்ளிக் குதித்தான். 'ஆகா! நல்ல வழக்குக் கிடைத்துவிட்டது. பிரமாதம்! முதல் வழக்கே எவ்வளவு ரசமாயிருக்கிறது?'

"உங்களைப் பின்தொடர்ந்தானா?" என் றான் ராமநாதன். அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. சுக்கிரதசை ஆரம்பமாகி விட்டது என்று நினைத்தான்.

அவள் தலையை ஆட்டினாள்; குறும்பாகச் சிரித்தாள்.

"யார் அவன்? உடனே அவன் மீது வழக் குத் தொடர்ந்து தீர்த்துக் கட்டிவிடுகிறேன்" என்றான் உற்சாகத்துடன்.

"அப்படியா?" என்று கேட்ட சாரதா தீவிரமாக யோசித்தாள்.

"எப்படிப் பின்தொடர்ந்தான்? விவர மாகச் சொல்லுங்கள். சாட்சி இருக்கிறதா?"

"ஏராளமாக இருக்கிறார்கள்" என்றாள்.

"இனி கவலையே இல்லை. இந்த வழக்கில் நிச்சயமாக வெற்றி நமக்குத்தான்" என் றான். சாரதா சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறீர்கள்? வெற்றி கிட்டாது என நினைக்கிறீர்களா? இது என்னுடைய முதல் வழக்கு. எப்படிப் பேசுகிறேன், பாருங்கள்!" என்றான்.

சாரதாவுக்குச் மறுபடியும் சிரிப்பு வந்தது.

"எத்தனை நாட்களாகத் தொடர்கிறான்?"

"கொஞ்ச நாட்களாக" என்றாள் அசி ரத்தையுடன்.

"கொஞ்ச நாட்கள் என்றால் கணக்கு வேண்டாமா? இது என்ன விளையாட்டா? நீதி மன்றத்துக்குப் போகும் வழக்கா யிற்றே! யோசித்துச் சொல்லுங்கள். ஒரு வாரமாக இருக்குமா?"

"இருக்கும்."

"நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் ராமநாதன்.

"அடையாற்றில் இருக்கிறேன்."

"பஸ்ஸில் வந்தீர்களா?"

"இல்லையே. என் காரில்தான் வந்தேன்."

சாரதா பெரிய பணக்காரி என்று தெரிந்து கொண்டதும் ராமநாதனின் உற்சாகத்துக்கு அளவே இல்லை.

நல்ல புள்ளிதான். முதல் வழக்கே ஒரு பணக்காரியிடமிருந்து வருகிறது. ராமநாதா, நீதாண்டா அதிர்ஷ்டசாலி!

"உங்களைத் தொடர்ந்ததாகச் சொன் னீர்களே, அவன் எங்கேயிருக்கிறான்?"

"எங்கேயிருக்கிறானோ?" என்றாள் சாரதா அசிரத்தையுடன்.

"அவன் ஏதாவது அவதூறாகப் பேசினானா?" என்றான் ராமநாதன்.

"காதல், கீதல் என்று எதையாவது உளறு வான்" என்றாள்.

"என்னுடைய பொறுப்பில் விட்டுவிடுங் கள். நான் கவனித்துக் கொள்கிறேன்; அவன் விலாசம் என்ன?"

"தெரியாதே!"

"அவனை நேரில் காட்டுங்கள். நான் விசா ரித்துக் கொள்கிறேன்."

"என்னோடு கடற்கரைக்கு வாருங்கள், காட்டுகிறேன். வருகிறீர்களா?" என்றாள் கொஞ்சும் குரலில்.

"அதற்குள் இவைகளில் கையெழுத்துப் போடுங்கள்" என்று கூறி ஒன்றுமே எழுதாத இரண்டு காகிதங்களை நீட்டினான்.

"எதற்குக் கையெழுத்து?"

"பயப்படாதீர்கள். அவன் மீது மான நஷ்ட வழக்கு தொடரப் பிராது கொடுக்க வேண்டாமா? உங்களுடைய விலாசத்தையும் எழுதுங்கள்."

"இது வெறும் தாளாயிற்றே?"

"பரவாயில்லை, போடுங்கள். இரவு உட் கார்ந்து பிராதை எழுதி விடுகிறேன். இந்தப் பிராதுக்கு முதலில் யாராவது பதில் சொல்ல முடியுமா?" பெருமையில் பூரித் தான் ராமநாதன்.

சாரதாவுக்குச் சிரிப்பு வந்தது. அவனை வேடிக்கையாகப் பார்த்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்? என் மீது நம் பிக்கை இல்லையா? நீங்கள் பேசாமல் கையெழுத்துப் போடுங்கள். அவனிடமிருந்து பதினாயிரம் ரூபாய் நஷ்ட ஈடாக வாங்கித் தருகிறேன்."

"அடேயப்பா!"

"பின்னே என்ன? இது என்னுடைய முதல் வழக்காயிற்றே. இலேசில் விட்டு விடு வேனா? பாருங்களேன், நான் நீதி மன்றத்தில் எப்படிப் பேசுகிறேனென்று."

சாரதா சிரித்துக் கொண்டே கையெழுத்துப் போட்டாள். குறும்பாக அவனைப் பார்த்தாள். "உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்றாள்.

"இது என் முதல் வழக்கு. பணம் வாங்கப் போவதில்லை. சரி, கடற்கரைக்குப் போகலாமா?" என்றான் ராமநாதன்.

சாரதா காரை ஓட்டினாள். அவள் பக்கத்தில் ஒய்யாரமாக ராமநாதன் உட்கார்ந்திருந்தான். ஒரு பெரிய பணக்காரி தனக்கு முதல் கட்சிக்காரியாக வாய்த்த பெருமையில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான். ராஜ பார்வை பார்த்துக் கொண்டான். கடற்கரையில் இருவரும் அமர்ந்தனர்.

"அவன் எங்கே?" என்றான் ராமநாதன்.

"அவனைப் பிறகு காட்டுகிறேன். இப்போது வேறு ஏதாவது பேசிக் கொண்டிருக்கலாம்."

இருட்டும் சமயத்தில், இருவரும் காரை நோக்கி வந்தார்கள்.

"இன்னும் அவன் வரவில்லையே?" என்றான் ராமநாதன். குரலில் ஏக்கம் தொனித்தது.

"அதோ இருக்கிறான். பார்த்தீர்களா?" என்று சுட்டிக் காட்டினாள்.

"எங்கே, எங்கே, எங்கே......எங்கே...?" பரபரப்புடன் நான்கு திசைகளிலும் உற்று நோக்கினான் ராமநாதன்.

"அதோ அந்தப் பெஞ்சியில் பாருங்கள்."

அவள்காட்டிய திசையில் நோக்கினான். மின்சாரக் கம்பத்துக்குப் பக்கத்தில் ஒரு பெஞ்சியில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான்.

"சரி, நீங்கள் போங்கள். நான் விசாரித்துக் கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு, அவளுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் அந்தப் பெஞ்சியை நோக்கி நடந்தான். சாரதா அவன் போவதைப் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

மறுநாள் மாலை சாரதா, அவனுடைய அறைக்கு வந்தாள்.

"நேற்று அவனைப் பார்த்து விசாரித்து விட்டேன்" என்றான் ராமநாதன்.

"என்ன சொன்னான்?" சாரதா குறும்பாகச் சிரித்தாள். தன்னையும் மீறி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"நாசூக்காகப் பேச்சு கொடுத்து அவன் விலாசத்தைத் தெரிந்து கொண்டேன்."

"பிறகு, இன்று காலையில் நீதி மன்றத்தில் அவன் மீது பதினாயிர ரூபாய்க்கு மான நஷ்டஈடு வழக்குப் பதிவு செய்து விட்டேன்."

"ஐயய்யோ......" சாரதா பதறினாள்.

"என்ன?"

"என்னவா? என்னிடம் கேட்காமல் ஏன் தாக்கல் செய்தீர்கள்? நானும் வேடிக்கையாகக் கையெழுத்துப் போட்டு விட்டேனே?"

"என் மீது உங்களுக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை போலிருக்கிறதே. பயப்படாதீர்கள். என்னுடைய பேச்சை நீதிமன்றத்தில் கேளுங்கள்."

"நீங்கள் பேசுவீர்கள். என் பேரல்லவா அடிபடும். என் மானம் போய்விடுமே! நீங்கள் உண்மையாகவே இப்படிச் செய்வீர்கள் என்று தெரிந்திருந்தால்...வழக்கை வாபஸ் வாங்கி விடுங்கள்" என்று கெஞ்சினாள் சாரதா.



ராமநாதன் நிலைகுலைந்து விட்டான்.

"இது என்னுடைய முதல் வழக்கு. அபசகுனம் மாதிரி முதலிலேயே வாபஸ் வாங்க வேண்டுமா?"

"முதல் வழக்கு, முதல் வழக்கு. இதுதான் எப்போ பார்த்தாலும் ஜெபம்!" கோபத்தினால் கத்தி விட்டு வெளியேறினாள் சாரதா; ராமநாதன் இடிந்து போய் விட்டான்.

அன்று புதன்கிழமை.

நீதிமன்றத்தில் பலர் சூழ்ந்திருந்தார்கள்; அவனுடைய நண்பர்கள் பலர் வந்திருந்தார்கள். ஆனால், சாரதா மட்டும் வரவில்லை. அவனுக்கு அது ஒரு குறையாகவே தோன்றியது. அதற்காக மலைத்து இருந்து விடவில்லை. ஒரு மணி நேரம் பேச்சு மழை பொழிந்தான். பேசி முடித்து விட்டு, அங்கு சுற்றி இருந்தோரைப் பெருமையாகப் பார்த்தான். புன்சிரிப்புடன், மன நிறைவுடன் நாற்காலியில் அமர்ந்தான். எதிர் வக்கீல், குருசாமி நாயுடுவின் வாதத்தை மத்தியானம் கேட்பதாகச் சொல்லி எழுந்து விட்டார் நீதிபதி.

குருசாமி நாயுடுவுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். நல்ல அநுபவசாலி. தனிமையில் ராமநாதனைச் சந்தித்தார்.

"ராமநாதா! உனக்கென்ன பைத்தியமா? இந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொள். உன் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன்."


"என் நன்மை எனக்குத் தெரியுமே!"

"தம்பி! உன்னைப் பார்த்தால் இரக்கமாயிருக்கிறது. சிரிப்பும் வருகிறது. நீ இப்போது கண்யமான ஒருவர் மீது அநாவசியமாக வழக்கு தொடர்ந்திருக்கிறாய்."

"சாரதாவைத் தொடர்ந்து போவதும், இடையூறு செய்வதுமா கண்ணியம்?"

"அதைப் பற்றிக் கேட்க நீ யார்?"

"நான் யாரா? சாரதாவின் வக்கீல் நான்; அவள் என் கட்சிக்காரி, தெரியுமா?" அலட்சியமாகப் பேசினான்.



கண்ணம்மா—என் மருமகள்

பள்ளிக்கூட விடுமுறை விட்டு என் மருமகள் கண்ணம்மா எங்கள் வீட்டுக்கு வந்ததுமுதல், வீட்டு அடையாளம் தெரியாமல் மாறி விட்டது. சதா ஓடாக உழைக்கும் சிரமம் இனி எனக்குக் கிடையாது. எல்லாக் காரியமும் இமைப் பொழுதில் நடந்துவிடுகிறது; காரணம், கண்ணம்மா பக்கத்திலிருக்கிறாள். நானும் அவளை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

துணி துவைப்பதை எடுத்துக் கொள்ளலாமே—சாமான்யமான விஷயம் தான். ஆனால் சலவை செய்யும் சோப் சுத்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று கண்ணம்மா சொன்னபோது மூக்கில் விரலை வைத்து அதிசயித்தேன். அவள் சொன்னாள்:

“சுத்தமான சோப் வெளுக்கும் அழுக்கு எதுவுமே சடாகாது; அது சொல்ல சொல்ல வாய் நுரை கொழிக்குமே—நுரை வென்றும், துணிகளையோ கைகளையோ பாதிக்காத சுகமான நுரை!”



ஸன்லைட் சோப்பை எடுத்துவந்து, எப்படி வெளுக்கிறது என்று செய்து காண்பித்தாள் அவள். இலேசாகத் தேய்த்தாள். அவ்வளவு தான். சட்டென்று கொழித்துக் கொண் அபரிமிதமான நுரையை நீங்கள் பார்க்க வேண்டுமே! அடுத்தபடி, அடித்துத் துவைப்பதற்கான மட்டையொன்றை நான் எடுத்து நீட்டியதும் அவள், “இது எதற்கு, அத்தை. ஸன்லைட் சலவை என்றும்



அடுத்துத் துவைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கில்லை என்று அர்த்தம். இந்த சோப்பினால் இலேசாகத் தேய்த்துவிட்டாலே போதும். உடனே செம்புகிற ஏராளமான நுரையில் தாமாகவே துணிகள் பளிச்சென்று வெளுத்துவிடும்'' என்றாள்.


துணிகள் யாவும் பளிச்சென்று, சுத்தமாக ஆகி விட்டதைப் பார்த்ததும், ஈரம் உலர்வதற்குள் அப்படியே உடுத்திக்கொண்டு விடலாமா என்ற பரபரப்பு எனக்கு. புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை, சாமர்த்தியத்தில் எங்கள் கண்ணம்மாவுக்கு ஈடு கண்ணம்மாதான்! ஸன்லைட் அவ்வளவு பளிச்சென்று வெண்மையாக வெளுப்பதற்கு அவள் கூறும் காரணம், நூலிழைகளின் இண்டு இடுக்குகளில் பதுங்கியிருக்கும் எல்லா அழுக்குகளையும் அறவே அகற்றிவிடக்கூடிய சக்தி ஸன்லைட்டின் செழிப்பான நுரைக்கு உண்டு என்பதுதான்.



இதெல்லாம் சரிதான்; குடித்தனப் பொறுப்பைத் தாங்கும் எனக்குத் தோன்றிய சிறிய சந்தேகம் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு வைத்தேன்: ''அது சரிதான், என் தங்கமே, ஆனால் ஸன்லைட் விலை அதிகமாச்சே!''

நகைத்தவண்ணம் கண்ணம்மா சொன்னாள், ''போங்க அத்தை. நீங்களாக ஏதாவது கற்பனை செய்துகொண்டு.. கண்கொட்டாமல் நான் வியந்து நிற்கையில், அவள் விளக்கினாள்: ஒரே ஒரு வில்லை ஸன்லைட் சோப் ஒரு மூட்டை துணிகளுக்கு பதில் சொல்லும், அத்தை. பார்க்கப் போனால், ஸன்லைட் சோப்பால் சலவை செய்வது எவ்வளவோ சிக்கனம்!''

ஸன்லைட் சோப்பில் என்னை வசீகரித்த மற்றொரு அம்சம் அதன் வாசனை. தும்பைப் பூவுக்கு நறுமணமூட்டியது போல, சலவையான துணிகளைச் சுற்றிலும் தூய்மையின் ஜோதி வியாபித்திருக்கும். மேலும், சலவை செய்த கைகளுக்கு ஸன்லைட் நுரை மென்மையும் மழமழப்பும் அளிக்கும்.



புடவை, ரவிக்கை, துண்டு, துப்பட்டா, என் கணவரின் வேஷ்டி, சட்டை, குழந்தைகளின் துணிகள்—ஆக மொத்தம், சிறிதும் பெரிதுமாக வீட்டுத் துணிமணிகள் எல்லாவற்றிற்கும் உகந்த சலவை சோப் ஸன்லைட்டைத் தவிர வேறில்லை என்பதை எனக்கு உணர்த்தியது கண்ணம்மாவின் வரவு. துணிகளை ஸன்லைட் பளிச்சென்று, சுத்தமாக வெளுத்துவிடுவதைப் புகழ்வதா, அல்லது ஒரு பெரிய துணிக் குவியலை ஒரே ஒரு ஸன்லைட் வில்லை வெளுத்துவிடும் ஆற்றலைப்போற்றுவதா என்ற வியப்பு எனக்கு. மொத்தத்தில் எங்களுக்குப் பணம் மிச்சமாவதோடு, உடுத்துவதற்கு சுத்தமான துணிகளும் கிடைக்கின்றன.



ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்

S. 353B-50 TM

''இந்த வழக்கைச் சாரதா போடவில்லை!''

''என்ன?''

''ஆமாம். என்னோடு வா. சொல்லுகிறேன்'' என்றார்.

ராமநாதனைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றார். ராமநாதனின் மனம் பலபடியாக எண்ணிக் குழம்பியது.

அந்த அறைக்குள் ஒரு வாலிபனும், ஒரு யுவதியும் இருந்தனர். அந்த வாலிபன் தான் வழக்கில் சம்பந்தப்பட்டவன். அவனைத்தான் சாரதா கடற்கரையில் அடையாளம் காட்டினாள். அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் ராமநாதன்.

''இதோ இருக்கிறாள், சாரதா!'' என்றார் குருசாமி நாயுடு.

''சார், நான் என்ன குழந்தையா? உங்களைப் போல் நானும் ஒரு அட்வகேட். என் கட்சிக்காரியை எனக்கு நீங்கள் அடையாளம் காட்ட வேண்டாம்'' என்றான் ராமநாதன்.

''தம்பி! பதறாதே. இவன், இவளுடைய மாமன் மகன். இருவருக்கும் அடுத்த மாதம் திருமணம் நடக்கப் போகிறது. வீட்டாரின் சம்மதத்தின்பேரில்தான் இவர்கள் கடற்கரைக்கு வருகிறார்கள்.....''

ராமநாதன் இடைமறித்தான். ''அது சரி! இவன் இவளுடைய முறைப்பெண்ணாக இருக்கலாம். ஆனால், இவர் பின்தொடர்ந்து தொந்தரவு கொடுத்தது என் கட்சிக்காரியை அல்லவா?'' என்றான்.

''உங்கள் கட்சிக்காரியைக் கூப்பிடுங்கள். கேட்கலாம். இவன் உங்கள் கட்சிக்காரியைக் கண்ணால் கண்டதே கிடையாது.''

''அவளை இங்கேயே கூப்பிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போன் இருக்கும் இடத்துக்குச் சென்றான் ராமநாதன்.

போனில் சாரதா பேசினாள்:

''வழக்கை நீங்கள் வாபஸ் செய்யுங்கள். இல்லையென்றால், நானே வாபஸ்செய்துவிட்டதாக நீதி மன்றத்துக்கு எழுதி விடுவேன்.''

''ஐயோ, வேண்டாம். நானே செய்கிறேன், நீங்கள் முதலில் இங்கு வாருங்கள்.''

''சரி, இதோ வருகிறேன்.''

பாவம், ராமநாதனின் முகத்தில் ஈயாடவில்லை. கட்சிக்காரியே எதிராக இருந்தால், வழக்கு உருப்படுமா? குருசாமி நாயுடு இருந்த அறைக்கு வந்தான்.

அரைமணி நேரத்தில் சாரதா வந்தாள். அறைக்குள் நுழைந்ததும், ராமநாதன் வரவேற்று உட்கார வைத்தான். குருசாமி நாயுடு பேச்சை ஆரம்பித்தார்: ''இவரை உனக்குத் தெரியுமா, அம்மா?''

சாரதா, அங்கிருந்த வாலிபனைப் பார்த்தாள் பிறகு. ''தெரியாதே'' என்றாள்.

ராமநாதன் நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்தான்.

''தெரியாதா? நல்ல சமயத்தில் காலைவாரி விடுகிறீர்களே! நீங்கள்தானே இவரைக் கடற்கரையில் அடையாளம் காட்டினீர்கள்?''

''அது இவர் இல்லையே'' என்றாள் சாரதா.

ராமநாதனின் தலை சுழன்றது. ஐயோ அவனுடைய முதல் வழக்கு...!

''அப்படி யென்றால் உங்களுடைய பதிலில் நீங்கள் சாரதாவுடன் கடற்கரை செல்வது உண்மைதானென்று கூறியிருக்கிறீர்களே?'' என்று ஆத்திரத்துடன் அந்த வாலிபனைப் பார்த்துக் கேட்டான் ராமநாதன்.

''இதோ இருக்கிறாளே இவள் பெயர் சாரதா. என் மாமன் மகள். இவளோடு கடற்கரைக்கு வருவேன். உங்கள் கட்சிக்காரியை இதற்கு முன் நான் பார்த்ததே இல்லை'' என்றான் அந்த வாலிபன்.

ராமநாதனுக்குக் கண்கள் இருண்டன: உலகமே அவனுக்கு எதிராகச் சதி செய்வதாகத் தோன்றியது.

''சார்! இந்த வழக்கு அவசரத்தில் தொடரப்பட்டு விட்டது. அதனால் தவறு நேர்ந்து விட்டது. வழக்கை வாபஸ் வாங்கிவிடுகிறோம். மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றாள் சாரதா, குருசாமி நாயுடுவைப் பார்த்துக் கெஞ்சும் குரலில்.

குருசாமி நாயுடு வெற்றிப் பார்வை பார்த்தார்.

அந்த அறையை விட்டு மற்றவர்கள் சென்ற பிறகு ராமநாதனின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் சாரதா. அவன் கொதித்துக் கொண்டிருந்தான்.

''வீணாக வருந்தாதீர்கள்'' என்றாள்.

''எல்லாம் உங்களால் வீணாகி விட்டது. என் முதல் வழக்கு முழுகி விட்டது. எல்லாம் நீங்கள் செய்த சதிதான்''

''அவசரப்படாதீர்கள்'' என்றாள் சாரதா:

''எதற்காக அவனை அடையாளம் காட்டினீர்கள்?'' என்றான்.

''காரணம் நீங்கள்தான்.''

''நானா?''

''ஆமாம். நான் உங்களோடு பேச வரும் போதெல்லாம் உங்கள் வழக்கைப் பற்றியே பேசினீர்கள். சதா அதைப்பற்றியே கனாக் கண்டீர்கள். என்னைப் பற்றிக்கூட நீங்கள் அக்கறை காட்டவில்லை. அதற்காக ஒரு பொய்யை வேடிக்கைக்குச் சொல்லி வைத்தேன். ஆனால் நீங்கள் அதை உடும்பாகப் பிடித்துக் கொண்டீர்கள்.''

''அப்படியென்றால், உங்களை யாரும் தொடரவே இல்லையா?''

''இல்லை.'' அவள் சிரித்தாள்.

''ஐயோ! என் முதல் வழக்கு இப்படியா போக வேண்டும்?'' என்று கூறித் தலையில் கையை வைத்தான்.

''கவலைப்படாதீர்கள். இனி, நமக்கு இந்த வழக்கும் வேண்டாம், இந்த நீதிமன்றத்தின் தொடர்பும் வேண்டாம். எழுந்திருங்கள், போகலாம்'' என்றாள்.

இயந்திரம் போல், ராமநாதன் அவள் பின்னால் நடந்தான்.

ஒரு மாதத்துக்குப் பிறகு, அடையாற்றில் ஒரு பிரபலமான திருமணம் நடந்தது. நீதிபதிகள் அனைவரும் வந்திருந்தார்கள்; அவர்களை மணமக்களான ராமநாதனும், சாரதாவும் வரவேற்றார்கள்.

குருசாமி நாயுடு சிரித்துக் கொண்டே ராமநாதனை நெருங்கினார். ''தம்பி! உன் முதல் வழக்கில் உனக்கு வெற்றி கிடைக்காவிட்டாலும், வாழ்க்கையில் வெற்றி யடைந்து விட்டாய்; அதிர்ஷ்டசாலிதான்'' என்று கூறி, ராமநாதனின் முதுகில் தட்டினார். ராமநாதன் இன்ப வெள்ளத்தில் மிதந்தான்.


எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம்... மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT


ஸீலிட்ட டின் சுத்தத்திற்கு உத்தரவாதம்
நியாய விலை அதை
மேலானதாகச் செய்கிறது.
துஷார்
வனஸ்பதி
விடமின்கள் சேர்க்கப்பட்டது
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ்
லிட்., கர்நூல்
T1-4/57



மங்கோலிய மன்னன்

ருக்மிணி பார்த்தசாரதி



சூரியன் மேற்கில் பாலைவனத்தின் விளிம்புக்குப் பின்னால் மறைந்தான். சிவப்பு நிறத்தால் தீட்டப்பட்டு ஜொலித்த மேகங்கள் வானமும் வையமும் தீப்பிடித்து எரிவது போன்ற பிரமையை ஏற்படுத்தின. அந்தகாரத்தால் நிறைந்த மங்கோலியக்கூடாரங்கள்தீபங்களால் பிரகாசமுற்றுத் திகழ்ந்த காட்சி தூரத்திலிருந்து பார்ப்பவருக்கு நட்சத்திரங்களால் பொறிக்கப்பட்ட வானைப் போல் தோன்றியது. மங்கோலியர்கள் முகாம் போட்டிருந்த இடத்திலிருந்து இனிய கீதங்கள் காற்றோடு கலந்து இழைந்தன. பெண்களின் மகிழ்ச்சி பொங்கும் சிரிப்பு சுற்றியிருந்த மலைகளின்மீது மோதி எதிரொலித்தது. குதிரைகள் அவ்வப்போது திருப்தியுடன் கனைத்தபடியிருந்தன.

மங்கோலியர்களின் மன்னனாகிய ஒகடாயின் செவிகளில் ஜனங்களின் கவலையற்ற சிரிப்பின் ஒலி இலேசாக விழுந்தது. ஆம்! அவர்கள் என்னவோ இன்பசாகரத்தில் மூழ்கித்தான் இருந்தார்கள். ஆனால் எவ்வளவு காலம் அவர்கள் அவ்வாறு இருக்க முடியும் என்பது யாருக்குத் தெரியும்? அவர்களின் சுகதுக்கங்கள் அவன் நீதி வழுவி ஆட்சி புரியும் முறையைத்தான் பொருத்திருந்தன. அவர்களின் விதி அவன் திறமையில்தான் அடங்கியிருந்தது.

ஒகடாய் யோசனையில் ஆழ்ந்தான். அவன் தகப்பனாகிய செங்கிஸ்கான் தன்னுடைய ராஜ்யத்தை மேற்கில் காஸ்பியன் கடலிலிருந்து கிழக்கே பசிபிக் சமுத்திரம் வரையில் பரப்பித் திறமையோடு ஆட்சி புரிந்து வந்தான். நாடோடி ஜனங்களான மங்கோலியர்களைத் தவிர, சீனர்களும் பாரசீகர்களும் மற்றும் பல்வேறு ஜாதியினரும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கலானார்கள். செங்கிஸ்கான் நல்ல அறிவாளி. ஆனால் அவன் தன் வாழ்நாள் முழுவதையும் போர் புரிவதிலேயே கழித்து விட்டிருந்ததால் ஜனங்களைச் சரிவர ஆள்வதற்கான வழிகளை நடைமுறைக்குக் கொண்டுவர அவனுக்கு அவகாசம் இருக்கவில்லை. அவர்களுடைய நலனைக் கோரிச் சில சட்டங்களை ஏற்படுத்தி ''யஸாக்'' என்னும் பெயருக்கு அடியில் தொகுத்தான் என்பதென்னவோ உண்மையே. ஆனால் அதற்குமேல் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனக்கடுத்து மங்கோலிய ராஜ்யத்தை ஆளப் போகும் மன்னனாவது ஜனங்களின் நலனையே பெரிதாகக் கருத வேண்டுமென்று விரும்பினான் அவன். எனவே, தன் நான்கு மக்களில் காருண்யம் அதிகம் கொண்டவனும் தன் மூன்றாவது மகனுமாகிய ஒகடாயே தனக்குப் பின் ராஜ்யத்தை ஆட்சி புரிய வேண்டும் என்று அவன் தன் மந்திரியிடம் தெரிவித்தான். மந்திரி எலியூ சு-ட்ஸாய் தன்னாலானதைச் செய்வதாக வாக்களித்தான்.

செங்கிஸ்கான் காலமானபின் ஒரு சம்மேளனம் கூடியது. ஒகடாய் தான் மன்னனாக வேண்டும் என்று விரும்பாதது மட்டுமல்லாமல் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கவும் மறுத்தான். சம்மேளனத்தவரும் அவனை மன்னனாக்க விரும்பவில்லை. செங்கிஸ்கானின் மக்களில் சிறந்த வீரனே ராஜ்யத்தை ஆள ஏற்றவனென்று பலர் அபிப்பிராயப்பட்டார்கள். அப்போது எலியூ சூ-ட்ஸாய் எழுந்து நின்று அற்புதமான ஒரு சொற்பொழிவு ஆற்றினான். ஒகடாயின் காருண்யத்தைப் புகழ்ந்தான். செங்கிஸ்கானின் விருப்பத்தைத் தெரிவித்து மங்கோலிய ராஜ்யத்தை ஆள்வது இலேசான காரியமில்லை என்றும் அதைச் செய்யும் சக்தி ஒகடாயிடம் தான் இருக்கிறதென்றும் ஆணித்தரமாய்க் கூறினான். அவன் வாக்குவன்மையின் காரணமாக ஒகடாய் மங்கோலிய நாட்டு மன்னனாக நியமிக்கப்பட்டான்.

அதன் பிறகு ஒருமுறை எலியூ சூ-ட்ஸாய் மன்னனுக்கு ராஜ்ய பாரத்தைப் பற்றிய சில அறிவுரைகளைக் கூறினான். "உன் தந்தை சிறந்த அறிவாளி. வெவ்வேறு மனப்பான்மை கொண்ட வெவ்வேறு நாட்டு மக்கள் எல்லோரும் தண்டனைக்கு அஞ்சமாட்டார்கள். ஆனால் கருணையால் வசப்படாத மனிதனும் உண்டா? இதை உன் தந்தை உணர்ந்தார். உன்மீது அபார நம்பிக்கை வைத்தார். அதற்குத் தகுதியுடையவனாய் நீ நடந்து கொள்ள வேண்டும். அவரை வசீகரப்படுத்திய உன் தயாள குணத்தால் உன் நாட்டு மக்கள் அனைவரையும் வசீகரப் படுத்த வேண்டும். உன் தந்தையின் பெயருக்கு மாக ஏற்படாமல் நீ நல்விதமாக நடந்து கொள்ள வேண்டும்."

ஒகடாய் பதிலளித்தான். "நீங்கள் இவ்வாறு கூறுகிறீர்கள். மற்றவர்கள் என்னைப் படையெடுக்கச் சொல்கிறார்கள். என் மனமே நிலையற்று இருக்கிறது. ஒரு சமயம் என் உடம்பிலிருக்கும் மங்கோலிய இரத்தம் என்னைப் போர் புரியத் தூண்டுகிறது. அடுத்த கணமே போரினால் ஏற்படும் கொடுமைகள் என் கண் முன் வந்து என்னைக் காருண்யத்தோடு நடக்கும்படி கட்டளையிடுகின்றன. நான் என்ன செய்வேன்? யார் சொல்வதைக் கேட்பேன்?"

"உன் மனச்சாட்சி சொல்வதைக் கேள், மன்னவனே! மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தன் மனத்துக்குப் பதில் சொல்ல வேண்டியவன். உன் மன அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள். நான் வேறு என்ன கூறப் போகிறேன்?"

சிந்தனைச் சுழலில் அகப்பட்ட ஒகடாய் வெளியில் வர யத்தனிக்கவில்லை. "மங்கோலிய ராஜ்யம்" என்ற பெயருக்குள் அடங்கிய பல தேசத்தவர்களாலான தன் ராஜ்யத்தைச் சரிவர ஆளும் சக்தி தன்னுள் இருக்கிறது என்று அவன் நம்பவில்லை. மனத்தின் ஒரு மூலையில், தன் தந்தை ராஜ்ய பாரத்தைப் போர் புரிவதில் வல்லவனான தன் சகோதரன் ஒருவனிடம் ஒப்படைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி மறைந்த வண்ணம் இருந்தது. காருண்யத்தால் மனிதர்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளலாம். ஆனால் மன்னன் கையாலாகாதவன் என்றறிந்தால் மக்கள் அவனை மதிக்க மாட்டார்கள். மதிப்போடும் ஒருவிதப் பயத்தோடும் கலந்த அன்புதான் பிரஜைகள் விஷயத்தில் நிரந்தரமாயிருக்கக் கூடியது. ஆகையால் வெளி வேஷத்துக்காகவாவது ஆண்மைக்குப் பொருந்திய காரியம் ஏதாவது செய்ய வேண்டும்.

தன் கூடாரத்தை விட்டு வெளியே வந்து தன்மெய்க்காப்பாளனை



அழைத்தான் ஓகடாய். மறுநாள் தான் வேட்டைக்குச் செல்லப் போவதாகவும், அதற்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தான்.

• •

மறுநாள் சூரியன் வானஉச்சியை அடைந்ததும் வேட்டைக்குக் கிளம்பினார்கள் ஓகடாயும் அவனுடைய பரிவாரத்தினரும் கிளம்பும் போது கூட ஓகடாயின் மனம் மந்திரி கூறிய அறிவுரைகளை ஆராய்ந்தவண்ணமிருந்தது.

நேரம் செல்லச் செல்ல மிருக வேட்டை அவன் இரத்தத்துக்கும் மிருக வெறியை ஊட்டியது. விலங்குகளைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று கொன்று மகிழ்வதில் அவனுக்கு அளாதி ஆனந்தம் ஏற்பட்டது.

பொழுது சாயும் வேளை. அவன் உடல் களைத்திருந்தாலும் உள்ளம் உற்சாகத்தால் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. மனம் திருப்தியடைந்திருந்த போதே கூடாரத்துக்குத் திரும்பி விடலாம் என்று நிச்சயித்துத் தன் ஆட்களுக்குக் கட்டளையிட வாயைத் திறந்தான். அப்போது அவன் கண்கள் சற்றுத் தூரத்தில் அடர்ந்து வளர்ந்த சில புதர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த ஓர் ஓநாயின் மீது பதிந்தன.

திரும்பிச் செல்லவேண்டுமென்ற எண்ணம் கணப்பொழுதில் மறைந்தது. "அதோ தெரியும், அந்த ஓநாயைத் துரத்திச் செல்லுங்கள். அதைப் பிடித்தே தீரவேண்டும்" என்று அரசன் கட்டளையிட்டான்.

ஒரு நொடியில் குதிரைகளின் குளம்புச் சத்தமும் குதிரையைச் செலுத்திய வீரர்களின் வெறி நிறைந்த குரலும் வானத்தைக் கிழித்தெறிந்து விடும்போல் ஒலித்தன.

தன்னை வேட்டையாட மனிதர்கள் பாய்வதைக் கண்ட அந்த ஓநாய் ஓட ஆரம்பித்தது. அதைப் பின் தொடர்வதையே நோக்கமாகக் கொண்ட வேட்டையாளர்கள் அது எங்கே அழைத்துச் செல்கிறதென்று பார்க்கவில்லை. இரண்டு சிறு மலைகளுக்கு நடுவே செல்லும் புதர் நிறைந்த பாதையின்மீது பாய்ந்து சென்று ஒரு திருப்பத்தில் ஓடி மாயமாய் மறைந்து விட்டது அது.

ஓகடாயும் அவன் வீரர்களும் திருப்பத்தைக் கடந்து சற்றுத்தூரம் சென்றார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஒரு நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். ஓநாய் எப்படித் தப்பியிருக்கும்?

"மகாராஜா! அதோ பாருங்கள்!" தன் வீரர்களில் ஒருவன் சுட்டிக்காட்டிய இடத்தை நோக்கினான் ஓகடாய். அவன் கண்ட காட்சி அவனுடைய உடலை என்னவோ செய்தது.

நதியின் நீரில் நின்றுகொண்டு நீரைக் கையால் எடுத்து இறைத்துக் கொண்டிருந்தான் ஒரு கிழவன். நதிக்கரையில் ஒரு மூட்டை நிறைய அழுக்குத் துணிகள்தான் காணப்பட்டன.

"மகாராஜா! இக்கிழவன் மக்கள் குடிப்பதற்காக உபயோகிக்கும் தெளிவான ஓடும் நீரைக் கலக்கி மாசுபடுத்துகிறான். அந்த மூட்டையிலிருக்கும் துணிகளையெல்லாம் துவைக்கப் போகிறானோ என்னவோ? மன்னரின் கட்டளையிருந்தால் இந்தப் பாதகனை இப்போதே கொன்று விடுகிறேன்."

இவ்வாறு ஒரு வீரன் கூறி முடித்ததும் சற்று வயதான மற்றொருவன் ஆரம்பித்தான். "ஆம், மகாராஜா! உங்கள் தந்தை ஏற்படுத்திய சட்டங்களில் இதுவும் ஒன்று. எனக்கு நன்றாகத் தெரியும். இந்தக் குற்றவாளியைத் தண்டிக்காவிட்டால் கட்டுப்பாடே போய் விடும்."

ஓகடாய் சிந்தித்தான். "யஸாக்கி"ல் ஓடும் நீரைக் கலக்குபவருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது அவன் அறிந்த விஷயமே. ஆனால் அவன் மனம் சஞ்சலப்பட்டது. மந்திரியின் அறிவுரைகளை அது இடிமுழக்கம்போல் நினைவூட்டியது. "காருண்யம், காருண்யம், காருண்யம் காட்டு." தீர்ப்பை ஒத்திப் போடும் நிமித்தம் அவன் கூறினான்: "இல்லை, வீரர்களே! இவ்வளவு நேரம் விடாமல் வேட்டையாடியதால் நம் எல்லோருடைய மனத்திலும் இரத்த வெறி குடிகொண்டிருக்கிறது. இப்போது நாம் தீர்ப்பளித்தால் அது நியாயமாய்த் தானிருக்குமென்று சொல்வதற்கில்லை. ஆதலால் இப்போது ஒன்றும் செய்ய வேண்டாம். இந்தக் கிழவனைக் கைது செய்து கொண்டு கூடாரத்துக்குத் திரும்புங்கள். நாளைக் காலையில் தீர்ப்பு வழங்கலாம்."

நான்கு வீரர்களாகச் சேர்ந்து கிழவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் நடுநடுங்கி விட்டான். தன்னைக் கைது செய்தவர்களை எதிர்த்துப் போராட முடியாமல் பலி பீடத்துக்கு இழுத்துச் செல்லப்படும் ஆடு போல் மருட்சியும் ஏக்கமும் நிறைந்த கண்களோடு மன்னனைப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

அன்று இரவு தன் கூடாரத்தில் அமர்ந்த வண்ணம் ஓகடாய் சிந்தனையில் ஆழ்ந்தான். மறு நாள் பொழுது விடிந்ததும் கிழவனுக்குத் தண்டனை விதிக்க வேண்டும். மரண தண்டனைதான். யஸாக்கில் காணப்பட்ட ஒரு சட்டத்தை மீறியதற்கு அக்கிழவனின் உயிரையே வைத்து ஈடு செய்யாவிட்டால் ஜனங்கள் மௌனமாக இருக்க மாட்டார்கள். ஆனால் ஓகடாயின் ஒவ்வொரு அங்கமும் அப்பயங்கரத் தண்டனையைச் சிந்தித்து நடுங்கியது. மனிதனாய்ப் பிறப்பது அரிது என்பார்கள். ஒரு நொடியில் ஒரு மனிதனுடைய உயிரைக் கிள்ளி எறிந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதை எண்ணியபோது அவனுடைய உயிரையே யாரோ பிழிந்து எறிவது போன்ற பிரமை ஏற்பட்டது. கிழவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். ஆனால் எப்படி? அவன் செய்த குற்றத்திலிருந்து அவனைக் காப்பது எப்படி?—அரசன் தீவிரச் சிந்தனையில் மூழ்கினான்.

அப்போது மந்திரி எலியூ சூ - ட்ஸாய் கூடாரத்துக்குள் நுழைந்தான். வயதிலும் அறிவிலும் முதிர்ந்த தன் மந்திரியை எழுந்து மரியாதையோடு வரவேற்று உட்காரச் செய்தான் ஓகடாய். மன்னனின் முகத்தைப் போல் மந்திரியின் முகமும் வாடியிருந்தது.

"விஷயத்தைக் கேள்விப்பட்டேன்" என்று எலியூ - சூ - ட்ஸாய் வேதனையோடு கூறினான்.

அரசன் மௌனம் சாதித்தான்.

"என்ன செய்யப் போகிறாய்?"

"தெரியவில்லை. ஓடும் நீரைக் கலக்கித் துணி துவைக்க யத்தனித்தது பெரும் குற்றம். மரண தண்டனை விதிப்பதில் எனக்கு என்னை வும் விருப்பமில்லைதான். ஆயினும் என்ன செய்ய முடியும்?"

"அவன் துணி துவைக்க யத்தனித்தா னென்று உனக்கு எப்படி அவ்வளவு நிச்சய மாய்த் தெரியும்?" என்றான் மந்திரி.

"வீரர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள். வேறு என்னவா யிருக்க முடியும்?"

"அவன் முகமதிய ஜாதியைச் சேர்ந்தவன். ஒரு வேளை அவனுடைய சமயக் கோட்பாடின் படி ஓடும் நீரில் சடங்குகள் செய்து கொண் டிருந்தானோ என்னவோ? அப்படியிருந்து நீ அவனைத் தண்டித்தால் முகமதிய ஜாதி யைச் சேர்ந்த மற்றவர்கள் நீ அவர்களு டைய வகுப்பை அவமானப்படுத்தி அநீதி வழங்கியதாய்க் கருதுவார்கள். அவர்களு டைய ஒத்துழைப்பு போய் விடும். அதனால் எப்படியாவது அந்தக் கிழவனைக் காப்பாற்றி விட வேண்டும். நீ என்ன சொல்கிறாய்?"

"நான் அவ்வளவு தூரம் ஆராய்ந்து பார்க்க வில்லை. அந்தக் கிழவன் என்னைப் பார்த்த பார்வை என் மனத்தை வாட்டு கிறது. மரண தண்டனை விதிக்க என் மனம் இடம் கொடுக்காது. அதனால் எப்படியாவது அவனைக் காப்பாற்றிவிட வேண்டும்."


மந்திரி முறுவலித்தான். "தெரியாமலா செங்கிஸ்கான் தன் ராஜ்யத்தை ஆளுவதற்கு உன்னையே தேர்ந்தெடுத்தான்? ஏதாவது முடிவுக்கு வந்திருக்கிறாயா?"

ஒகடாய் பதிலளித்தான். "இல்லை! மனம் ஒரே குழப்பமா யிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உபாயம்..."

"என் மனத்தில் ஒன்றும் தோன்றவில்லை. எதற்கும் நீ தீவிரமாய்ச் சிந்தித்துப் பார். நானும் என்னாலான வரையில் யோசித்துப் பார்க்கிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான் எலியூ சூ - ட்ஸாய்.

ஒகடாய் கால்களின் மீது முழங்கைகளை ஊன்றிக் கொண்டு கைகளால் முகத்தை மூடிக் கொண்டான். பலவிதமான எண்ணங் கள் அவன் மனத்தில் தோன்றி மறுகணம் மறைந்த வண்ணம் இருந்தன. கடைசியாக அவன் தன் கைகளை அகற்றி நிமிர்ந்தபோது அவன் முகத்தில் ஒருவித நிறைவு காணப் பட்டது. நம்பிக்கைக்குப் பாத்திரமான தன் மெய்க்காப்பாளனை அழைத்து அவனி டம் ஏதோ ரகசியமாய்க் கூறினான். "நான் இவ்வாறு கூறியதாக அக்கிழவனிடம் சொல். அந்த இரண்டாவது காரியத்தைச் செய்ய மறக்காதே" என்றான். பிறகு தன் படுக்கை யில் படுத்துக் கொண்டு நிம்மதியாய்ப் பெரு மூச்சு விட்டான். அடுத்த நிமிஷம் நித்திரா தேவியின் சரணத்தில் உலகத்தையே மறந்து விட்டான்.

மறு நாள் கிழவனின் மீது தீர்ப்பு வழங்கச் சபை கூடியது. எலியூ சூ - ட்ஸாய் மன்ன னைப் பரிதாபமாய்ப் பார்த்தான். கிழவனைக் காப்பாற்ற ஒரு உபாயமும் அவனால் கண்டு



திருவாங்கூர் சர்வகலாசாலை ரிடையர்ட் மானேஜர் திரு ஏ. நாராயண அய்யர் அவர்களுக்குச் சமீபத்தில் சஷ்டியப்த பூர்த்தி வெகு விமரிசையாக நடந்தேறியது.

பிடிக்க முடியவில்லை என்பதை ஒகடாய் உணர்ந்து கொண்டான்.

கிழவன்மீது வழக்கு தொடுக்கப்பட்டது.

"நீ எதற்காக ஓடும் நீரைக் கலக்கினாய்?" என்று கேட்டான் ஒகடாய்.

நடுங்கும் குரலுடன் மன்னனை உற்று நோக் கிய வண்ணம் பதிலளித்தான் கிழவன். "மன்னனே! நான் நீரைக் கலக்கியது உண் மைதான். ஆனால் நான் வேண்டுமென்று அவ் வாறு செய்யவில்லை. துணி மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டு நான் நதியோர மாய்ச் சென்று கொண்டிருந்த போது என் இடையில் நான் செருகி வைத்திருந்த பொன் நாணயம் கீழே விழுந்து உருண்டு சென்று நீருக்குள் அமுங்கி விட்டது. உலகில் எனக்கு இருந்த சொத்தெல்லாம் அந்த ஒரு நாணயம் தான். அதைத் தேட நான் நதிக்குள் இறங் கியபோதுதான் நீங்கள் குதிரையின்மீது வந்து என்னைக் கைது செய்து விட்டீர்கள். இப்போது நான் என் உடைமையை இழந் தது மட்டுமல்லாமல் என் உயிரையே இழக்க விருக்கிறேன்." கண்களிலே வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டான் கிழவன். துக்கம் அவன் தொண்டையை அடைத்தது.

ஒகடாய் முந்திய தினம் தன்னுடன் வேட் டைக்கு வந்த வீரர்கள் இருவரிடம் கூறினான்: "இவன் கூறுவது உண்மையா யிருந்தால் அந்தப் பொன் நாணயம் அந்த இடத்தில் தான் இருக்க வேண்டும். உடனே சென்று அவ்விடத்தைத் தேடுங்கள். நாணயம் அகப் பட்டால் எடுத்துக் கொண்டு வாருங்கள்."

வீரர்கள் என்ன செய்தி கொண்டு வருவார் களோ என்று சபை முழுவதும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தது. அவர்கள் கொண்டு வரும் செய்தி ஒரு மனிதனுக்கு வாழ்வளிக்கக் கூடும். அல்லது அவனைக் கத்தி முனைக்கு இரையாக்கவும் கூடும். நீதி யின் மூர்த்தியாய் அமர்ந்திருந்த ஒகடாய் மட்டும் முகத்தில் ஒருவித உணர்ச்சியையும் காட்டாமல் இருந்தான். ஆனால் அவன் நாடி

அடித்துக் கொண்ட வேகத்தை யார் கண்டார்கள்?

வீரர்கள் திரும்பி வந்தனர். தாங்கள் கண்டெடுத்த பொன் நாணயத்தை மன்னனிடம் கொடுத்தனர்.

ஒகடாய் அந்த நாணயத்தைக் கிழவனிடம் காண்பித்தான். உன் இடையிலிருந்து நழுவிய நாணயம் இதுதானா?

கிழவன் குனிந்து நாணயத்தைப் பார்த்தான். பின் நிமிர்ந்து மன்னவனைப் பார்த்தான். அவன் பார்வை விநோதமாயிருந்தது.

''ஆம், இதுதான்!''

''சபையோரே! இந்தக் கிழவன் தன் ஒரே உடைமையைத் தேடுவதற்காக ஓடும் நீரைக் கலக்கியிருக்கிறான். உங்கள் தீர்ப்பு என்ன?''

ஒகடாயின் குரல் கம்பீரமாய் வந்தது. தீர்ப்புக் கூற வேண்டியது யார்? அந்தக் கம்பீரக் குரலைக் கொண்ட தயாளமூர்த்தியா? அல்லது சபையோரா?

''மன்னரே தீர்ப்புக் கூற வேண்டும்.'' ஒரு மனிதனைப் போல் சபையோர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

ஒகடாய் நியாயம் வழங்கினான். ''சபையோர்களே! இக் கிழவன் புரிந்திருக்கும் குற்றம் சந்தர்ப்பங்களை ஆராய்ந்து பார்க்கா விட்டால் பயங்கரமாய்க் காட்சியளிக்கிறது. இந்த உலகில் அவனுக்கு இருந்த சொத்தாகிய ஒரே நாணயமும் நதியில் விழுந்து மறைந்து விட்டது. அப்போது அவனுடைய மனநிலை என்னவாயிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தன் கிழக்காலத்தில் உதவுமென்ற நம்பிக்கையுடன் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான். மன்னனாகிய என்னுடைய கடமை சட்டத்தை மீறியவர்களைத் தண்டிப்பது மட்டுமல்ல; பிரஜைகளின் சுகதுக்கங்களை ஆராய்ந்து கஷ்டத்திலிருந்து விடுவிப்பதுமாகும். இக் கிழவன் குடிநீரைக் கலக்கியிருக்கிறான். மனத்திலிருந்த துவேஷத்தின் காரணமாக இல்லை, தன் உடைமையைத் தேடும் பொருட்டு. ஒரு மனிதன் குற்றம் புரியும்போது அவன் எதற்காக அந்தக் குற்றத்தைப் புரிந்தானென்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், அக் குற்றத்தை அவன் மறுமுறை செய்யாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இக் கிழவனிடம் ஒரே ஒரு பொன் நாணயம்தான் இருந்தது. அதனால் அது காணமற்போனதும் சட்டத்தையும் மீறி அதைத் தேடத் தலைப்பட்டான். அவனிடம் மட்டும் இரண்டு நாணயங்கள் இருந்திருந்தால் ஒன்று தொலைந்ததன் காரணமாய்ச் சட்டத்தை மீறியிருக்க மாட்டானோ என்னவோ? அவனிடம் மட்டும் பத்து நாணயங்கள் இருந்திருந்தால் அவன் இவ்வளவு பெரிய குற்றத்தை ஒருநாளும் புரிந்திருக்க மாட்டான். அப்படிப் புரிந்தால் அவனைத் தண்டிப்பதில் நமக்குத் தயக்கமே இருக்காது. இந்த மாதிரியான சங்கடமான நிலை மறுமுறை ஏற்படாமலிருக்கத் தற்சமயம் இந்தக் கிழவனுக்குப் பத்துப்பொன் நாணயங்கள் கொடுத்து அனுப்பிவிட வேண்டும். அப்போது ஒரு நாணயம் விழுந்து விட்டது என்பதற்காக அவன் குடிநீரைக் கலக்க முடியாதல்லவா? அப்படி அவன் இனிமேல் கலக்கினால் அவனுக்கு மரணதண்டனை விதிக்க நான் தயங்கவே மாட்டேன்!''

* * *

தன் கூடாரத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்த மன்னனைப் பார்க்கச் சென்றான் எலியூ சூ-ட்ஸாய்.

''அந்தக் கிழவனை நீ எப்படிக் காப்பாற்றினாய்?'' என்று வினவினான்.

''நான் எங்கே காப்பாற்றினேன்? அவன் குற்றம் புரிந்திருந்தால்தானே அவனைத் தண்டிக்க முடியும்?'' ஒகடாய் மந்திரியைப் பார்த்தான். தான் கூறியதை எலியூ சூ-ட்ஸாய் நம்பவில்லை என்பதை அவன் முகத்திலிருந்த முறுவல் தெளிவாகக் காட்டியது.

திடீரென்று கூடாரத்துக்கு வெளியேயிருந்த கிழவன் மெய்க்காப்பாளனையும் மீறிக் கொண்டு வந்து ஒகடாயின் கால்களில் விழுந்தான். நீரைக் கலக்கிய அக்கிழவனின் நன்றி நிறைந்த கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் பூமியில் விழுந்தது.

''மன்னவரே! நீங்கள் என்றென்றும் நன்றாக வாழ வேண்டும். உங்கள் மெய்க்காப்பாளன் மட்டும் வந்து பொன் நாணயம் தொலைந்து விட்டது என்று சபையில் கூறும்படி சொல்லியிருக்காவிட்டால் இந்தக் கிழவன் இவ்வளவு நேரத்தில் உயிரற்ற சடலமாய்க் காட்சியளித்திருப்பான். என் உயிரை நீங்கள் காப்பாற்றினீர்கள். அதற்கு...''

ஒகடாய் கம்பீரமாகவும் சற்றுக் கோபமாகவும் இடைமறித்தான். ''உன்னைக் காப்பாற்றியது நானல்ல, நீ வணங்கும் உன் அல்லாவேதான். ஆனால் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள். ஒருமுறை உன்னைக் காப்பாற்றிய அல்லா உன்னை இரண்டாவது முறையும் காப்பாற்றுவார் என்று சொல்வதற்கு இல்லை. அதனால் நீ ஜாக்கிரதையாக இரு. இதைப்போன்ற குற்றத்தை மறுமுறையும் செய்யாதே!''

கிழவன் சென்றபின் எலியூ சூ-ட்ஸாய் மன்னனைப் பரிவோடு பார்த்தான். மன்னன் கிழவனை எவ்வாறு காப்பாற்றினான் என்பது அவனுக்கு விளங்கிவிட்டது. அவன் மனம் அப்போது எண்ணியது: ''நாணயத்தை நதியில் போடும்படி உன் மெய்க்காப்பாளனிடம் சொல்லி நீ ஒரு உயிரைக் காப்பாற்றினாய். இவ்வுலகில் சில சந்தர்ப்பங்களில் உண்மை சொல்வதனால் மற்றவர்களுக்கு விவரிக்க முடியாத கெடுதி ஏற்படுகிறது. அந்த நிலையில் உண்மையை மறைப்பதிலும் குற்றமில்லை. சில சந்தர்ப்பங்களில் பொய் சொல்வதனால் மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுகிறது. அப்போது பொய்யின் வினையும் புண்ணியமாகி விடுகிறது.''

மகிழ்ச்சி பொங்கக் கண்களில் நீர் வழிய அவன் ஒகடாயின் கைகளைப் பற்றிக் கொண்டான். ''மன்னவனே! உன்னுடைய காருண்யத்தின் காரணமாக நீ பெரும் புண்ணியத்தைப் பெற்றாய். வயோதிகன் நான் உன்னை மனமுவந்து வாழ்த்துகிறேன்!''

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs
Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.



உங்கள் கேசத்திற்கு உரிய
பராமரிப்பை அளிக்கிறீர்களா?
இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றுடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
Erasmic
PERFUMED
COCONUT
HAIR OIL
ROSE
பரிசுத்
தத்திற்கு
உத்தரவாதம்
புதுமை
மாறாமல்
நீடித்திருக்கும்
ECH. 3·50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon